# குடும்பவிளக்கில் பெண்களின் கடமைகளும் உரிமைகளும்

த. கவிதா
**03 MP 16**

எம்ஃபில் (தமிழ்) பட்டத்திற்குரிய பகுதித்
தேவைக்காக அளிக்கப்படும் ஆய்வேடு

அவினாசிலிங்கம் நிகர்நிலைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் – 641 043.

செப்டம்பர் – 2004

# சான்றிதழ்

**முனைவர் செ. சுமதி**

இணைப்பேராசிரியர் – தமிழ்த்துறை

அவினாசிலிங்கம் நிகர்நிலைப் பல்கலைக்கழகம்

கோயம்புத்தூர்–641 043.

**"குடும்ப விளக்கில் பெண்களின் கடமைகளும், உரிமைகளும்"** என்னும் தலைப்பில் எம்ஃபில் பட்டத்திற்காக **செல்வி. த. கவிதா** அவர்கள் செய்துள்ள இந்த ஆய்வு அவினாசிலிங்கம் நிகர்நிலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் அவரால் செய்யப்பட்டது என்றும், இவ்வாய்வின்மீது ஆய்வாளருக்கு வேறு எந்தப் பட்டமும் அளிக்கப்பெறவில்லை என்றும், நான் அறிந்தவரையில் இத்தலைப்பில் வேறு எவரும் ஆய்வு செய்யவில்லை என்றும் சான்றளிக்கின்றேன்.

ஆய்வு நெறியாளர் கையொப்பம்

இடம் : கோவை

நாள் : 10.9.04

துறைத்தலைவர் கையொப்பம்

# ஆய்வாளர் உறுதிமொழி

**செல்வி த. கவிதா**
ஆய்வாளர் – தமிழ்த்துறை
அவினாசிலிங்கம் நிகர்நிலைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்–641 043.

**" குடும்ப விளக்கில் பெண்களின் கடமைகளும் உரிமைகளும்"** என்னும் தலைப்பில் எம்ஃபில் பட்டத்திற்காகச் செய்யப்பட்டுள்ள இந்த ஆய்வு என் சொந்த முயற்சியில் உருவானதேயாகும். இதற்கு முன் எந்த ஆராய்ச்சிப் பட்டத்திற்கும் இந்த ஆய்வு அளிக்கப் பெறவில்லை என்றும் உறுதியளிக்கின்றேன்.

த. கவிதா
ஆய்வாளர் கையொப்பம்

10.9.04
தமிழ்த்துறைத்தலைவர்
அவினாசிலிங்கம் நிகர்நிலைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்–641 043.

ஆய்வு நெறியாளர் கையொப்பம்

# உள்ளுரை


| | | பக்க எண் |
|---|---|---|
| | நன்றியுரை | |
| | சுருக்கக்குறியீட்டு விளக்கம் | |
| | முன்னுரை | 1 – 8 |
| இயல் – 1 | பெண்களின் குடும்பக் கடமைகள் | 9 – 39 |
| இயல் – 2 | பெண்களின் சமுதாய உரிமைகள் | 40 – 61 |
| இயல் – 3 | கல்வி உரிமை | 62 – 80 |
| இயல் – 4 | பெண்களின் திருமண உரிமைகள் | 81 – 117 |
| | முடிவுரை | 118 – 119 |
| | துணைநூற்பட்டியல் | |

# நன்றியுரை

'குடும்ப விளக்கில் பெண்களின் கடமைகளும் உரிமைகளும்' என்ற இவ்வாய்வேடு அமையக் காரணமாக இருந்த வேந்தர் முனைவர். கே. குழந்தைவேல், எம்.ஏ., எம்.ஏ., பி.எச்.டி. அவர்களுக்கு என் உளம் கனிந்த நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

இவ்வாய்வேடு அமையக் காரணமாக இருந்த துணைவேந்தர் முனைவர். திருமதி. சந்திரமணி, எம்.எஸ்.சி., பி.எச்.டி அவர்களுக்கும் என் உளம் கனிந்த நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

இவ்வாய்வேடு அமையக் காரணமாக இருந்த பதிவாளர் முனைவர். திருமதி. சரோஜா பிரபாகரன், எம்.ஏ., டிப்.எட்., பி.எச்.டி. அவர்களுக்கும் என் உளம் கனிந்த நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

எமது கலைப்புல முதன்மையர் முனைவர். திருமதி. சியாமளா சிவானந்தம், எம்.ஏ., டிப்.எட்., பி.எச்.டி. அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி.

இவ்வாய்வேடு சிறப்பாக அமையப் பல வகைகளிலும் உதவி புரிந்த எம் தமிழ்த் துறைத் தலைவர் முனைவர். திருமதி. து. லலிதா, எம்.ஏ., டிப்.எட்., எம்ஃபில்., பி.எச்.டி. அவர்களுக்கும் மற்றும் தமிழ்த்துறை ஆசிரியர்களுக்கும் நான் நன்றி சொல்ல கடமைப்பாடுடையேன்.

இவ்வாய்வேட்டின் பொருட்டு என்னை ஆய்வு மாணவியாக ஏற்று எனக்கு ஊக்கம் கொடுத்து, உதவி பல செய்த தமிழ்த் துறை இணைப் பேராசிரியர் திருமதி. செ. சுமதி, எம்.ஏ., டிப்.எட்., பி.எச்.டி. அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றிகள் பலவற்றை உரித்தாக்க கடமைப்பாடுடையேன்.

இவ்வாய்வேட்டிற்கு உதவிய அவினாசிலிங்கம் **நிகர்நிலைப்** பல்கலைக் கழகத்தின் நூலகத்தார்க்கும் என் மனமார்ந்த நன்றி.

உரிய காலத்தில் கணிப்பொறி மூலம் தட்டச்சு செய்து கொடுத்த முனைவர். க. முருகேசன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## சுருக்கக் குறியீட்டு விளக்கங்கள்

| | | |
|---|---|---|
| கு.வி. | – | குடும்ப விளக்கு |
| பு.நூ. | – | புறநானூறு |
| த.இ. | – | தமிழ் இலக்கியம் |
| தி.கு. | – | திருக்குறள் |
| ப.மொ. | – | பழமொழி |
| உ.நூ. | – | உள்ளொளி நூல் |
| க.பு.கா. | – | கண்ணகி புரட்சிக் காப்பியம் |
| பா.க. | – | பாரதிதாசன் கவிதைகள் |
| பா.கு.ஏ. | – | பாரதிதாசன் குயில் ஏடு |
| பா.தே. | – | பாரதிதாசன் தேனமுது |
| க.தொ. | – | கலித்தொகை |
| ப.பா. | – | பரிபாடல் |
| கு.தொ. | – | குறுந்தொகை |
| ஐ.நூ. | – | ஐங்குறுநூறு |
| த.கா. | – | தமிழ்க் காதல் |
| க.ரா. | – | கம்பராமாயணம் |
| | | பாலகாண்டம் (மிதிலைக் காட்சிப் படலம்) |
| தொ.கா. | – | தொல்காப்பியம் |
| பொ.கா. | – | பொருளதிகாரம் (கற்பியல்) |

| | | |
|---|---|---|
| ந.பா. | – | நற்றிணை பாடல் |
| அ.பா. | – | அகநானூறு பாடல் |
| வ.மா.நா. | – | வடஆர்க்காடு மாவட்ட நாட்டுப்புறவியல் பாடல் |
| சி.க.வெ. | – | சிந்தனையாளர் கழக வெளியீடு |
| மு.ப. | – | முதல் பகுதி |
| இ.ப. | – | இரண்டாம் பகுதி |
| நா.தொ. | – | நான்காம் தொகுதி |
| ப. | – | பக்கம் |
| மேலது., | – | மேற்கூறிய ஆசிரியர் / மேற்கூறிய நூல் |

# முன்னுரை

# முன்னுரை

புரட்சிக் கவிஞரின் படைப்புகள் பலவற்றினின்றும் வேறுபட்டு அனைத்துக் கவிதைகளிலும் உயர்ந்த நிலையில் அமைந்திருப்பது 'குடும்ப விளக்கு'என்னும் இனிய பாடல் தொகுப்பாகும். இது தமிழ் இலக்கியத்தில் ஒரு புதிய வரை கோடாக அமைந்துள்ளது.

குடும்ப முன்னேற்றமே நாட்டு முன்னேற்றம் . முன்னேற்றம் உடைய குடும்பம் எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றிய எண்ணந்தான் இந்தச் சிறிய நூல். பழமையில் இருந்து புதுமைத் தத்துவத்தினை விளக்கி, எதிர்காலச் சமுதாயம் எவ்வாறு இருக்க வேண்டும் என்று கருதி இந்நூலினைப் படைத்துள்ளார் பாவேந்தர் பாரதிதாசன்.

குடும்ப விளக்கு ஒரு நடுத்தரக் குடும்பத்தின் பிரதிபலிப்பு ஆகும். வள்ளுவரின் வாழ்க்கை நெறியினைக் கூறுகின்ற சிறந்த ஓவியம். கற்பவரும், கேட்பவரும் அவ்வழியைப் பின்பற்ற வேண்டும் என்று அறிவுறுத்தும் காப்பியமாகும்.

'இல்லறம் என்னும் நல்லறம்' சிறந்து அமைய அறிவுறுத்தும் கருத்துக் கருவூலம். மணற்கேணியைத் தோண்டத் தோண்ட நீர் பெருகுதல் போல, இந்நூலைப் படிக்கப் படிக்கப் புத்துணர்வும், புத்தறிவும் பெருகும்.

இந்நூல் ஒரு வாழ்வியல் இலக்கியம், பெண்ணிலக்கியம், காதல் இலக்கியம், புரட்சி இலக்கியம், நான்கு தலைமுறை இலக்கியம், தமிழிலக்கியம், கவின் இலக்கியம், எனப் பல்வேறு சிறப்புக்களைக் கொண்டு திகழ்கிறது.

'குடும்பம் ஒரு கோயில்' என்ற சான்றோரின் வாக்குப்படி குடும்பங்கள் அமைந்தாலும், அது கோயிலாகத் திகழ்கின்றனவா ? என்பது கேள்விக் குறி. பழைய சமுதாயத்தில் பெண்களை அறியாமை, கல்வியறிவின்மை, ஆணாதிக்கம், மூடநம்பிக்கைகள் போன்றவை கயிறாக உருமாறி கட்டுண்டு வைத்தது. ஆனால்

இக்காலத்திலோ மரபில்லா வாழ்வு, தனிவுடமை, அவ நம்பிக்கைகள் போன்றவை பாறையாக மாறி பெண்களின் வாழ்வினைச் சிதைக்கின்றது.

புதுவைக் குயில் பாவேந்தரின் குடும்ப விளக்கு நடுத்தர வர்க்கத்தின் கண்ணாடி, சாதிக் கொடுமைகளும் அறியாமையும், அடிமைத் தனமும், கால் முளைத்து வந்து பெண் இனத்தை சிறை வைத்த காலத்தில், வானத்து விடி வெள்ளியாய், பெண்ணினத்தின் சங்க நாதமாய், இருண்ட வானில் கதிரவனாய் 'குடும்ப விளக்கு' என்ற காவிய நூல் எழுந்தது.

நவீன நோக்கில் காண்போமானால் ஒருபெண் தன் வேதஅறிவு, வேகம், விவேகம், வேற்றுமை பாராமை, வேள்வி என்ற ஐந்தின் கலவையாய் அமைந்து குடும்பம் என்ற திரியினை ஈர்த்து. மாண்பு என்னும் தீபத்தை ஒளிரச் செய்வதே குடும்ப விளக்கு என்னும் கவிகாவியமாகும்.

## ஆய்வு நோக்கம்

'கவி' என்பவர் இயற்கையில் நீர் பெருகிவரும் காட்டாறு போன்று தன் எண்ணங்களையும், கருத்துக்களையும், கவிதையாய், காவியமாய் படைக்கக் கூடிய ஆற்றல் வாய்ந்தவர். தமிழ் மக்களின் தவப்புதல்வனாகிய பாரதியின் தாசனாகிய பாவேந்தர் பாரதிதாசன், மனித உறவுகளையும், பண்பு நலன்களையும், தானும் அறிந்து மற்றவர் புரிந்து கொள்ளும்படியும் எடுத்துரைப்பதே தன் கடமையாகக் கொண்டுள்ளார். அவ்வகையில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தன் காவியமான குடும்ப விளக்கை படைத்து சமுதாய நலனுக்கு அடிக்கோலிட்டுக் காட்டியுள்ளார்.

இயற்கை, மனித நேயம், வீரம், அரசு, காதல் வாழ்க்கைநெறி போன்ற சிறந்த கருத்துக்களைத் தன் வாசகர்களிடம் பகிர்ந்து கொண்ட பாவேந்தர் குடும்பத்தின் அற்புதப் படப்பிடிப்பாக குடும்ப விளக்கு எனும் காவியத்தை உருவாக்கினார்.

ஒரு நாட்டின் நாகரிகம், ஆடம்பரமான, பகட்டான வாழ்க்கை முறையில் இல்லாமல், அன்பு வழியில் வாழ்கின்ற அமைதியான ஒரு குடும்ப வாழ்க்கையில் தான் அமைந்துள்ளது என்பதை தான் அறிந்துணர்ந்து, மற்றவர்களும், உணர்வதற்காக செந்தமிழ் மரபில் வேரூன்றி முழுமை பெற்ற பகுத்தறிவு குடும்பத்தின் வரைபடத்தை நம் அகக் கண்களில் காணும் படி படைத்த காவியம் தான் குடும்ப விளக்கு என்பதாகும்.

பாரதிதாசனின்குடும்ப விளக்கு, ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை ஒரு நாள் நிகழ்ச்சி (1942) விருந்தோம்பல் (1944) திருமணம் (1948) மக்கட்பேறு (மார்ச் 1950) முதியோர் காதல் (எப்ரல் 1950) போன்றவை ஆகும். குடும்ப விளக்கு என்னும் நாடக காவியத்தை பாவேந்தர் எழுதியதற்குக் காரணம் என்ன என்று ஆராய்ந்து பார்க்கும் பொழுது பல காரணங்கள் கூறப்படுகின்றன.

புரட்சிக் கவிஞரின் "தகுந்த குடும்பம் சர்வகலாசாலை" (1935) என்ற பாடலை 1948 ஆம் ஆண்டு புதுச்சேரி ஞாயிறு பதிப்பகத்தார் வெளியிட "முல்லைக்காடு" என்னும் தொகுப்பில் சேர்க்கப்பட்டு அனைவரின் பாராட்டைப் பெற்றார். இதனால் ஊக்கம் அடைந்த பாவேந்தரால் பார் போற்றும் காவியமான குடும்ப விளக்கு இயற்றப்பட்டது.

பெண்களின் நல்வாழ்வுக்கு மகாகவியின் வழியில் புரட்சியாரும் அவ்வப்போது தன் கட்டுரைகள், நாடகங்கள், பாடல்கள் மூலமாகப் பெண்கள் முன்னேற்றத்திற்கு வித்திட்டார். 'கொய்யாக் கனிகள்' அல்லது 'படித்த பெண்கள்', பெண் குடும்பம், தமிழ்ப் பெண்

மனப்பான்மை, குழந்தை இன்பம், நல்ல மனைவி போன்ற படைப்புகள் தொகுக்கப்பெற்றதே குடும்பவிளக்கு காவியமாம்.

தன் நண்பருக்காக திருமண விழா நினைவாக எழுதிய நூலே குடும்ப விளக்கு எனவும் கருத்து நிலவுகிறது. மேலும் பாவேந்தர் பாரதிதாசனின் மூத்த குமாரத்தி திருமதி. சரசுவதி கண்ணப்பன் குடும்பத்தை நடத்திய திறனை வியந்து தன் நண்பரிடம் கூற, நண்பரோ, கவிஞரை தன் மகளின் செயல் திறனைக் கொண்டு காவியம் படைக்குமாறு கூற, கவிஞரும் அதற்கொப்ப குடும்ப விளக்கு என்ற காவியத்தைப் படைத்தார். எனவே குடும்ப விளக்கின் முதற் பகுதி தோன்றுவதற்குக் காரணம் அவர் தம் புதல்வியாரே ஆவார்.

மேலும் பாவேந்தர் தான் எழுதிய உயர்ந்த கவிதை நூலான நல்ல குடும்பம் ஒரு சர்வகலாசாலையை பலரும் பாராட்டிட தன் நண்பர் பால சுப்ரமணியம், ஓர் நூலை வெளியிட விரும்பியதால், குடும்ப விளக்கு உருவாக்கப்பட்டது எனவும் கூறுவர். வேத நாயகரின் பாடல்களின் தாக்கம், புரட்சிக் கவிஞர் குடும்ப விளக்கு எழுதத் தூண்டுதலாக அமைந்தது. பாவேந்தர் திருவள்ளுவரை மதித்து அவரின் கொள்கைகளை போற்றியதால்,

"தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

என்ற குறள் படி வாழ்க்கை இலக்கியமாகப் பெண்கள் திகழ வேண்டும் என்று விரும்பிய குடும்ப விளக்கில் 'தங்கம்' என்ற பாத்திரத்தைப் படைத்தார்.

இயற்கையின் வண்ணங்களை பார்த்து ரசிக்க நம் கண்களுக்கு விழியின் ஒளிவிளக்கு தேவைப்படுவதைப் போன்று குடும்பம் என்ற கண்ணில் ஒளியாய் விளங்குவது பெண்ணே எனலாம். பெண் எனும் கண்ணொளி இல்லாமல் போனால் உலகமே (வீடு) இருண்டு உயிரற்ற உடலாய் மடிந்து கிடக்கும் என்பதே இந்நூலின் உயரிய தத்துவமாகும்.

முற்காலத்தில் ஆடவர் வீட்டிற்கு வெளியே கடமையாற்றினர். பெண்கள் வீட்டிற்குள் கடமையாற்றி அகல் விளக்காய் திகழ்ந்தனர். இக்காலத்திலோ, 'ஆணும் பெண்ணும் சரிநிகர்' என்ற புரட்சிக் கவியின் வாக்குப் படி இரு பாலரும் வேலைக்காக வெளியே சென்று பணியாற்றுகின்றனர். பணியாற்றுவதில் சிலர் குடும்பக் கடமையை சரிவர செய்ய முற்படுவதில்லை. இதற்குக் காரணம் வேலைப்பளு, சலிப்புத்தன்மை, வேற்றுமை பாவித்தல், போன்ற தன்மைகளே ஆகும். இவற்றை நீக்கும் அருமருந்தாக பாவேந்தரின் குடும்ப விளக்கு திகழ்கிறது.

ஒளி இல்லாத வீடு இருள்வது போல, குடும்பத் தலைவி இல்லாத வீடும் இருண்டு விடும். குடும்பத் தலைவன் பொருள் ஈட்டி வந்தாலும் அப்பொருளைப் பகுத்து, தொகுத்துச் சேர்த்து பாதுகாப்பவளே பெண்ணாவாள் ! தலைவன் பொருள் ஈட்டித் தரும் போது பெண்ணானவள் செலவழிக்க வேண்டியதற்குச் செலவழித்து சேர்க்க வேண்டியதற்குச் சேர்க்கும் திறமறிந்து ஈட்டிய பொருளை காத்து வகுக்க வேண்டும்.

இவ்வாறு வரவுக்கேற்ற செலவு செய்பவளாக திகழ பெண் விளக்காக இருத்தல் வேண்டும் என்கிறார். இக்கால பெண்களோ எடுத்ததுக்கு எல்லாம் கடனிலேயே காலம் கழிக்கின்றனர். பட்டும், படோபகாரமும், புறவழகுமே வாழ்க்கைய நிர்ணயிக்கிறது என்றெண்ணி தன் குடும்பத்தின் நல்வாழ்வினை இழக்கின்றனர் எனவே பெண்ணின் செயல்திறனை மெய்ப்பிக்க பாவேந்தரின் கருத்தினை ஒவ்வொரு பெண்ணும் கற்று, மனதில் பதிய வைத்து செயல்படுத்த முயலவாவது செய்தல் உத்தமமாகும்.

பெருகி வரும் மக்கள் தொகையால் அதிக இரைச்சல், கூச்சல்கள், குழப்பங்களிலேயே மக்கள் சூழல்கின்றனர். பால் காரனின் மணியொளியால் துயில் எழும் பெண்களும், மேற்கத்திய இசையில் அதிக இரைச்சல் ஒலியால் எழும் பெண்களும்

இருக்கின்றனர். ஆனால் இக்கால பெண்களுக்கு கவிஞரின் குடும்ப விளக்கு ஓர் உன்னத எடுத்துக் காட்டாக அமையவேண்டும் என்பதே ஆய்வின் நோக்கமாகும்.

**ஆய்வுச் சுருக்கம்**

வீட்டிற்கும், நாட்டிற்கும் கண்களாய் விளங்கும் பெண்கள் ஆற்ற வேண்டிய கடமைகளையும், பணிகளையும் பாவேந்தர் தங்கம் கதாபாத்திரத்தின் மூலம் சிறப்பாக எடுத்துரைத்துள்ளார்.

கணவனுக்கு உதவுதல், குடும்பத்தை நிர்வகித்தல், தொழில் முனைதல், தன் மருதாயை (மாமனார் – மாமியார்) கவனித்தல், பிள்ளைகளைப் பேணுதல், சமுதாயத் தொண்டு, போன்ற எல்லா கடமைகளையும் பிரதிபலனில்லாமல் குடும்ப நலம் என்ற உயரிய நோக்கில் செயல்படுவது உன்னதமான மனையாளின் மாண்பினை எடுத்தியம்புகிறது. ஆகவே பெண்மையின் இலக்கணத்தை நான்கு சுவற்றுக்குள் என்பதிலிருந்து உடைத்து எட்டுத் திக்குகள் என்று வரையறுக்கப்பட்டதே இக்குடும்ப விளக்கு என்னும் நூல் ஆகும்.

பாவேந்தர் தன் காவியத்தில் பெண் என்பதிற்கான வரைமுறையைக் கோடிட்டுக் காட்டியுள்ளார். அயராது உழைத்து வானத்து விண்மீன்கள் அனைத்தும் தன் கண்களைச் சிமிட்டும் நேரத்தில் துயில் கொண்டு தாமரை தன் மெல்லிய இதழ்களை விரித்து பகலவனை வந்தனை செய்யும் நேரத்தில் புத்தொளியுடன் எழுகின்றாள். செயற்கரிய செயல்களை கடமையாக மட்டுமல்லாமல் கலையாகச் செய்பவளே "பெண்ணாவாள்" என்றெடுத்து உரைக்கிறார். மேலும், குடும்ப விளக்கின் பொன்மகள்,

தன் கணவனைப் பாதுகாக்கும் இமையைப் போன்று விளங்குகிறாள். தன்னைப் போல் மற்றவுயிர்களைப் பேணுதல் பெண்மையின் பெருமையாகும். அதைப்போல தமிழரின் சிறந்த பண்பாட்டினுள் விளங்குவது விருந்தோம்பல் என்பதாகும். மற்றவர்க்கு ஈந்துவக்கும்

இன்பத்திற்கு இணையே கிடையாது. இவ்வின்பத்தை அறியாதவர்கள் தான் மற்றவருக்குக் கொடுக்காமல் இருப்பர் என்ற கருத்தை வள்ளுவர் கூறுகிறார்.

"பூவோடு சேர்ந்த நாரும் மணக்கும்" என்பதைப் போல கணவன் மனைவியிடையே உள்ளன்பு வேண்டும். நல்ல கணவனை அடைந்தவள் நற்பேரோடும், சீரோடும், சிறப்போடும் வாழ்வாள் என்பதில் ஐயமில்லை. அதைப் போன்றே நல்ல மனையாள் அமையப் பெற்றால் ஆணிற்கு வேறு வரம் வேண்டாம். திருமணப் பொருத்தத்தில் மனப்பொருத்தம் பெருமித வாழ்வினை நல்கும். அழகும், அன்பும், இளமையில் இன்பம் தருவதைப் போல முதுமையில் நிலையான அன்பும், பாசப்பிணைப்புமே குடும்பத்தில் மகிழ்வினைக் கொடுக்கும் என்பதைப் பாவேந்தர் தன் உயரிய கவித்துவத்தில் எடுத்தியும்பியுள்ளார்.

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு

கற்றனைத் தூறும் அறிவு"

என்று வள்ளுவ பெருந்தகையின் கூற்றுப்படி, பெண்ணினத்தின் சிறப்பினை மேலோங்கச் செய்வது கல்வியறிவுத் திறனே ஆகும். இந்நிலவுலகில் வந்து உதிக்கும் ஒவ்வொரு பெண் சிசுவுக்கும் நிறைவாய், சுதந்திரமாய், சுவாசிக்க கல்வி என்னும் சுவாசக் காற்று நிச்சயம் தேவைப்படுகிறது.

மேலும், குடும்ப நலத்தில் நாட்டைப் பேணுதல் என்ற நடைமுறை வாழ்வினை உள்ளங்கை நெல்லிக்கனியாய் பாமரரும் அறிந்து ஒழுகும் வண்ணம்,

"அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை யஃதும்

பிறன் பழிப்ப தில்லாயி னன்று"

என்ற குறளால் சமுதாயத்தில் சமத்துவத்தைக் காண விளைந்துள்ளார்.

# இயல் ஒன்று

# குடும்ப விளக்கில் பெண்களின் கடமைகள்

# இயல் ஒன்று

# குடும்ப விளக்கில் பெண்களின் கடமைகள்

## முன்னுரை

பாரதிதாசன் படைப்பான குடும்ப விளக்கு என்னும் நூல் பண்பாலும், பயனாலும் தனி இடத்தைப் பெற்றுள்ளது.

குடும்ப முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம் ஆகும். ஒரு நல்ல குடும்பத்தின் நல்லியல்புகள் சொல்லோவியமாக்கப் பெற்றுள்ளன.

குடும்பம், குடும்ப பொறுப்பு, கல்வி, காதல், மகிழ்ச்சி மிக்க பொழுது போக்கு, விருந்தோம்பல் முதலியன குடும்ப விளக்கில் உயிரோவியமாகின்றது. கவிஞரின் வாழ்க்கை அனுபவங்கள் மற்றும் மதிப்பீடுகள் போன்றவை நூலுக்கு வலிமை சேர்க்கின்றது.

குடும்பத் தலைவியர் காலையில் எழுந்தது முதல் இரவு உறக்கம் கொள்கின்ற வரையில் செய்யும் செயல்களையே குடும்ப விளக்கின் தலைவி மேற்கொள்கிறாள் என்பதை பாவேந்தர் பாரதிதாசன் சுட்டிக் காட்டுகிறார்.

## பெண்களின் குடும்பக் கடமைகள்

பெண்களின் குடும்பக் கடமைகளாவன வீட்டு வேலைகள் செய்தல், கணவனுக்குப் பணிவிடை செய்தல், குழந்தைகளுக்குத் தொண்டு செய்தல், குழந்தைகளைப் படிக்க வைத்தல், பாடம் சொல்லித் தருதல், குழந்தைகளின் மகிழ்ச்சியில் பங்கெடுத்துக் கொள்ளுதல், முதியோருக்குப் பணிவிடை செய்தல், விருந்தோம்பல் போன்ற செயல்கள் செவ்வனே சித்தரிக்கப்பட்டுள்ளன.

பெண்கள் தங்களின் குடும்பங்களை மட்டும் நினைத்துவிடாமல் சமுதாயத்திலும் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும் என்று ஆர்வம் கொள்கின்றனர். நாட்டுப் பற்று, மொழிப் பற்று போன்றவற்றிலும் அக்கறை செலுத்துகின்றனர்.

வீட்டு வேலைகளை முடித்த பிறகு ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கும் நேரங்களில் தையல் கற்றுக் கொள்ளுதல், மரச்சாமான்களைப் பழுது பார்த்தல், பண்டிகை நாட்களின் போது வீட்டிற்கு வெள்ளை அடித்தல், சிறுகதைகள் படித்தல், கலைகளில் ஆர்வம் செலுத்துதல், கவிதைகள் எழுதுதல், வானொலிகளைக் கேட்டு மகிழ்தல், தொலைக்காட்சிகளைக் கண்டு களித்தல் என்பன போன்ற பொழுது போக்கான வேலைகளையும் பெண்கள் செய்து வருகின்றனர் என்பதைக் குடும்ப விளக்கின் மூலம் ஆசிரியர் வலியுறுத்திக் கூறுகிறார்.

**வீட்டு வேலைகள்**

தினந்தோறும் பெண்கள் செய்யக் கூடிய வீட்டு வேலைகளான பால் கறத்தல், வீட்டினைப் பெருக்கிச் சுத்தம் செய்தல், வீட்டுச் சாமான்களை ஒழுங்குற அடுக்கி வைத்தல், போன்றவைகளைக் குடும்ப விளக்கு என்ற நூலில் பாவேந்தர் பாரதிதாசன் எடுத்துக் கூறுகிறார்.

ஓசை நயம் செறிந்தமைந்த வரிகளைக் குடும்ப விளக்குப் பாடல் மூலம் கூறும் வகையில், பாரதிதாசன்,

"பறந்தனள் பச்சைப் பசுங்கிளி மாடு
கறந்தனள்; வீட்டை நிறம் புரிந்தனள்;
செம்புத் தவலை செழும் பொன் ஆக்கினாள்;
பைம்புனல் தேக்கினாள்;பற்ற வைத்த
அடுப்பினில் விளைத்த அப்பம் அடுக்கிக்
குடிக்க இனிய கொத்து மல்லி நீர்
இறக்கிப்பாலொடு சர்க்கரை இட்டு
நிறக்க அன்பு நிறையப் பிசைந்த

முத்தான வாயால் முழுநிலா முகத்தாள்

அத்தான் என்றனள்"[1]

குடும்பத் தலைவியர் அன்றாடம் செய்யும் பல்வேறு செயல்களைத் தம் சொல்லாற்றலால் அவர் தம் சுறு சுறுப்பு விளங்கும் படி உவமை நயம் படைத்து அளித்துள்ளார்.

**மனைவி**

குடும்பம் மற்றும் அதன் உறவினர்களுக்குரிய மதிப்பை அளிக்கின்ற ஓர் உன்னதமான உறவு 'மனைவி' என்கிற குடும்ப விளக்கு ஆகும்.

அன்பு என்ற நீரைப் பாய்ச்சி அறம் வளர்த்து சிறந்து விளங்குகின்ற குடும்பப் பொறுப்பைக் காப்பவளே சிறந்த மனைவி ஆவாள். எனவே 'இல்லக்கிழத்தியை இல்லாள்' என்று தமிழ் இலக்கியமும், 'மனைக்கு விளக்காகிய வாணுதல்' என்று புறமும், 'மனைத்தக்க மாண்பினை உடையவள்' என்று குறளும், மனைவியின் சிறப்பினைப் பற்றிக் கூறுகின்றது.

'ஆறாத, இன்பக் கடலைப் போன்றும்', 'வற்றாத நதியினைப் போன்றும்' ஓயாது உழைக்கும் சக்தியாகத் திகழ்பவளே மனைத்தலைவி ஆவாள் என்று புரட்சிக்கவி பாரதியார் கூறுவதை பாவேந்தர் பாரதிதாசன் இங்கு நினைவுபடுத்துகிறார்.

பாரதிதாசன் மனைவியின் மாண்பினைப் பற்றிச் சொல்லும் வகையில்,

"உவந்து ஒருவன் வாழ்க்கை சரியாய்

நடத்த உதவுபவள் பெரும்பாலும்

மனைவியாவாள்" [2]

என்ற பாடலின் மூலம் மனைவி என்பவள் முன்னேற்றத்திற்கு ஊன்று கோலாகவும் அவனது இன்பத்தைப் பகிர்ந்து கொள்பவளாகவும், துன்பத்தின் போது ஆறுதலாகவும், அவனது

தவறுகளைத் திருத்துபவளாகவும், சில விஷயங்களில் விட்டுக் கொடுப்பவளாகவும் இருப்பதாக பாவேந்தர் பாரதிதாசன் கூறுகிறார்.

**மனைவியின் கடமை**

மனைவி என்பவள் கற்பு நெறி தவறாமல் தன்னையும், தன் கணவனையும், தன் குடும்பத்தையும் சிறந்த முறையில் நடத்துவதைத் தலையாய கடமையாகக் கொண்டவள்.

இதனை வள்ளுவர் குறளில்,

"தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகை சான்ற

சொற்காத்துச் சோர்விலாள் பெண்"[3]

என்று குறிப்பிடுகிறார்.

குடும்ப விளக்கில் மனைவியைப் பற்றிக் கணவன் எடுத்துக் கூறும் போது,

"நானடைந்த மனைவியோ என்றால்

எனக்கினியாள்! என்னிரண்டு கண்களே போல்வாள்;

நவையில்லாள்; நான் வாழத் தன்னுயிரும் நல்கும்

நாட்டத்தாள்; அவளாலே என் வாழ்க்கை காத்தேன்;

அவளாலே நல்லொழுக்கம் தவறாமை காத்தேன்;

அவளால் என் குடும்பம் மாசிலதாய்ச் சற்றும்

கவலையிலா தாயிற்று"[4]

என்ற பாடலில் பாரதிதாசன்,

குடும்பத் தலைவன் தன் கண்களுக்கு ஒப்பாகத் தான் அடைந்த மனைவியைக் கருதுகிறான். பொன்னை வெறுத்து புன்னகையே முகத்தில் அணிந்து தன் உயிரை பெரிதெனக் கருதாமல், எனக்காகவே வாழும் என் மனைவி என்றும், என் மனதிற்கு இனியவள் என்றும் குறிப்பிடுகின்றார்.

இத்தகைய நற்குணங்களை உடைய என் மனைவியால் என் குடும்பம் மாசற்றதாயும், மகிழ்வுடனும் சிறப்புற்று விளங்குகிறது என்றும் குறிப்பிடுகின்றார்.

ஓயாது சுழல்கின்ற உலகத்தில் விஞ்ஞானம் எல்லா செயல்களையும் எளிதாக்குகிறது. குடும்பப் பெண்கள் புதிய தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளால் பயனுற்று தம்மையும், இல்லத்தையும் மேம்படுத்துகிறார்கள்.

இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை

என்பது மேலோர் மேன்மொழி.

ஆவதும் பெண்ணால் அழிவதும் பெண்ணால்

என்பது அறிந்தோர் மெய்ம்மொழி.

நல்ல இல்லத்தரசிகள் தனக்காகவும், தன் வீட்டாருக்காகவும் பம்பரம் போல் சுழன்று வேலை செய்கின்றார்கள். அற்புதம் படைக்கின்ற பெண்டிரையே நன்மனைத்தலைவி என்று ஆசிரியர் புகழ்கின்றார். மேலும் நல்ல மனைவியை அடைந்தவர்கள் இந்த உலகத்தில் சிறந்து வாழ்ந்தவர்களாக இருப்பர் என்று கூறுகிறார்.

"மனைத்தக்க மாண்புடையாள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"[5]

என்ற குறள் மூலம், இல்லத்திற்கு வேண்டிய நற்பண்புகளையும், நற்செயல்களையும் பெற்று தன் கணவனுடைய வரவுக்குத் தகுந்தவாறு, வாழ்க்கை நடத்திச் செல்கின்றவளே சிறந்த மனைவி ஆவாள் என்ற வள்ளுவரின் கருத்தை இங்கு பாரதிதாசன் நினைவுபடுத்துகிறார்.

## கணவனுக்குப் பணிவிடை செய்தல்

பின்தூங்கி முன் எழுவாள் பெண் என்பது குடும்பத் தலைவி ஒருத்திக்கு மட்டுமே உரியதாகும்.

படித்த பெண் முதல் படிக்காத பெண்கள் வரை ஒவ்வொருவரும் கணவனுக்கு உறுதுணையாக இருப்பதில் பெண்களில் ஒருவருக்கொருவர் சளைத்தவர் அல்லர். உதாரணமாக,

ஏழை விவசாயக் குடும்பத்தில் ஏர் உழுவதிலிருந்து அறுவடை முடியும் வரையிலும் பெண்கள் பக்கத் துணையாக உள்ளனர். அதே போன்று படித்த பெண்கள் கணவரது தொழில் வளர்ச்சியில் பங்கேற்று பலவித ஆலோசனைகளில் பகிர்ந்து கொள்வதிலும், இலாபம் ஈட்டச் செய்வதிலும் பெரும் பங்கு வகிக்கின்றனர்.

"நிறக்க அன்பு நிறையப் பிசைந்த

முத்தான வாயால் முழுநிலா முகத்தாள்

அத்தான்"[6]

என்று அழைக்க மனம் நிறைந்த காதலுடன், முழு நிலவு போன்ற பொலிவினை உடையவள். தன் கணவனை அத்தான் என்று ஆசையுடன் அழைத்து தன் முழு மனதுடன் பணிவிடை செய்கிறாள் என்பதை குடும்ப விளக்கின் வாயிலாக பாரதிதாசன் எடுத்துரைக்கிறார்.

**மனைவியின் அன்பு**

கணவனின் அன்பே மனைவியின் இதயத்தில் மாசற்ற அன்பாக நிறைந்திருக்கின்றன. கணவன் செய்யும் ஒவ்வொரு செயலும் மனைவியின் மீதுள்ள தூய அன்பினை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும்.

**கணவன்** மனைவியிடையேயுள்ள 'சுமூகம்' என்ற உறவினால் மட்டுமே ஒரு குடும்பம் சிறந்த முறையில் அமையும் என்பதை ஆசிரியர் சுட்டிக்காட்டுகிறார்.

மனைவியும், கணவனும் தாங்கள் செய்யும் ஒவ்வொரு செயலும் இருவருக்கும் மனதில் ஒரு திருப்தி ஏற்படக் கூடிய வகையில் செய்யும் போது குடும்பம் ஒரு கோயிலாகக் காட்சியளிக்கின்றது.

"காய்கறி வாங்கும் போது கொண்டவர்க்கு எது

பிடிக்கும் என நினைத்து அதை வாங்கினாள்"[7]

இதன் மூலம் கணவனின் மீது மனைவி கொண்டுள்ள காதல் புலப்படுகிறது.

மனைவி தான் வாழ்ந்த வாழ்க்கையை முதுமையிலும் நினைத்துப் பார்ப்பதன் மூலம் அன்பு நெஞ்சம் வெளிப்படுகிறது. இதனை குடும்ப விளக்கில்,

"பொருளையும் பெரிதென் றெண்ணாள்

பூண் வேண்டாள்தனை மணந்தோன்

அருளையே உயிரென் றெண்ணும்"[8]

என்ற வரிகளின் மூலம், மனைவி என்பவள் பொன்னையும், பொருளையும் பெரிதாகக் கருதாமல், தன்னை மணந்தவனின் ஆசையையும், அன்பையும் உயிராகக் கருதி வாழ்ந்த தியாக நெஞ்சத்தைக் கவிஞர் படம் பிடித்துக் காட்டுகிறார்.

**தாயின் கடமை**

பத்து மாதம் ஆசையோடு எதிர்பார்த்திருந்து குழந்தையைப் பெற்றெடுத்து, அதனை பாலூட்டி, சீராட்டி, வளர்க்கும் பொழுது தாய்மார்கள் படுகின்ற இன்ப துன்பங்கள் இவ்வளவு என்று சொல்ல முடியாது.

குழந்தையைப் பெற்ற தாய் தன்னுடைய உயிரான குழந்தைகளை நல்வழிகளில் நடத்தி தரமான கல்வியை அளித்து, அவர்களைப் பாதுகாத்துஒரு நல்ல வாழ்க்கை அமைத்துக் கொடுப்பதன் மூலம் தாய் – பிள்ளையின் உயர்ந்த பாசம் விளங்குகிறது.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்

அன்னையை வழிபடுதல் உலக இயற்கை

திரு.வி.க. அவர்கள் தன் நூலான உள்ளொளி என்ற படைப்பில் அன்னையின் சிறப்பைப் போற்றியுள்ளார்.

இந்தியப் பெண்களால் நடத்தப்படும் ஆதரவில் மயிலாப்பூரில் திருமதி. ருக்மணி அருண்டேல் சொற்பொழிவு ஆற்றிய நிகழ்ச்சியில் நம் நாட்டுத் தாய்மார்களின் பெருமையை எடுத்துரைக்கும் வகையில்,

நமது நாட்டில் தாய்க்கும், குழந்தைக்கும் இருக்கின்ற பாசப் பிணைப்பே மிகவும் ஆபூர்வமானது. மேலும் தியாகமும், பொறுமையும், சகிப்புத் தன்மையும் நமது நாட்டுத் தாய்மார்களிடம் காணப்படுகின்ற உயர்ந்த தன்மை ஆகும். அவற்றைக் காப்பாற்றி முன்னேற்றம் அடையுங்கள் என்று கூறினார்.

**தாய்மையின் சிறப்பு**

பிறப்பாலும் எண்ணிக்கையாலும் ஆணுக்கு நிகராகத் திகழக் கூடியவள் பெண். ஆண்களின் வாழ்வில் மகளாகவும் உடன் பிறந்தவளாகவும் மனைவியாகவும், தாயாகவும் இணைந்து வாழ்பவளே பெண் ஆவாள்.

ஆணும் பெண்ணும் கணவன் மனைவியாய் இணைந்து வாழ்கின்ற வாழ்வில் கூடல் இன்பத்தைத் தவிர்த்து ஊடல் இன்பம் தலையாய இடத்தினைப் பெறுகிறது.

தமிழ் இலக்கிய இலக்கணங்களில் தலைவன், தலைவியை விட்டு நீங்கிப் பொருள் தேடும் பொருட்டுச் சென்று பிற பெண்டிருடன் உறவாடி பின் திரும்பி வரும் பொழுது தலைவி அவனுடன் ஊடல் கொள்ளுதல் என்பது மரபாகப் படைக்கப்பட்டு வந்த ஒன்றாகும். தொன்று தொட்டு இலக்கியங்களில் படைக்கப்பட்டு வந்த இந்த ஊடல் நிகழ்வில் பாவேந்தர் இரு மாற்றங்களைச் செய்துள்ளார்.

முதலாவதாக ஊடலுக்கான காரணத்தை மாற்றம் செய்யும் போது, தலைவன் சிந்தனையிலும், செயலிலும் நெறி தவறாதவனாக இருக்கிறான். இதன் மூலம் தலைவிக்கும் அவன் மீது ஐயம் ஏற்படவில்லை. இந்நிலையில் குழந்தையின் பால் கொண்ட விருப்பின் காரணமாக இருவருக்குள்ளும் சிறு ஊடல் நிகழ்வதாகவும் அது தீர்கின்ற நிலையில் தலைவன் தாய்மையின் மாண்பை உணர்த்துவதாகவும் படைத்துள்ளார்.

இரண்டாவதாக இது காறும் இலக்கியங்களில் தலைவி ஊடல் கொள்வதாகவும், அதனைக் கண்ட தலைவன் மனம் கலங்குவதாகவும், தலைவி முயன்று அவ்வூடலைத் தீர்ப்பதாகவும் படைக்கப்பட்டு வந்துள்ளன. இம்மரபிற்கு மாறாகத் தலைவன் ஊடல் கொள்கிறான். தலைவி மனம் கலங்குகிறாள். இறுதியில் தலைவன் தலைவியின் மாண்பினை உணர்ந்து ஊடல் தீர்ந்த உள்ளத்தினனாக உவகை எய்துகிறான் என்று ஆசிரியர் படைத்துள்ளார்.

குடும்ப விளக்கில் வேடப்பன் ஆசையுடன் தூங்குகின்ற குழந்தையை தூக்க முயல குழந்தை அஞ்சி அழுகிறது. தலைவி (நகைமுத்து) தூங்கும் குழந்தையை எழுப்பியதாக நொந்து கொள்ள தலைவன் சினம் கொண்டு வெளியேறுகிறான்.

"என் பெற்ற குழந்தைகாகத் துணைவரின் வெறுப்பை ஏற்றேன்

அன்பரைத் திருத்துவதற்கும் அன்புதான் தூண்டிற்றென்னை"[9]

என்று தலைவி உள்ளம் கலங்குகிறாள்.

அன்றிரவு குழந்தையை அணைத்துக் கொண்டு தலைவி உறங்கும் போது தலைவன் எழுந்தான். தாயும் குழந்தையும் இடைவெளியின்றி உறக்கம் கொள்ளும் நிலையைக் கண்டான். தாயின் உடல் குழந்தையின் சிறு மேனியை அழுத்தினால் குழந்தைக்கு ஊறு (தீங்கு) நேருமே என்று எண்ணி ஒரு மலரை எடுத்து அவள்மேல் தலைவன் போட அவள் எழவில்லை. குழந்தையை எழுப்பக் கருதி மலரில் ஒரு இதழை எடுத்துக் குழந்தை மீது போடுகிறான்.

"..... தாயின் கைதான்

மலரிதழ் தனைத் துடைத்து

மற்றும் இடம் போயிற்றே

தலைவனோ இதனைக் கண்டான்;

தாய்மையின் ஆற்றல் கண்டான்.

தலைவிக்கு மதிப்புச் செய்தான்

தாய்மைக்கு வணக்கம் செய்தான்"[10]

இங்கு ஊடல் ஏற்படவும், ஊடல் தீரவும், குழந்தையே காரணமாகித் தாய்மையின் தனிச் சிறப்பை உணர்த்துகிறது என்பதை ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

விழிப்பு மற்றும் உறக்க நிலைகளில் குழந்தைகளின் நலனைப் பேணும் போது, தாயைப் போல் சிறந்த முறையில் அக்கறை எடுத்துக் கொள்ள அவளுக்கு நிகர் அவள் மட்டும் தான் என்பதை,

"இலை என்பாள் குழந்தை காக்கும்

ஆற்றல் எட்டுணையும் என்றான்"[11]

என்ற வரிகளில் கவிஞர் உணரச் செய்கிறார். ஈன்று புறந்தருதலாகிய செயலின் வாயிலாகத் தாய் என்ற நிலையில் சமூகத்தில் முதன்மையான இடத்தைப் பெறுகிறாள். எனவே,

"ஈன்றுபுறந் தருதல் என்றலைக்கடனே

சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே"[12]

என்ற வரிகள் பெண்ணுக்கு மிகச் சிறந்த இடத்தை அளிக்கின்றது.

உலகைத் தழுவிக் கொள்ளும் உள்ளத்தைத் தாயுள்ளம்

என்றும்,

தாய்களைப் பற்றி முடிவில்லாமல் பேசலாம் என்றும் உருசிய எழுத்தாளர் மாக்சியம் கார்க்கி என்பவர் கூறுகிறார். இன்பத்தின் ஊற்றுக் கண்ணாகவும் மகிழ்ச்சியின் இருப்பிடமாகவும், மனைவியும் குழந்தையும் இருப்பது மனித வாழ்வின் இளமை நிலைக்கு முதற்காரணம் என்றும் பிசிராந்தையார் குறிப்பிடுகிறார்.

## குடும்பத்தினர் பெண் குழந்தையை விரும்பிப் போற்றுதல்

இன்றைய சமூகத்தில் பெண் குழந்தைகள் பிறந்துவிட்டால் கொல்லும் நிலை இருந்தது. அந்நிலையை ஒழிக்க வேண்டும் என்று எண்ணிய ஆசிரியர் நூலினுள் பெண் குழந்தையை விரும்பி ஏற்கும் பாத்திரங்களையே படைத்துள்ளார். தலைமக்கள் இரு குழந்தைகளில் முதல் குழந்தையைப் பெண் குழந்தையாகப் படைத்துள்ளார்.

குடும்ப விளக்கில் மலர்குழல் என்பவள் தன் மகள் கருவுற்ற நிலையில் தக்கார் ஒருவரிடம் என்ன குழந்தை பிறக்கும் ? என்று கேட்க அவரும்,

"..... பெண்ணே பிறந்து விட்டால்
எங்கே போடுவீர் என்று கேட்டார்
மண்ணில் பட்டால் மாசுபடும் என்று என்
கண்ணில் வைத்தே காப்பேன் ஐயா"[13]

என்று மலர்க்குழல் பதில் கூறுகிறாள். இதன்மூலம் முதுமை நிலையினை அடைந்த பெண்களும் பெண் குழந்தையை விரும்பி வரவேற்கும் சூழ்நிலையைச் சமூகத்தில் உருவாக்க எண்ணுகிறார் ஆசிரியர்.

## குழந்தைகளுக்குத் தமிழ்ப்பெயர் சூட்டுதல்

தமிழ் நாட்டில் பிறந்த குழந்தைகளுக்குத் தூய தமிழில் பெயர் வைத்தல் வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தும் வகையில் பிறந்த குழந்தைக்குத் தூய தமிழ்ச் சொல்லால் பெயர் சூட்டுகிறார்.

"தமிழரின் தமிழ்க்குழந்தை

தமிழ்ப் பெயர் பெறுதல் வேண்டும்

. . . . .

அமிழ்தென்று பெயர் அமைப்போம்"[14]

தமிழர்களாய்ப் பிறந்தவர்கள் வேற்று மொழியின் மேல் மோகம் கொண்டு பிறமொழிப் பெயர்களைத் தம் குழந்தைகளுக்குச் சூட்டுகிறார்கள். இதனைத் தவிர்த்தல் வேண்டும் இந்நிகழ்வைக் காணும் சான்றோர்கள் தடுத்துத் திருத்திட வேண்டும்.

**குழந்தைகளுக்குத் தொண்டு செய்தல்**

தாய்மார்கள் குழந்தைகளை வளர்த்து நல்ல நிலைக்கு கொண்டு வருகிறார்கள். குழந்தைகளைச் சிறந்த முறையில் வளர்ப்பதன் மூலம் பெண்கள் பாதிவயதினை இழந்து விடுகின்றனர். ஒவ்வொரு தாய்மார்களும் தாங்கள் வளர்த்த குழந்தைகளை மிகவும் செல்லமாகப் பல்வேறு பெயர் கொண்டு அழைப்பதன் மூலம் அவர்களின் பண்பும் பாசமும் விளங்குகிறது. இதுவே பண்டைய தமிழர்களின் உயரிய பண்பாக இருந்தது.

குடும்ப விளக்கில் தலைவி தன் குழந்தைகளை எழுப்பும் முறையை யாழினைக் கையில் ஏந்திக் கொண்டு பழச்சுவை பருகத் தேன் இசை பாட, குழந்தைகளின் காதில் வழியே ஒலிக்க எழுந்து வந்து தன் தாயின் எதிரில் உட்கார்ந்து அவள் பாடும் இன்னிசையைக் கேட்டு மகிழ்ந்தனர் என்று பாரதிதாசன் எடுத்துக் கூறுகிறார்.

**நன்னீராட்டல்**

குழந்தைகள் கண் விழித்தவுடன் அவர்களுக்கு வெந்நீர் வைத்து, பொன் போன்ற தன் குழந்தைகளுக்கு மாவு போன்ற மென்மையான சீகக்காய்த் தூளை, தலையில் தன்னுடைய செம்மையான கையினால் அள்ளித் தேய்த்துக் குளிப்பாட்டிய பின்பு உடலில் உள்ள நீர்த்துளிகளைத் துடைத்து, நெஞ்சில் பொங்கும் அன்பினை வெளிப்படுத்தி தன் செவ்விதழ் போன்ற வாயால் பாசமான முத்தம் கொடுத்தாள்.

"தூய பசும் பொன் துளிகளைப் போன்ற

சீகக் காய்த்தூள் செங்கையால் அள்ளிச்

சிட்டுக் காட்டியும் சிறுகதை சொல்லியும்

தொட்டுத் தேய்த்துத் துளிருடல் நடுங்காமல்

நின்ற திருக் கோலம் பொன்னின் சிலைகட்கு

நன்னீராட்டி நலஞ் செய்தாள்"[15]

என்பதில், குளிக்க வைக்கும் நிலையிலும் சின்னச்சின்ன கதைகள் சொல்லியும், விளையாட்டுக் காட்டியும், குளிக்க வைத்தல், அன்பாலும், ஆனந்ததத்தாலும், சிறந்த வடிவாய்த் திகழக் கூடிய தாய்க்குரிய பிரதிபலிப்பாகும்.

**பாடம் சொல்லிக் கொடுத்தல்**

தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்

என்பது பழமொழி. சிறு வயதில் பயிற்றுவிக்கும் பழக்க வழக்கங்கள் இறுதிவரை நிலைத்து நிற்கும் என்பது இதன் பொருள் ஆகும்.

பொறுமையும், தியாக உணர்வும் உடைய தாயால் தான் குழந்தைகளின் எதிர்கால வாழ்க்கையை நல்ல முறையில் உருவாக்க முடியும். பிள்ளைகளைப் படிக்க வைக்கும் பொறுப்பு தாய்க்குரிய கடமை ஆகும். குழந்தைகள் பிறந்த சில மாதங்களிலே பேசும் முதல் வார்த்தை 'அம்மா' என்ற சொல் ஆகும்.

ஏனென்றால் தந்தையை அறிமுகப்படுத்துவதில் இருந்து அனைத்து உறவுகளையும் சொல்லிக் கொடுப்பது தாயால் மட்டுமே முடியும்.

பிள்ளைகளைப் படிக்க வைக்கும் பொறுப்பு தாய்க்குரிய கடமையாக அமைகிறது. வீட்டு வேலைகள் எல்லாம் முடிந்த பின்பு தன் பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்ற ஆர்வத்துடன், பாடம் சொல்லத் தொடங்குகின்ற பாவையை பாரதிதாசன்,

"அவள் வாத்திச்சி;அறைவீடு கழகம்

தவழ்ந்தது சங்கத் தமிழ்ச் சுவை அள்ளி

விழுங்கினர் பிள்ளைகள்;வேளையாயிற்றே"[16]

என்று பாடம் சொல்லிக் கொடுக்கும் திறனில் குழந்தைகள் தமிழ்க் கல்வி மட்டுமே பயில்வதாக பாவேந்தர் எடுத்துக் காட்டுகின்றார்.

## குழந்தைகளுக்கு மொழிப்பற்றை ஊட்டுதல்

தமிழ் மொழியின் மீது ஈடுபாடு கொள்ளும் வகையில் தமிழ்ப் பற்றாளர்களாக குழந்தைகளை வளர்த்தல் தமிழர்களின் இன்றியமையாத கடமை ஆகும்.

நூலினுள் நீ யார் ? என்று கேட்டதற்கு நான் தம்பி என்று பதில் கூறிய தம்பியை,

"தமிழன் என்று நீ சாற்றடா தம்பி"[17]

என்று அக்காள் திருத்துகிறாள்.

நூலினுள் குழந்தைகளும், தலைவனும் (வேடப்பன்) சங்கத் தமிழும், திருக்குறளும், கற்கின்றனர். தமிழ் வளர்ச்சிக்கும், குழந்தைகளின் மன வளர்ச்சிக்கும் உரிய வழிமுறைகளில் இதுவும் ஒன்றாகும் என்பதைக் காப்பியத்தின் வழி நின்று புலப்படுத்துகிறார். ஆசிரியர் தலைவன் விரும்பிக் கேட்பதும், குழந்தைகளின் முன்பாகத் தலைவி பாடுவதும் தமிழ்ப்பாட்டே ஆகும்.

"சுவடிக்குள்ளே செந்தமிழ்த் தீனி உண்ணவிட்டு"[18]

என்றும்,

"திணைவரும் படி இல்லாருக்கும்

திரு நல்கும் தமிழ்ப் பாடென்றான்"[19]

என்று வரும் அடிகளில் மேற் கூறியவற்றை அறியலாம்.

தலைவி பாடிய தமிழ்ப்பாட்டின் மூலம் தமிழ் மொழியின் சுவையினை அறிந்த உள்ளம், மனம் கவரும் பொருளில் எல்லாம் தமிழையே காண்கிறது.

"குழந்தைகள் உடனிருந்தே கொஞ்சிஉண்ணுகின்றார்

பழந்தமிழ்ப் பொருளை அள்ளிப் படித்தவர் விழுங்குதல் போல"[20]

என்ற வரிகளில் தமிழ் இலக்கியத்தில் ஆழ்ந்து இன்பம் அனுபவிப்போர் போன்று விருப்புடன் உணவு உண்கின்றார் என்று கற்போர் உள்ளம் இன்புறுகின்ற வகையில் ஆசிரியர் அமைத்துள்ளார்.

"இளகிய பொன் உருக்கின் சிற்றுடல் இரு நீலக்கண்

ஒளிபடும் பவழச் செவ்வாய் ஒருபிடிக் கரும்பின் கைகால்

அளிதமிழ் உயிர் பெற்றங்கே அழகொடும் அசையும் பச்சைக்

கிளியினைக் காணப் பெற்றான் கிடைப்பருஞ் செல்வம் பெற்றான்"[21]

தான் பெற்ற குழந்தையை முதன் முதலில் கண்ட கதைத் தலைவன் அழகிய அக்குழந்தை தமிழ்மொழி உயிர்பெற்று வந்து தன்னை மகிழ்விப்பதைப் போன்று மகிழ்விப்பதாகக் கூறுகிறான்.

இங்ஙனம் உண்ணும் உணவில் குழந்தையின் உருவில் தமிழ்ச்சுவையைக் காணும் உள்ளம் தமிழ் மொழிக்கு ஆற்ற வேண்டிய கடமைகளாக ஆசிரியர் கருதுகிறார்.

**குழந்தைகளின் மகிழ்ச்சியில் பங்கு பெறுதல்**

தாய்மார்கள் குழந்தைகள் படிப்பில் அக்கறை காட்டுவது மட்டுமல்லாமல் கவிதை, கட்டுரை, விளையாட்டு போன்ற பல்வேறு போட்டிகளில் பங்கெடுக்கச் செய்வதும், சிறந்த இடத்தைப் பெற உதவுவதும், தாய் தந்தையரின் ஆதரவும், அரவணைப்பும், ஊக்கமும் கிடைப்பதால் மட்டுமே வெற்றி பெற முடிகிறது.

குழந்தைகள் போட்டிகளில் கலந்து கொண்டு பரிசு பெறும் பொழுது அந்தப் பரிசை தங்களுக்குக் கிடைத்த மிகப்பெரிய மகிழ்ச்சியாகக் கொள்கின்றனர். இது மட்டும் இல்லாமல் பள்ளியில் இருந்து வரும் தன் குழந்தைகளுக்கு சிற்றுணவு அளித்து, பல்வேறு இடங்களையும், அதன் முக்கியத்துவத்தையும் எழில் மிகுந்த காட்சிகளையும் சுட்டிக் காட்டி தாய் தந்தையர் அதைக் கண்டு மகிழ்ச்சி வெள்ளத்தில் இன்பம் பெறுகின்றனர்.

"கடற்கரை காட்சியை

அக்கரை செலும் உள்ளத்தை

அளாவிடக் கிடந்த வில்லும்

இக்கரை அலையின் ஆர்ப்பும்,

இவற்றிடைச் செவ்வானத்தின்

மிக்கொளி மிதக்கும் மேனி

விரிபுனற் புரட்சிப் பாட்டும்,

"ஒக்கவே வாழ்க மக்காள்"

என்பதோர் ஒலியும் கேட்டாள்"[22]

கடற்கரை அலையின் ஓசையையும் செவ்வானத்தின் நிலவொளியையும், கண்டு குழந்தைகள் மகிழ்ச்சி பெற்றனர். கணவனும் மனைவியும் அவர்களின் மகிழ்ச்சியில் பங்கு பெற்றனர். கணவனும் மனைவியும் அவர்களின் மகிழ்ச்சியில் பங்கு பெற்று இன்ப வெள்ளத்தில் மூழ்கினர் என்பதை ஆசிரியர் சுட்டிக் கூறுகிறார்.

புறாக் கூட்டில் உள்ள குஞ்சுக்கு அதன் தாயும் தந்தையும் வெளிச்சென்று இரையுண்டு மீண்ட பின் தாமுண்ட உணவை ஊட்டுதல் குழந்தையிடத்துப் பெற்றோர் செலுத்தும் பேரன்புக்கு எடுத்துக்காட்டாக விளங்குவதாய் பாரதிதாசன் சுட்டுகின்றார்.

**முதியோரைப் பேணுதல்**

குடும்பம் என்கிற அமைப்பில் திருமணம் என்ற பந்தத்தினால் அமையும் உறவுகளில் மாமியார் மருமகள் உறவு சுமூகமாக இருப்பதில்லை. ஒரு பெண் திருமணத்திற்கு முன் பெற்றோரிடம் காட்டும் அக்கறையை திருமணத்திற்குப் பின்பு காட்டமுடிவதில்லை. குடும்பங்களில் திருமணம் ஆன புதிதில், மருமகள், மாமியார் கொடுமை தாங்க இயலாமல் தனிக்குடித்தனம் போவதுண்டு. மாமியார் – மருமகள் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள இயலாததே முக்கியக் காரணம் ஆகும். பெற்றோர்களைப் பராமரிப்பதில் ஆண், பெண், பேதமின்றி அவர்களைப் பாதுகாப்பதே தலையாய கடமை ஆகும்.

**குடும்ப ஒற்றுமை**

குடும்ப உறுப்பினர்களிடையே அமைதி நிலவும் போதே மனித வாழ்வு நிறைவினை எய்துகிறது. அமைதியும், மன நிறைவும் கொண்ட குடும்ப உறுப்பினர்கள் மனித வளத்தை மேம்பாடு அடையச் செய்கின்றனர்.

இதனை உணர்ந்த பாரதிதாசன் சமூகத்தில் பரவலாகப் பூசல் நிகழ்த்தி வரும் மாமியார் மருமகள் உறவு முறையினரிடையே நிலவி வரும் பூசலை ஒழிக்கும் எண்ணத்துடன் மாமியார் மீது அன்பு மீதூறப் பெற்ற மருமகளைக் குடும்பவிளக்கில் படைத்துக் காட்டுகிறார்.

வீட்டு ஒற்றுமை நாட்டு ஒற்றுமைக்கு வழி என்று நினைத்தார். போராட்டத்திற்கு அடிப்படை கூட்டு வாழ்வே என்பதை உணர்ந்து கூட்டுக்குடும்பத்தின் முக்கியத்துவத்தை ஆசிரியர் உணர்த்துகிறார்.

கணவனைப் பெற்று பேணி வளர்த்த மாமியாருக்கு அன்புடன் கடமை ஆற்றுவதில் தான் தாயாகிறாள். அவர்கள் அன்பைத் தாம் பெற்று மகிழ்வதில் சேயாகிறாள், தாயும்

குழந்தையுமாய் மாறி மாறி அன்பைப் பொழியும் உள்ளமாக எண்ணுந்தோறும் அன்பினால் கசிந்துருகும் உள்ளமாகத் தலைவியின் உள்ளம் விளங்குகிறது.

"நனி இரங்கிடுதல் வேண்டும்
நானவர்க் கண் ணைப் போல்வேன்
எனதத்தான் தனையும் பெற்று
வாழ்ந்த நாள் எண்ணும் போதில்
தனிக் கடன் உடையேன் நானோர்
தவழ் பிள்ளை அவர்கட்கு"[23]

குடும்பப் பெண் என்பவள் வீட்டில் உள்ள பெரியவர்களுக்கு கண் போன்றவளாகவும், கணவனுடன் வாழ்ந்த நாட்களை எண்ணிப் பார்ப்பவளாகவும், தன் கடமையை நிறைவுற செய்தவளாகவும், தன் மாமனார் மாமியாருக்கு ஒருநல்ல மகளாக விளங்குவதாகவும் ஒரு குடும்பப் பெண்ணிற்கு வேண்டிய குண நலன்களை 'பாவேந்தர் பாரதிதாசன்' கூறியுள்ளார்.

**மாமனார் - மாமியாருக்கு பணிவிடை செய்தல்**

குடும்பப் பெண்கள் மாமனார் மாமியாருக்குப் பணிவிடை செய்வதில் அதிக கவனம் செலுத்துகின்றனர். அவர்கள் உடல் நலம் சரியில்லாத போது அருகிலேயே இருந்து பொறுப்புடனும், அக்கறையுடனும் கவனித்துக் கொள்கிறார்கள்.

இன்றைய சமுதாயத்தில் பெண்களுக்கு குடும்பப் பொறுப்புகள் அதிகமாக இருக்கின்ற நிலையிலும் கூட தன் மாமனார் – மாமியார் வாழ்க்கையில் சிறிதும் குறைவில்லாமல் கவனித்துக் கொள்கிறார்கள். அதற்குக் காரணம் அவர்கள் பெரியவர்களின் மீது வைத்துள்ள நன் மதிப்பே ஆகும்.

பொதுவாகவே பெண்கள் மென்மையான உள்ளம் கொண்டவர்கள். அவர்களுடைய உள்ளத்தில் அன்பு, பண்பு, பாசம், நேசம், இவற்றைத் தவிர வேறொன்றும் இல்லை.

இதனாலே பெரியவர்களிடம், கருணையுடனும், அக்கறையுடனும், சிறிதும் குறைவில்லாமல் நடந்து கொள்ள முடிகிறது.

பெரியவர்கள் உடல் நலம் குன்றி நோய்வாய்ப்படும் பொழுது, பெண்கள் காட்டும் அன்பின் மூலமாக வெகுவிரைவில் குணமடைந்துவிடுகிறார்கள். எந்த ஒரு சூழ்நிலையிலும் தன் வீட்டில் உள்ள பெரியவர்களைப் பற்றி ஒரு பொழுதும் அவள் குறை கூறுவதில்லை என்பதை, குடும்ப விளக்கு மூலம் ஆசிரியர்,

"ஒன்றிலும் கவலை கொள்ளேன்,

உன்னை நான் பெற்றதாலே!

அன்றியும் உன் பெண் டாட்டி

அறிவுக் கோர் திருவிளக்காம்"[24]

குடும்பத் தலைவியை திருவிளக்கு என்று முதன் முதலில் சிறப்பித்துக் கூறினார்.

**விருந்தோம்பல்**

விருந்தோம்பல் என்பது தமிழனின் தனிப்பண்பு ஆகும் என்று வள்ளுவர் வகுத்துக் கூறியுள்ளார். விருந்து கண்டு பெரிதுவக்கும் தன்மையினை மரபு வழியாகப் பெற்றவர்கள் தமிழர்கள் வழிவழியாக அப்பண்பு பின்பற்றப்படுதலைக் குடும்பவிளக்கினுள் காண முடிகிறது.

"நற்றமிழர் சேர்ந்த புகழ் ஞாலத்தில் என்னவெனில்

உற்றவிருந்தை உயிரென்று பெற்றுவத்தல்"[25]

என்ற வரிகளும்,

"இட்டுப்பார் உண்டவர்கள் இன்புற்றிருக்கையிலே

தொட்டுப்பார் உன்நெஞ்சைத் தோன்றுமின்பம்"[26]

என்ற வரிகளும் விருந்தினரை வரவேற்று வழிநடை களைப்பு நீக்கி, வந்தவர் மன மகிழ்வு கொள்ளும் வகையில் உண்பித்து அவர் முகம் மலர்ந்திருப்பதைக் காணும் போது நெஞ்சம் கொள்ளும் வகையில் உண்பித்து அவர் முகம் மலர்ந்திருப்பதைக் காணும் போது நெஞ்சம் கொள்ளும் அக மகிழ்வைப் புலப்படுத்துகின்றன.

**உபசரித்தல்**

விருந்து என்பது சமூகத்துடனான தொடர்பை வலுப்படுத்துகிறது. விருந்திற்குச் செல்லும் போதும், வந்தவர்களை உபசரிக்கும் போதும் ஏற்படும் சூழ்நிலை மாறுதலால் இரு குடும்பத்தாருக்கும் மனமகிழ்வும், புத்துணர்ச்சியும் ஏற்படுகின்றது.

குடும்ப விளக்கில், பாரதிதாசன் தம்முடைய உணவு வழக்கத்தை ஏற்றி உரைக்காமல், பொதுவான தமிழருடைய வழக்கத்தையே சிறப்பித்துக் கூறியுள்ளார் என்று ச.சு.இளங்கோ குறிப்பிட்டுள்ளார்.

விருந்தோம்பல் பகுதியில் தங்கத்தின் மாமியார் மூலமாக உணவு படைத்தலைப் பற்றிச் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார். விருந்தினர் வந்தவுடன் பெட்டி படுக்கைகளை வாங்கி வைத்தல், வெளியில் இருந்து வந்தவர்களுக்கு, கை, கால் தூய்மை செய்யத் தண்ணீர் அளித்தல், ஆடவர் அமர நாற்காலி போடுதல், மகளிர் அமரப் பாய் விரித்தல், படுப்பதற்கு, ஏற்ற வகையில் மெத்தை தலையனைகள் கொடுத்தல், பண்ணியம் முதலான சிற்றுண்டிகளை அளித்தல், வெற்றிலை பாக்கு அளித்தல், படிப்பதற்கு ஏற்ற இலக்கியங்கள் செய்தித்தாள்கள், அளித்தல், போன்றவற்றைச் செய்து முடித்து விட்டு சமைக்கச் சென்றாள். இன்றும் விருந்தினர்களைத் தமிழர் குடும்பங்களில் இவ்வாறு தான் உபசரிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மாமியார் மூலம் விருந்தோம்பும் முறை நடப்பியல் நிலையில் விவரிக்கப்படுகிறது. வீட்டில் உள்ள பல்வேறு உணவு வகைகளைக் கூறுகிறார். முத்துத் தயிர், புதுப்பால், சேலத்து இலந்த வடை, நாகர் கோயில் பலாச்சுளை, தேய்பிறை போன்ற கொத்தவரை

வற்றல், இற்றுத் தேன் சொட்டும் எலும்பிச்சை ஊறுகாய், பேர் உரைத்தால் நீர்சுரக்கும் நாரத்தை, மாரி போல் நல்லெண்ணெய் ஊற்றிய சுவை நிரம்பிய மாங்காய் ஊறுகாய் தேனில் நெய்யில் மூழ்குவித்த முக்கனி ஆகியவற்றை விருந்தினருக்கு அளிக்க வேண்டும்.

மோரைப் பெருக்கி உண்ணல் வேண்டும், கீரையும் தயிரும் இரவில் உண்ணக் கூடாது. நிறைய நெய்யை ஊற்ற வேண்டும் வாழை இலையின் அடி, உண்பார் வலப்புறத்தில் அமைய வேண்டும் தண்ணீரையும், வெந்நீரையும் தனித்தனியே செம்பில், வைக்க வேண்டும், விக்கும் போது நீர் அருந்தக் கூற வேண்டும். ஈமுன் கால் கூட சோற்று இலையில் இருக்க விடக்கூடாது. பாயாசத்திற்குத் தொன்னை வைத்து ஊற்ற வேண்டும். அவர் உண்டு எழுந்த பின் அவர் கைக்கு நீர் ஏந்தி நெய்ப்பசை அகற்ற உவர்க்கட்டி தர வேண்டும் என்று மாமியார் கூறும் முறை எக்காலத்திற்கும் ஏற்றதேயாகும் என்பதை பாரதிதாசன் எடுத்துக் காட்டுகிறார்.

இல்லற மேற்று குடும்பத்தை ஓம்புகின்ற பெண்ணிடத்திலுள்ள தன்னலமற்ற அருங்குணங்களில் ஒன்றாக அமைவது விருந்தோம்பல் ஆகும் என்பதை திரு.வி.கா.வினால் சிறப்பாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

வள்ளுவர் தமிழரின் சிறந்த பண்பான விருந்தோம்பலை சிறப்பித்துள்ளார். மற்றவர்க்கு ஈந்துவக்கும் இன்பத்திற்கு இணையே கிடையாது. இவ்வின்பத்தை அறியாதவர்கள், தான் பொருளை மற்றவர்க்குக் கொடுக்காமல் வைத்து இருப்பர் என்ற வள்ளுவரின் கருத்தை நினைவூட்டுகிறார். பாரதிதாசன்,

"வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவ ந்து பாழ்படுதல் இன்று" [27]

என்ற குறள் மூலம், தினந்தோறும் தன்னை நாடி வருகின்ற விருந்தினரைப் போற்றி உபசரிக்கின்ற பெண்களுடைய வாழ்க்கை நிலை, இக்காலத்தில் மட்டுமல்லாமல்

எக்காலத்திலும் துன்பம் உற்று நலிந்து போகாது இருப்பார்கள், என்றும் வள்ளுவரின் கருத்தை பாரதிதாசன் சுட்டிக் காட்டுகிறார்.

"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து

நோக்கக் குழையும் விருந்து"[28]

மலர்களிலே சிறந்தது அனிச்சம் பூ. என்ற மலர் ஆகும். எல்லா மலர்களையும் விட மென்மையானது. அம்மலரினை நுகர்ந்து மணத்தை ரசிக்கும் பொழுது வாடி அது தன்னுடைய நிலையினை இழந்து விடுகின்றன. அது போல தம் இல்லம் நோக்கி வந்த விருந்தினரை முகம் சுழித்துப் பேசினாலும், கடுமையாக நடந்து கொண்டாலும் வாடிவிடுவார்கள் என்றும், மலரினை இங்கு ஆசிரியர் சுட்டிக் காட்டுகிறார்.

**பொழுது போக்கான வேலைகள்**

பெண்கள் வீட்டு வேலைகள் செய்வதோடு மட்டும் அல்லாமல் பிற வேலைகளையும் கற்றுக் கொள்கின்றனர். ஓய்வு நேரங்களில் தையல் தைத்தல், மரச் சாமான்கள் பழுதடைந்தால் அவற்றைச் சரிபார்த்தல், சிறுகதைகள் படித்தல், கோலமிடுதல், விளக்கு பூஜை நடத்துதல், காபைப்பாட்டு, தொலைக்காட்சியில் ஆர்வம் செலுத்துதல், ஓவியம் வரைதல், போன்றவற்றிலும், ஆண்கள் நிர்வகிக்கும் தொழிற்சாலைகள், கடைகள் போன்றவற்றிலும பங்கெடுத்துக் கொள்வதாக ஆசிரியர் கூறுகிறார்.

**தையல்**

கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொள்; கவலை உனக்கில்லை ஒத்துக் கொள் என்ற பழமொழிக்கேற்ப ஒவ்வொரு பெண்களும் தங்களுடைய குடும்பங்களை நன்முறைக்குக் கொண்டு வரகைத்தொழிலில் ஈடுபடுகின்றனர்.

தையல் பயிற்சி பெண்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைகிறது. அதுவே ஒரு தொழிலாகவும் கருதப்படுகிறது. வீட்டு வேலைகள் முடிந்த பின்பு தங்களுடைய ஆடைகளைத் தைப்பதற்குச் சிறந்த வழிகோலாகவும் அமைகிறது. செய்யும் தொழிலைச் செவ்வனே செய்து முடித்தல் என்பது பெண்களுக்கே உரிய பாங்காகும்.

தையல் வேலை என்பது பொழுதினைப் போக்கிக் கொள்வதற்கும் அதே சமயத்தில் வருவாயைப் பெருக்கிக் கொள்வதற்கும் சிறந்த தொழிலாக அமைகிறது. படித்த பெண்கள் மற்றும் படிக்காதவர்கள் என்று பாகுபாடு இல்லாமல் அனைத்துப் பெண்களும் இத்தொழிலினைக் கற்றுக் கொள்கின்றனர் என்பதை குடும்ப விளக்கில் பாரதிதாசன்,

"ஆடிக் கொண்டிருந்த தையற்
 பொறியினை அசைக்கும் ஓர் கை ;
ஓடிக் கொண்டிருக்கும் தைத்த
 உடையினை வாங்கும் ஓர் கை ;
பாடிக் கொண்டே இருக்கும்
 பாவையின் தாமரை வாய்"[23]

என்று தையல் தைக்கும் செயலிலேயே குடும்பத்தலைவியின் முழுச் சித்திரத்தையும் கவிஞர் படைத்து விட்டார்.

**மரச் சாமான்கள் பழுது பார்த்தல்**

ஆண்கள் செய்யும் வேலைகளில் ஒன்றாகும். வேலை செய்து களைத்து வரும் நேரங்களில், பெண்கள் ஆண்களை எதிர்பார்க்காமல், வீட்டிலுள்ள மரச்சாமான்கள் பழுதடைந்ததை சரிகட்டிவிடுகின்றனர் என்பதை குடும்ப விளக்குத் தலைவியின் மூலம் பாரதிதாசன் எடுத்துக் காட்டுகிறார்.

## கலைகள்

கலைகளுள் ஓவியம், சிற்பம், நுண்கலை, இசைக்கலை போன்றவைகள், மிகச் சிறந்த கலைகளாகும். அவற்றுள் கோலமிடுதல், விளக்கேற்றல், காலைப்பாட்டு போன்றவற்றையும் ஒரு சிறந்த கலையாகக் கருதப்படுகிறது.

## ஓவியம்

ஓவியம் மிகச் சிறந்த கலை ஆகும். பலவகையான வண்ணங்களையும், வடிவங்களையும் கொண்டு வரையப்படுகிறது. தங்களுடைய கைவண்ணங்களையும், திறமைகளையும், கொண்டு ஒரு ஓவியம் மிகச் சிறப்பான முறையில் அமைகிறது.

சித்திரமும் கைப்பழக்கம்; செந்தமிழும் நாப்பழக்கம் என்பதற்கேற்ப நாம் செய்கின்ற ஒவ்வொரு தொழிலிலும், கவனமோ, அக்கறையோ மற்றும், பயிற்சியுமோ இல்லாவிட்டால் நாம் செய்கின்ற தொழில்கள் சரிவர அமைவதில்லை. அதே சமயத்தில் தன்னம்பிக்கையும் இழக்க நேரிடுகிறது.

செய்யும் தொழிலே தெய்வம் **என்பதற்கேற்ப** நாம் செய்கின்ற ஒவ்வொரு தொழில்களிலும் ஆர்வம் கொண்டும், அதனைத்தெய்வமாகக் கருதியும், முழுமனதுடன் ஈடுபடவேண்டும். அப்பொழுதுதான் வாழ்க்கையில் முன்னேற முடியும்.

குடும்ப விளக்கில் பெண் ஒருத்தி கணவனின் உருவத்தை ஓவியமாக வரைந்து இன்ப வெள்ளத்தில் மூழ்கி மனம் முழுவதும் நிறைந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்தி ஓர் உருவம் தீட்டினாள் என்பதை ஆசிரியர் இதன் மூலம் எடுத்துக் கூறுகிறார்.

**நுண்கலை**

பெண்கள் அனைவரும் நுண்கலைககளைக் கற்க வேண்டும். அவர்கள் பல்கலை செவ்வியராகத் திகழ வேண்டும் என்று பாரதிதாசன் குடும்ப விளக்கில்,

"கலையினிற் பெண்ணே இலகு – பல
கலையினிற் பெண்ணே இலகு
நிலையினில் உயர வேண்டும் – பெண்ணுலகு
மனைவிளக் காகுதல் வேண்டும்"[30]

என்று பாடிய சிறப்பினை வலியுறுத்துகிறார்.

**இசைக்கலை**

இசைக்கலையின் சிறப்பைக் குடும்ப விளக்கில் தலைவி மூலம் எடுத்துக் கூறுகிறார். அவள் யாழிசையிலும், தமிழிசையிலும், மிகத் திறமை வாய்ந்தவள் ஆவாள். அவள் காலையில் எழுந்தவுடன் யாழினை எடுத்து, 'வாழிய வையம் வாழிய' என்று பாவலர் தமிழில் பழச்சுவை சேர்த்தாள்.

"தீங்கிலாத் தமிழில் தேனிசை கலவைபோய்த்
தூங்கிய பிள்ளை தூங்கிய கணவனின்
காதின் வழியே கருத்தில் கலக்கவே"[31]

என்று பாடிய தமிழிசையை இங்கு பாரதிதாசன் நினைவூட்டுகிறார்.

**காலைப்பாட்டு**

பெண்களுக்கு இசைகளில் ஆர்வம் உள்ளதைக் காணமுடிகிறது. காலையில் எழுந்தவுடன் காலைக் கடமைகளை முடித்துவிட்டு நீராடிய பின்பு யாழினை மீட்டி இசையை நயத்துடன் பாடி முடித்த பிறகு வீட்டு வேலைகளைத் தொடங்குகின்றனர்.

பாரதிதாசன் குடும்ப விளக்கு மூலம், தலைவி, தன் கணவனையும், குழந்தைகளையும் எழுப்புவதற்காக யாழினைத் தன் திருக்கையால் எடுத்துப் பாவலர் தமிழில் பலவகைச் சுவைகளைச் சேர்த்து இசை பாடத் தொடங்கினாள்.

"இல்லத்தினிலே ஏகினாள் ஏகி

யாழின் உறையினை எடுத்தாள்;

இசையில் வாழிய வையம் வாழிய என்று

பாவலர் தமிழில் பழச்சுவை சேர்த்தாள்"[32]

வாழிய வையம் வாழ்கவே என்று பாடிய இசை தூங்கிக் கொண்டிருந்த கணவன் காதிலும் பிள்ளைகள் காதிலும் சென்று தேன் இசை பாய எதிரே வந்து அமர்ந்தனர்.

**கோலமிடுதல்**

இரவு நீங்கிப் பகல்தோன்றும் சூழலை பாரதிதாசன் இயற்கை வர்ணனை, வாழ்வியல் செயல்பாடு ஆகியவற்றுடன் கலந்து கவினுறப் படைத்துள்ளார்.

"இளங்கதிர் கிழக்கில் இன்னும் எழவில்லை,

இரவு போர்த்த இருள் நீங்கவில்லை

ஆயினும் கேள்வியால் அகலும் மடமை போல்,

நள்ளிரவு மெதுவாய் நடந்து கொண்டிருந்தது.

தொட்டி நீலத்தில் சுண்ணாம்பு கலந்த

கலப்பென இருள் தன் கட்டுக் குலைந்தது"[33]

மெல்ல மெல்ல மறைகின்ற இருள் பொழுதுபுலரும் நேரத்தில் விரைவாக நீங்கி விடும். இதனை பாவேந்தர் பாரதிதாசன் சுண்ணாம்புடன் நீலம் கலந்ததும் மாறுகின்ற நிறத்தின் மூலம் ஒப்பிட்டுக் கூறுகிறார்.

குடும்ப விளக்குத் தலைவி பொழுது மலர்ந்ததும், அவளுடைய ஊக்கமும், சுறுசுறுப்பும் இரு கைவீசி எழுந்தவுடன்,

"சேந்து நீர் செங்கை ஏந்தித் தெருக்கதவு

சார்ந்த தாழ் திறந்து தகடுபோற் குறடு

கூட்டி மெருகு தீட்டிக் கழுவி

அரிசிமாக் கோலம் இட்டாள்"[34]

என்ற பாடலில், தெருக் கதவின் தாழ்ப்பாழினைத் திறந்து செங்கையால் வாசல் பெருக்கி, மெருகு தீட்டி அரிசிமாவினால் கோலம் இடுகின்ற தலைவிக்குத் தனது ஒளியின் மூலம் பகலவன் பரிசில் நீட்டினான் என்பதை ஆசிரியர் இங்கு சுட்டிக்காட்டுகின்றார்.

**விளக்கேற்றுதல்**

ஒளி இல்லாத வீடு இருள்வது போலக் குடும்பத் தலைவி இல்லாத வீடும் இருண்டு விடும். எனவேதான் வீட்டிற்கு விளக்கேற்றி வைக்க ஒருத்தி எப்போது வருவாள் என்ற கேள்வி எழுகின்றது. அக்காலத்தில் விளக்கு பூஜை நடத்துவது வழக்கமாக இருந்தது. இப்பழக்கம் இக்காலத்திலும் உள்ளது. ஒரு நிகழ்ச்சி துவக்கி வைக்கும்போது இன்றும் விளக்கேற்றும் சடங்குமுறை பயன்படுத்தப்படுகின்றது. மங்கல நாட்களில் மகளிர் ஏற்றிய விளக்கு அணையாமல் பார்த்துக் கொள்வது முக்கியமாகக் கருதப்படுகின்றது. ஏனெனில் விளக்கின் சுடர் ஒளி இருளை நீக்கி, புத்துணர்வை அளிப்பதைப் போலப் பெண்களும் குடும்பத்தினரின் சங்கடங்களைத் தீர்க்கும் புத்தொளித்துளிகளாய் விளங்குகின்றனர்.

பண்டைக் காலத்திலிருந்து மாலை நேரத்தில் விளக்கு ஏற்றுவது மகளிரின் கடமையாக இருந்தது. மகளிர் வீட்டிற்குள் இருந்து கொண்டு தங்களின் கடமையை செய்கின்றனர். ஆனால் வீட்டிற்குள் ஒளியூட்டுதல் பெண்களின் கடமையாகும். கண்ணகியைச் சுடர்விளக்காகக் குறிப்பிட்ட கவிஞர் சுடர் கதிரவன் ; கதிரவன் போல் ஒளி

செய்யும் விளக்கு என்றும் புனைகிறார். கண்ணகி வெறும் விளக்கமாக மட்டும் அவருக்குத் தோன்றவில்லை. கலங்கரை விளக்காகவும் காட்சியளித்தாள்.

"மனக்கப்பல் துயர்கடலைத் தாண்டிச் சேர

மங்கை ஒரு கலங்கரை விளக்கமன்றோ"[35] என்றார்.

இதனை குடும்ப விளக்கில் பாரதிதாசன் உறி விளக்குகள் துடைத்தாள் என்றும்,

"கரும்பான இரவு தன்னை

திருவிளக் கேந்தி வந்து

தெருவினில் வரவேற்கின்றாள்

உரு விளக்கிட வீட்டுக்குள்

ஒளி விளக்கனைத்தும் ஏற்றி"[36]

என்றும் குடும்பத் தலைவி விளக்கேற்றும் காட்சியை விவரித்துள்ளார்.

தலைவி அதிகாலை எழுந்தவுடன்

"சின்ன மூக்குத் திருகொடு தொங்கும்

பொன்னாற் செய்த பொடி முத்தைப்போல்

துளி ஒளி விளக்கின் தூண்டு கோலைச்

செங்காந்தள் நிகர் மங்கை விரலால்

பெரிது செய்து விரிமலர்க் கையில் ஏந்தி"[37]

என்று விளக்குத் தூண்டும் செயலை பாவேந்தர் பாரதிதாசன் குடும்ப விளக்கு மூலம் உணர்த்துகிறார்.

## கவிதை

உள்ளத்துள் எழுவதே கவிதை ஆகும். அதனை உணர்வு பூர்வமாக எழுத்தால் வடிப்பதே சிறந்த காவியமாகும்

கடல், மலை, கிளி, மயில், புறா, அன்னம், நிலவு, தென்றல் போன்றவைகளைக் கொண்டு கவிதை எழுதுவதே சிறப்பாகும். இயற்கைக் காட்சிகளைக் கண்டு வர்ணனையோடு பொங்கும் மனதில் கவிதை முடிவதும் ஒரு சிறந்த செயல் ஆகும்.

குடும்ப விளக்குத் தலைவி தமிழ் முழங்க சுவை பருக கவிதை எழுதிய சிறப்பினை,

"உள்ளத்தில் கவிதை வைத்தே

உயிரினால் எழுப்பினாள் ; அவ்

வெள்ளத்தில் சுவையைக் கோத்தாள்

வீணையின் அளவிற் சாய்த்தாள்"[38]

என்று நெஞ்சம் குளிர்ந்திடத் துன்பம் பறந்திடப் பாய்ச்சினாள் என்பதை பாரதிதாசன் சுட்டிக் காட்டுகிறார்.

**தொழிற் கல்வி**

பிறப்பில் வேறுபாடு இல்லை. மனிதர் செய்கின்ற தொழிலில் தான் வேறுபாடு இருக்கிறது என்கிறார் திருவள்ளுவர்.

மகளிருக்குத் தொழிற் கல்வியைத் தருவதற்குச்சமுதாயம் மறுத்து விட்டது. ஆனால் நாடு விடுதலை பெற்ற பிறகு எல்லோரும் எத்தொழிலையும் கற்கலாம் என்ற உயரிய எண்ணம் தோன்றியது. தொழில்களை இது ஆண்களுக்குரியது என்றும், பெண்களுக்குரியது என்று பாகுபாடின்றி பிரித்தல் கூடாது. தொழிற் கல்வி இருபாலருக்கும் உரியது என்பது கவிஞரின் கருத்தாகும்.

**வணிகத் தொழில்**

பெண்கள் அக வாழ்வில் செம்மையாகச் செயலாற்றுவதுடன் மட்டுமல்லாமல் புற உலக நிகழ்வுகளோடும் தொடர்பு கொள்ள வேண்டும். வணிகத் தொழில் ஆண்களுக்குரியதாகும். கடையில் பலரும் பார்க்கின்ற நிலை இருக்க வேண்டயதாலும்

ஆடவருடன் பேச வேண்டியதாலும், கடையில் இருப்பவரை பிறர் ஏமாற்றக் கூடும் என்பதாலும் கடையில் பெண்கள் பணிபுரிவதற்குச் சமுதாயம் அனுமதிக்கவில்லை.

பாரதிதாசன் குடும்ப விளக்கில் இந்த நிலையை மாற்றி அமைத்தார். தலைவியை சிறிது நேரம் வணிகத் தொழிலை மேற்கொள்ளும் படி செய்கிறார்.

"இளகிய நெஞ்சத் தாளை இளகாத வெல்லாம் கேட்டார்
அளவாக இலாபம் ஏற்றி அடக்கத்தை எடுத்துரைப்பாள்
மிளகுக்கு விலையும் கூறி மேன்மையும் கூறிச் சற்றும்
புளுகாமல் புகன்ற வண்ணம் புடைத்துற்றிக் கொடுப்பாள்"[39]

எனக் குறிப்பிட்டுள்ளார்.

**முடிவுரை**

நம் நாட்டின் சமுதாய அமைப்பினைப் பொறுத்தவரை குடும்பத்தில் பெண்களே பெரும்பாலான பொறுப்புகளை ஏற்று நடத்துகின்றனர். ஆனால் பல இன்றியமையாத பணிகளை மேற்கொண்டுள்ள பெண்களுக்கு போதிய அறிவினையும், பயிற்சியையும் அளிக்காத தவறை நமது சமூகம் பல நூற்றாண்டுகளாகச் செய்து வந்திருக்கிறது. இதன் விளைவாக செயலூக்கம், அறிவு வளர்ச்சி, உடல் வலிவு முதலானவற்றில் நலிவுடைய சந்ததியினர் பெருமளவில் உருவாகியுள்ளனர். இந்தப் போக்கு மாற வேண்டுமானால் இல்லத்தின் தலைவியாக விளங்கும் பெண் அறிவு வளமும், பண்பு நலமும், பொருளாதார உரிமையும், சுய சிந்தனையும் சுயசெயல்பாடும் உடையவளாக விளங்க வேண்டும் என்பதற்காக பாரதிதாசன் குடும்ப விளக்கில் குடும்பத் தலைவியைத் தலைமைப் பாத்திரமாக படைத்து, பெண்களின் கடமைகள் என்ற கட்டுரையின் மூலம் அவர் கூறியுள்ள செய்திகளை நன்கு அறியலாம்.

## அடிக்குறிப்புக்கள்

1. பாரதிதாசன் குடும்ப விளக்கு ஒரு நாள் நிகழ்ச்சி, ப.2
2. பாரதிதாசன் கவிதைகள் ப.105
3. குறள் எண்.56
4. பாரதிதாசன் குடும்ப விளக்கு, முதியோர் காதல் ப.132
5. குறள் எண்.51
6. பாரதிதாசன் குடும்ப விளக்கு ஒரு நாள் நிகழ்ச்சி ப.2
7. பாரதிதாசன் குடும்ப விளக்கு ஒரு நாள் நிகழ்ச்சி ப.9
8. பாரதிதாசன் குடும்ப விளக்கு ஒரு நாள் நிகழ்ச்சி ப.10
9. பாரதிதாசன் குடும்ப விளக்கு மக்கட்பேறு ப.106
10. பாரதிதாசன் குடும்ப விளக்கு மக்கட்பேறு ப.108
11. பாரதிதாசன் குடும்ப விளக்கு மக்கட்பேறு ப.108
12. புறநானூறு பா.எண்.112 (அடி 1)
13. பாரதிதாசன் குடும்ப விளக்கு மக்கட்பேறு ப.95
14. பாரதிதாசன் குடும்ப விளக்கு மக்கட்பேறு ப.99
15. பாரதிதாசன் குடும்ப விளக்கு ஒருநாள் நிகழ்ச்சி ப.3
16. பாரதிதாசன் குடும்ப விளக்கு ஒருநாள் நிகழ்ச்சி ப.3
17. பாரதிதாசன் குடும்ப விளக்கு மக்கட்பேறு ப.118
18. பாரதிதாசன் குடும்ப விளக்கு ஒருநாள் நிகழ்ச்சி ப.18
19. பாரதிதாசன் குடும்ப விளக்கு ஒருநாள் நிகழ்ச்சி ப.13
20. பாரதிதாசன் குடும்ப விளக்கு ஒருநாள் நிகழ்ச்சி ப.13
21. பாரதிதாசன் குடும்ப விளக்கு மக்கட்பேறு ப.97
22. பாரதிதாசன் குடும்ப விளக்கு ஒருநாள் நிகழ்ச்சி ப.16

23. பாரதிதாசன் குடும்ப விளக்கு ஒருநாள் நிகழ்ச்சி ப.10

24. பாரதிதாசன் குடும்ப விளக்கு ஒருநாள் நிகழ்ச்சி ப.12

25. பாரதிதாசன் குடும்ப விளக்கு விருந்தோம்பல் ப.26

26. பாரதிதாசன் குடும்ப விளக்கு விருந்தோம்பல் ப.27

27. குறள் எண். 83

28. குறள் எண். 90

29. பாரதிதாசன் குடும்பவிளக்கு ஒருநாள் நிகழ்ச்சி ப.5

30. பாரதிதாசன் குடும்பவிளக்கு விருந்தோம்பல் ப.56

31. பாரதிதாசன் குடும்பவிளக்கு ஒருநாள் நிகழ்ச்சி ப.2

32. பாரதிதாசன் குடும்பவிளக்கு ஒருநாள் நிகழ்ச்சி ப.2

33. பாரதிதாசன் குடும்பவிளக்கு ஒருநாள் நிகழ்ச்சி ப.1

34. பாரதிதாசன் குடும்பவிளக்கு ஒருநாள் நிகழ்ச்சி ப.1

35. கண்ணகி புரட்சிக் காப்பியம் ப.110

36. பாரதிதாசன் குடும்பவிளக்கு ஒருநாள் நிகழ்ச்சி ப.17

37. பாரதிதாசன் குடும்பவிளக்கு ஒருநாள் நிகழ்ச்சி ப.1

38. பாரதிதாசன் குடும்பவிளக்கு ஒருநாள் நிகழ்ச்சி ப.14

39. பாரதிதாசன் குடும்பவிளக்கு மக்கட்பேறு ப.109

# இயல் இரண்டு

# பெண்களின் சமுதாய உரிமைகள்

# இயல் இரண்டு

# பெண்களின் சமுதாய உரிமைகள்

## முன்னுரை

பாவேந்தர் பாரதிதாசன் பெண்களின் உரிமைக்காக அரும்பாடுபட்டவர் ஆவார். ஆண்களைப் போலவே பெண்களுக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும்.வேலைவாய்ப்பு, சொத்துரிமை, ஊதியம் பெறும் உரிமை போன்ற உரிமைகளை பெண்களுக்குக் கொடுக்க வேண்டும். ஆண், பெண் என்ற பாகுபாடு இல்லாமல், 'அனைவரும் சரிநிகரானவர்கள்' என்கிற நிலையினை இச்சமுதாயத்தில் உருவாக்க வேண்டும், சாதி ; மத வேறுபாடுகளைக் களைய வேண்டும் என்று புரட்சிக்கவிஞர் கூறுகிறார்.

## பெண்களின் சமுதாய உரிமைகள்

பெண்களுக்குப் பல வகையில் உரிமைகள் அளிக்கப்படுகின்றன. அவையாவன,

1. சொத்துரிமை
2. சம உரிமை
3. வேலைவாய்ப்பு
4. தேர்தல் உரிமை
5. சுதந்திர உரிமை
6. வாழ்வியல் உரிமை

போன்ற உரிமைகளை பாரதிதாசன் எடுத்துக் காட்டியுள்ளார்.

## சொத்துரிமை

ஆண்களைப் போலவே பெண்களுக்கும் சொத்துரிமையும், வாரிசுரிமையும் கொடுக்கப்பட வேண்டும். அதே போன்று எந்தத் தொழிலையும் மேற்கொண்டு முன் நின்று நடத்துவதற்கு பெண்களுக்கும் வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று தன் குயில் ஏட்டில் பாரதிதாசன் எழுதியுள்ளார்.

சொத்துரிமை என்பது, தாய் வீட்டில் இருந்து கொண்டு வரும் சொத்தைக் குறிப்பதாகத்தான் அனைவரும் நினைப்பதுண்டு.

பாவேந்தர் பாரதிதாசன் குறிப்பிடும் சொத்துரிமை ஒருத்தி திருமணம் ஆகி வந்தவுடன் அவள் கணவனுடைய மறுபாதி என்று கருதப்படுகிறாள். எனவே அவளுக்கும் கணவனுடைய சொத்தில் பாதி உரிமை உண்டு என்ற கருத்தை பாவேந்தர் கூறி இருப்பது புதுமை உடையதாகும்.

பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்குக் காரணம் சொத்துரிமை இன்மையே ஆகும். இதனால் பெண்கள் பல துன்பங்களை மேற்கொள்கின்றனர்.

## பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள்

ஒரு இரும்புத்துண்டை இன்னொரு இரும்புத் துண்டுதான் வெட்டுகிறது. அதுபோல ஒரு பெண்ணுக்கு இன்னொரு பெண்தான் எதிரியாகிறாள். வீட்டிற்கு வரும் மருமகளுக்கு சொத்து இல்லாததன் காரணமாக மாமியார், நாத்திகள் தாம் பெருங்கொடுமை செய்கின்றனர். ஆனால் அவர்களும் முதலில் ஒரு வீட்டு மருமகள் தான் என்பதை மறந்து விடுகின்றனர்.

பெண்களுக்கு பொருளுரிமை இல்லாத காரணத்தால் உரிமை வாழ்வு நிலை ஏற்பட்டது. பெண்கள் உயிர் வாழ்வதற்கும் ஆண்களைச் சார்ந்து தான் வாழ வேண்டும் என்ற நிலை உருவாகியது.

திருமணம் ஆனபிறகு பெண்கள் கணவனைப் பிரிந்து தாய் வீட்டிற்குச் செல்வது இழிவாகக் கருதப்பட்டது.

புகுந்த வீட்டில் உள்ளவர்கள் அவர்களிடம் இரக்கம் காட்டாமல் கொடுமை செய்த போதிலும் அவள் உயிர் வாழ வேண்டும் என்பதற்காக கொடுமையை அனுபவித்தே தீர வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது. பெண்கள் துன்பம் அனுபவிப்பதற்குக் காரணம் பெண்ணடிமை நிலை என்று நினைக்காமல், தலைவிதிப்பயன் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைத் தவிர்த்து 'தந்தை பெரியார்' சொத்துரிமை வழங்கும் திட்டத்தை 'ஈ.வே.ரா சிந்தனைகள்' என்ற நாளேட்டில் எழுதினார்.

பாவேந்தர் பாரதிதாசன், குழந்தை வளர்ப்பு முறையின் போது ஆண், பெண் என்னும் பேதங்கள் இருப்பதால் ஆணாதிக்க உணர்வு தலைதூக்குகிறது. ஆண் பெண் என்ற அடிப்படையிலான இத்தகைய பேதம் ஒழிக்கப்பட்டு இருபால் குழந்தைகளுக்கும் 'சொத்துரிமை' வழங்கப்படவேண்டும் என்று குறிப்பிடுகிறார்.

பெண்களுக்கு கல்வி கற்கும் உரிமையும், பொருள் ஈட்டும் உரிமையும் தொடர்ந்து மறுக்கப்பட்டு வந்துள்ளது, பெண்களுக்காக பெற்றோரால் வழங்கப்படும் பொருட்கள் நகை முதலான சீதனம் அனைத்தும் அவள் தன் கணவனிடம் ஒப்படைத்து விடுகின்றாள்.

பெற்றோராலும், தமையன்மாராலும், கணவனாலும் பெண்ணின் செயல்பாடுகள் முடக்கப்படுகின்றன.

'பொருளாதாரம்' என்பது ஆண்களுக்கு உரியதான நிலை ஏற்படுகிறது. ஆணாதிக்கச் சமூகத்தில் தந்தை, தமையன், கணவன், மகன் ஆகியோரைச் சார்ந்து வாழும் சாருண்ணியாகப் பெண் வாழ்கிறாள் என்பதை பாரதிதாசன் குறிப்பிடுகிறார்.

பெண்கள் ஓயாத உழைப்பில் ஈடுபட்டு மன உளைச்சலுடன் வாழும் நிலையில் உடல் வளர்ச்சியிலும், மன வளர்ச்சியிலும், குன்றிப் போகின்றனர். இவர்களின் பாதிப்பு, உருவாக்கப்படுகின்ற குழந்தைகளின் வளர்ச்சி நிலையையும் பாதிக்கிறது.

ஆணுக்கும் பெண்ணுக்கும் நிகரான உரிமை வழங்குதல் என்பது பெற்றோரிடம் இருந்து தொடங்க வேண்டும். வளர்ப்பு முறையிலும், வாழ்க்கை முறையிலும், இரு பாலரையும் வேறுபாடு இல்லாதவராய் சமுதாயத்தில் உருவாக்கிடுதல் வேண்டும். அப்போது தான் தன்னம்பிக்கையும், செயலாற்றலும் உடைய சமுதாயம் உருவாகிறது. இதனால் பெண்ணிற்கு எதிராக நிகழ்த்தப் பெறும் கொடுமைகளும், கேடுகளும், நாளடைவில் வலுவிழந்து போகிறது.

இதனை உணர்ந்த பாரதிதாசன் குடும்ப விளக்கில், பெண்ணின் தந்தை வற்புறுத்தல் ஏதுமில்லாமல் தாமாக முன்வந்து,

"பெண்ணுக்குச் சொத்துரிமை

இல்லை என்பர் நான் தருவேன்"[1]

என்று மகிழ்வுடன் கூறுவதாகப் படைத்துள்ளார்.

**ஆண் - பெண் சம உரிமை**

குடும்ப அமைப்பில் ஆண் – பெண் ஆகிய இருபாலருக்கும் இரு வேறு பணிகள் நமது சமூகத்தில் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளன. அவையாவன,

1. பொருள் ஈட்டுவதும் புறச் செயல்பாடுகளும் ஆண்களுக்குரியது.
2. குடும்பத்தில் உள்ள பணிகளைச் செய்வதும், குழந்தைகளையும், குடும்ப உறுப்பினர்களையும் பேணுவது குடும்பத் தலைவியின் தலையாய கடமை ஆகும்.

குடும்ப நிர்வாகம் என்பது பெண்ணிடமே ஒப்படைக்கப்பட்ட அமைப்பு முறை ஆகும். பெண்கள் குடும்ப உறுப்பினர்களின் தேவையை உணர்ந்து செயலாற்றுபவளாகவும், அவர்களது வளர்ச்சியை பின் நின்று இயக்குபவளாகவும், குடும்பத் தலைவி விளங்குகிறாள்.

ஆண் – பெண் என்ற சமநிலை உணர்வு இருந்தவரையிலும் சமுதாயத்தில் சிக்கல் எழவில்லை. பின்பு இந்நிலை படிப்படியாக மாற ஆரம்பித்தது. ஆணின் கைக்குள் பொருளாதாரம் முழுவதும் முடங்கிப் போன நிலையில் பெண் ஆணைச் சார்ந்தவளாக இருக்கிறாள்.

ஆண் (ஆணை) கட்டளை இடுபவனாகவும், பெண் செயலாற்றக் கூடிய திறமை வாய்ந்தவளாகவும், மாறும் நிலையில் பெண்ணின் உழைப்புச் சுமை அதிகமாகியது. ஆணின் வாழ்க்கை நிலை வளமானது என்ற கருத்தை பாரதிதாசன் இங்கு சுட்டிக் காட்டுகிறார்.

பெண்களுக்கு உழைப்புச் சுமைகள் அதிமாகும் போது, உடல் வளர்ச்சியும், மன வளர்ச்சியும், அதன் தாக்கத்தால் குடும்ப வளர்ச்சியும் குன்றுகிறது.குடும்பங்களில் ஏற்பட்ட பாதிப்பு சமூக வளர்ச்சியைத் தாக்கிகிறது.முரண் குணம் உடையவர்கள் பலர் சமூகத்தில் உலவுவதற்கும் இது ஒரு காரணமாகவும் அமைகிறது.

குழந்தை நிலையில் இருந்து இருபாலருக்கும் வேற்றுமை உணர்வுகள் ஊட்டப்பட்டன. பகை உணர்வு கொண்ட இரு உயிர்களை வெளிவர இயலாத கூட்டிற்குள் அடைத்து வைத்துள்ள நிலையினைப் பல குடும்பங்களில் காண முடிகிறது.

இதற்கெல்லாம் தீர்வு காணப்படவேண்டும் என்றால், பெண்கள் சொத்துரிமை, கல்வி உரிமை முதலானவற்றைப் பெற வேண்டும். மேலும் ஆண்களுக்குரிய வீரம், வன்மை, கோபம், ஆளுந் திறம், போன்ற உரிமைகளையும் பெண்கள் பெற வேண்டும். அப்பொழுது இருபாலருக்கும் வேற்றுமைகள் ஏற்படாமல் 'சரிநிகரானவர்கள்' என்ற நிலை உருவாகி முன்னேற்றம் அடைய வாய்ப்பு ஏற்படுகிறது.

இதனை உணர்ந்த பாவேந்தர் பாரதிதாசன்,

"சமைப்பதும் வீட்டு வேலை சலுப்பின்றிச் செயலும் பெண்கள்
தமக்கே ஆம் என்று கூறல் சரியில்லை ஆடவர்கள்
நமக்கும் அப்பணிகள் ஏற்கும் என்றெண்ணும் நன்னாள் காண்போம்
சமைப்பது தாழ்வா ? இன்பம் சமைக்கின்றார் சமையல் செய்வார்"[2]

சமைப்பது மட்டுமே பெண்களுடைய வேலைகள் என்று முத்திரை குத்தி ஒதுக்கிவிடாமல், பெண்களுடைய வேலைகளில் ஆண்களும் பங்கெடுத்துக் கொள்ளக் கூடிய நன்னாளாகிய

பொன்னாள் எப்பொழுது வரும் என்ற செயலையும், செயலின் பயனையும் கூறி உழைப்பில் உயர்வு தாழ்வு பாராட்டலாகாது என்றும் எச்செயலும் இருபாலருக்கும் பொதுவானது என்ற கருத்தை பாரதிதாசன் உணர்த்துகிறார்.

**வேலைவாய்ப்பு**

பெண்கள் வேலைக்குச் சென்றால், ஆண்களின் கட்டுப்பாட்டினை மீறி விடுவார்கள் என்ற பயம் பிறந்த வீட்டிலும், புகுந்த வீட்டிலும் உள்ளது. இதனால் பெரும்பாலான பெண்கள் செலவு செய்து படித்து முன்னேறினாலும் அவர்களின் திறமைகள் பயனின்றி முடங்கிக் கிடக்கின்றன. இது தனிப்பட்ட குடும்பங்களுக்கு மட்டுமல்லாமல், அவர்களது குடும்பங்களுக்கும், இந்த தேசத்திற்கும் ஏற்படும் இழப்பாகக் கருதப்படுகிறது.

பெண்களுக்குத் தங்களுடைய சொந்தக் காலில் நிற்கும் திறமையிருந்தும் அவர்கள் பல நேரங்களில் ஆண்களை எதிர்பார்க்க வேண்டியதோடு, எதற்கும் உதவாதவர்கள் என்று குற்றம் சாட்டப்படுகிறார்கள். சமீப காலங்களில் பொருளாதார நெருக்கடிகளினால் பெண்கள் வேலைக்குப் போகும் சூழ்நிலை அதிகரித்துள்ளன. ஆயினும் பெண்களுக்கு ஏற்படும் சாதகங்களை விட பாதகங்கள் தான் அதிகம். அவர்கள் வெளியிலும் வீட்டிலும் வேலை பார்க்க வேண்டிருப்பதால் அவர்களின் சுமை இரட்டிப்பாகிறது.

இந்நிலையை அறிந்த பாவேந்தர் பாரதிதாசன் பெண்மையைக் காரணம் காட்டி வேலைவாய்ப்பிற்குத் தடை சொல்லும் முந்தைய நம்பிக்கைகள் அகற்றப்பட வேண்டும் பெண்களுக்கு குடும்ப நிர்வாகப் பொறுப்பு வேலைகள் மட்டுமே பொருத்தம் என்று

கருதாமல், உடல் வலிமை, நிர்வாகம் செய்யும் திறமை மற்றும் சமூக அந்தஸ்தினை வெளிப்படுத்தும் பணிகளில் வாய்ப்பளிக்க வேண்டும்.

பெண்களின் வேலைவாய்ப்பை அதிகப்படுத்தும் வகையில் அவர்களுக்கான தொழில் சார்ந்த கல்வி மற்றும் பிற பயிற்சி வாய்ப்புகளை அதிகப்படுத்துவதோடு வேலையிலிருந்தவாறே தகுதிகளைப் பெருக்கிக் கொள்ளும் வாய்ப்புகளும் உருவாக்கப்பட வேண்டும் என்று கூறுகிறார்.

**உழைக்கும் மகளிர் சமுதாயம்**

ஆயிரக்கணக்கான பெண் தொழிலாளர்கள் இரத்தம் சிந்தி உருவான சித்திரச் சோலைகளும், நெல்விளை நன்னிலமும், தாமரை பூத்த தடாகங்களும் ஆர்த்திடும் யந்திரக் கூட்டங்களும், இவ்வுலகம், போன்றவை உழைக்கும் பெண் தொழிலாளர்களுக்கே உரியதாகும். காடு களைந்து, நாடு கடந்து, வீடு கண்டு, மலை பிளந்து, அலைகடலில் செல்லக் கப்பல் செய்து, ஆடை நெய்து, இரும்பு, உருக்கி கோபுரம் முதல் குடை வரை செய்யும் இப்பெண் தொழிலாளர்கள் காணத்தகுந்ததெல்லாம் வறுமை. பூணத்தகுந்தது கொடுமை என்ற நிலையைச் சுட்டிக் காட்டுகிறார் பாரதிதாசன்.

கைத்திறனும் வாய்த்திறனும் கொண்டவர்கள் கண்மூடி மக்களது நிலத்தை எல்லாம் கொத்திக் கொண்டு ஏப்பம் இட்டு வந்ததால் கூலி மக்கள் அதிகரித்து, அவ்வேழை மக்கள் பொத்தல் கலமானார். ஆனால் கூலி மக்களின் உழைப்பில் உண்டு கொழுத்த முதலாளியரோ புனல் நிறைந்த தொட்டியைப் போன்று ஆனார். கூலி மக்களிடம் இருந்து பறித்து சேர்த்து வைத்த செல்வமெல்லாம் சிலரிடம் போய் ஏறிக் கொண்டு சதிராட்டம் ஆட,

தரித்திரரோ புழுப்போல் துடிக்கின்றனர். சிங்க ஏறுகள் போன்ற தொழிலாளர், முதலாளிகள் எனும் எலிகள் உண்ணதும் உழைப்பாலும், உதிரத்தையும் கொட்டுகின்ற பெண்களின் நிலையை ஆசிரியர் எடுத்துக் காட்டுகிறார்.

வறுமைக்கும் நோய்க்கும் ஆட்பட்ட நிலையிலும் உழைக்க வேண்டிய கட்டாயச் சூழ்நிலை பெண்களுக்கு இருப்பதைக் கண்டு 'கடின உழைப்புத் தொழிலாளி' என்பதன் வாயிலாகவும், அவர்களது உழைப்பைச் சுரண்டி வணிகமாக்கிச் செழிக்கும் பொருளாளியின் வணிக நோக்கை 'கடை விரித்தான் முதலாளி' என்ற தொடரின் வாயிலாகவும் புரட்சிக் கவிஞர் விளங்க வைக்கிறார்.

உழைத்தும், சலித்தும் உணவுக்கு போராடும் பெண்கள் பசியால் வாடியும், மெலிந்தும் காணும் அவலம் கவிஞரின் நெஞ்சில் ஆழப் பதிந்து விட்டது.கொடுமையிலும் கொடுமை இளமையில் வறுமை. இளமைக்குரிய இன்பங்களையும் நுகர வழியில்லாது, உடல் வலியும் இல்லாது மெலிந்த பெண்களைக் காணும் போதெல்லாம் அவர்களின் துன்பத்தை நீக்க வேண்டும் என்ற எண்ணம் புரட்சிக் கவிஞரின் நெஞ்சில் கனலாய்க் கொதித்துக் கொண்டிருந்தது. அத்தகைய கனல்கள் சமூகத்தின் தீமைகளைச் சுட்டெரிக்கும் என்பது கவிஞரின் நம்பிக்கை. அதனால் தான் குழந்தைப் பருவத்தில், தாயின் தாலாட்டு வாயிலாகக் குழந்தைகளின் நெஞ்சில் பசுமரத்தாணி போன்று அக்கனலை மூட்டி விடுகின்றனர்.

"நீதி தெரியும் என்பார் நீள் கரத்தில் வாளேந்திச்

சாதியென்று போராடும் தக்கைகளின் நெஞ்சில்

கனலேற்ற வந்த களிறே"[3] என்று ஆண் குழந்தையையும்,

"புண்ணிற் சரம் விடுக்கும் பொய்ம் மதத்தின் கூட்டத்தைக்

கண்ணிற் கனல் சிந்திக் கட்டழிக்க வந்தவளே"[4]

என்று பெண் குழந்தையையும் கனலின் வடிவங்களாக பாவேந்தர் பாரதிதாசன் காணுகின்றார்.

பெண்கள், தொழிலாளர், தாழ்த்தப்பட்ட மக்கள் என்ற சமுதாயத்தின் தலையாய முக்கூறுகளின் சமன்மை நிலையைப் பாரதிதாசன் பலவகைகளிலும் மற்ற எல்லாரையும் விடக் கடுமையாக வற்புறுத்தியுள்ளமை அவரது பாடல்களில் காணப்படுகின்றது.

மனித வாழ்வின் எல்லை சமன்மைச் சமுதாயம் ஆகும் என்பதில் பாரதிதாசன் உறுதியான கொள்கை உடையவர்,

"தாழ்வில்லை உயர்வில்லை

சமமென்ற நிலை வந்தால்

வாழ்வெல்லை காண்போமடி சகியே"[5]

என்ற பாடலின் மூலம், உயர்வு, தாழ்வு என்ற எல்லையை எய்த பெண்கள், தொழிலாளர் மற்றும் தாழ்த்தப்பட்ட மக்கள் ஆகியோர் உரிமை பெற வேண்டும். இவ்வுரிமை பெறுவதற்குத் தடையாக இருக்கும் அனைத்தையும், வேரோடு களைந்திட வேண்டும் சமுதாயத்தின் இம்மூன்று கூறுகளின் இழிநிலைக்குச் சமயமும், அச்சமயத்தை உருவாக்கிய உயர்சாதியினரும் தான் முழுக் காரணம் என்பது பாவேந்தர் பாரதிதாசனின் ஆழ்ந்த கருத்தாகும்.

**சுதந்திர உரிமை**

சுதந்திரம் இல்லாமல் ஒரு பெண் மகிழ்ச்சியாக இருக்க முடியாது. நல்லவளாகவும் இருக்க முடியாது. சில சமயங்களில் சில சூழ்நிலைகளில் நாம் மகிழ்ச்சியாகவும், சுதந்திரமாகவும் இருக்கிறோம் என்ற எண்ணம் மனதில் தோன்றுகிறது. ஆனால் வேறு சில சமயங்களில் நமது சமுதாயம், பெற்றோர்கள், மதக் கோட்பாடுகள் ஆகியவை நமது முழு சுதந்திரத்திற்கு முட்டுக்கட்டையாக இருக்கின்றன. உண்மையான சுதந்திரம் என்பது நம் உரிமைகளை நாமே அனுபவிப்பதாகும்.

உலகச் சமுதாயங்கள் அனைத்திலும் ஆண்களுக்கு நிகரான சுதந்திரத்தையும், சமத்துவத்தையும் பெண்கள் பெற வேண்டும். பெண்கள் தங்களது பன்முக ஆற்றல்களையும், திறமைகளையும் பல வழிகளிலும் வெளிப்படுத்தக் கூடிய வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தகுதிக்கேற்ப விரும்பும் தொழிலைத் தெரிவு செய்யும் சுதந்திரத்தையும், பொருளாதார சுதந்திரத்தையும் பெண்கள் பெற வேண்டும்.

பெண்களுக்கு சுதந்திரம் விரைந்து கொடுக்கப்பட வேண்டும் அல்லது போராட்டத்தில் ஊன்றி நின்று பெண்களே விடுதலையடைந்து உரிமை பெற வேண்டும் என்ற எண்ணம் பாரதிதாசனின் உயிர் மூச்சாய் இருந்தது. சுதந்திர நிலையை உண்டு பண்ணுவதற்கு வேறு வேலை தனக்கிருப்பதாக அவர் எண்ணவில்லை.

ஆண் பெண் சமத்துவத்தை தொல்காப்பியர் காலம் ஏற்றுக் கொள்ளவில்லை. அச்சமும், நாணும், மடனும்,முந்துறத்த நிச்சமும் பெண்பாற்குரிய என்ப என்ற களவியல் நூற்பாவை இதற்கு எடுத்துக்காட்டாகக் காட்டலாம்.

பெண்களுக்கு உணர்த்துவதிலும், ஆண்களுக்கு அறிவுறுத்துவதிலும் தனது பெண் விடுதலை பணியைச் செம்மையாகச் செய்கின்றார்.

காதல் சுதந்திரம் ஒன்றுக்காகப் பெண்ணினம் தமது உரிமை வேட்கையை எழுப்பினாலும் போதும், பிற எல்லா நிலையிலும் பெண்ணலம் சீரடைந்து விடும் என்ற கருத்திற்காகவே பாரதிதாசன் பெரிதும் பாடுபட்டார்.

**தேர்தல் உரிமை**

அரசாங்கத்தின் நிதி பற்றாக்குறைக்குத் தேர்தல் முறை முக்கியக் காரணமாகிறது. நாட்டின் முன்னேற்றத்திற்கு உதவும் வகையில் பெண்களுக்கு தேர்தல் உரிமை அளிக்கப்பட வேண்டும். அவர்களுக்கு ஏற்ற முறையில் 'தேர்தல் உரிமை' மாற்றி அமைக்கப்பட வேண்டும். அதன்படி பெண் வேட்பாளர்கள் அனைவரும் வானொலி, தொலைக்காட்சி, ஆகிய தொலைத்தொடர்பு சாதனங்களில் மூலமாக மட்டுமே தங்களது தேர்தல் அறிக்கைகள் வெளியிடவேண்டும்.

பெண் வேட்பாளர் அனைவருக்கும் சமஉரிமையும் சம நீதியும் வழங்கப்படுதல் வேண்டும். தேர்தலில் போட்டியிடும் பெண்கள் குற்றம் ஏதும் புரியாதவராகவும் குறிப்பிட்ட அளவிற்குக் கல்வித் தகுதியினைப் பெற்றவராகவும் இருக்க வேண்டும். இவற்றை எல்லாம் கண்காணிக்கத் தகுதியும் திறமையும் உடைய பலதுறை அறிஞர்களும், அவர்களுக்குப் போதுமான அதிகாரமும் வழங்க வேண்டும் என்பதை ஆசிரியர் வலியுறுத்திக் கூறுகிறார்.

**பெண்ணுரிமை (வாழ்வியல் உரிமை)**

பாரதிதாசனுடைய காப்பியங்களில் பாதியிடத்திற்கு மேல் பெண்ணுரிமை இடம் பெற்றுள்ளதாக மு.கோவிந்த சாமியும், அப்பெண்கள் ஆண்களை விடப் பலவகையிலும் சிறப்புற அமைக்கப்பட்டுள்ளனர் என்று தெ.பொ. மீனாட்சி சுந்தரனாரும் கூறியுள்ளார்.

'பெண்ணிற் பெருந்தக்க யாவுள' என்ற வள்ளுவர் நெறியில் பெண்மைக்குப் பெருமையும், தாய்மைக்குச் சிறப்பும் தந்த தமிழகத்தில் வேற்றுப் பண்பாடு விரவிய காலத்தில் பெண்களின் நிலை குன்றி, படிப்பின்றி அடுப்பூதும் நிலைக்குத் தாழ்வுறத் தொடங்கியது. வாழ்க்கைத் துணையாக இருப்பவள் குடும்பத் தலைவி, எனும் நிலை மாறி ஆடவர்தம் போகப் பொருளாகவும், மகப்பேற்று இயந்திரமாகவும் எண்ணும் அளவிற்கு அவர்கள் நிலை குலைவுற்று அடிமை போலாயினர். உலகில் நிலவிய பல்வேறு அடிமைத் தளங்களை எதிர்த்து முறியடிக்கும் ஆற்றலோடு தோன்றிய விடுதலை – வேட்கை, புரட்சி உணர்வு, போன்றவை பெண்ணுலகின் எழுச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் வலிகோலியது.

தந்தை பெரியார், பெண்ணுரிமைக்கு எழுத்தியக்கம் நடத்திக் கொண்டிருந்த காலகட்டத்தில் செவிலியக்கத்தை உருவாக்கினார். **1929–இல்** செங்கல்பட்டில் நடத்தப்பட்ட முதல் சுய மரியாதை மாநாட்டில் பெண்ணுரிமை நலம் பேணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

தமிழ் நாட்டில் பெண்ணுரிமைக்கிளர்ச்சி உருவாக வேண்டும், பெண்ணுரிமைக்கு, ஆண்கள் போராடுவது தவறு என்றும், பெண்களே தங்களது உரிமைகளைப் போராடிப் பெற முன்வர வேண்டும் என்றும் கருதினார்.

"பெண் ஏன் அடிமையானாள்?" என்னும் நூலில் 'கற்பு', 'வள்ளுவரும் கற்பும்', 'காதல்', 'கல்யாண விடுதலை', 'மறுமணம் தவறல்ல', 'விபச்சாரம்', 'விதவைகள் நிலைமை', 'சொத்துரிமை', 'கர்ப்பத்தடை', 'பெண்கள் விடுதலைக்கு ஆண்மை அழிய வேண்டும்' ஆகிய தலைப்புகளில் பெண்ணுரிமைக் கருத்துக்களை சுட்டிக் காட்டியுள்ளார்.

"பெண்ணடிமை தீருமட்டும் பேசுந்திருநாட்டில்
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பு"[6]

மாதர்கள் பூரண விடுதலைக்கான வெற்றி பெறாத வரையிலும் தொழிலாளி வர்க்கம் பூரண விடுதலையை அடைய முடியாது எனும் லெனின் கருத்தை பாவேந்தர் பாரதிதாசன் நினைவுபடுத்துகிறார்.

## பெண்ணுரிமை வேண்டிக் குரல் கொடுத்தவர்கள்

இந்த நூற்றாண்டில் பெண்ணுரிமை வேண்டிக் குரல் எழுப்பியவர்களுள், மாயூரம் வேத நாயகம் பிள்ளை, பாவேந்தர் பாரதிதாசன், திரு.வி.கல்யாண சுந்தரம், தந்தை பெரியார், புரட்சிக் கவி பாரதியார் ஆகியோர் முதன்மையானவர்கள் ஆவர். அவர்களின் கருத்துக்கள் பழமைப் பாசியில் பிணிப்புண்ட தமிழினத்தையும், மகளிரையும் சிந்திக்க வைத்தது.

## மாயூரம் வேத நாயகம் பிள்ளை

பெண்களை இந்த தேசத்தில் அடிமைகளைப் போலவும், மிருகங்களைப் போலவும், நடத்துவது மிகவும் பரிதபிக்கத்தக்கக் கூடிய விஷயமாயிருந்தது. ஜாதியும், செல்வமும், எவ்வளவு உயர்வோ அவ்வளவுக்கு ஸ்தீரிகளை (பெண்களை) விலைக்கு வாங்குவது போல, வாங்கி நிஷ்டூரமாக நடத்துகிறார்கள். கொச்சையான பேச்சைத் தவிர வேற ஒரு பேச்சும்

ஸ்திரீகளிடத்தில் கணவர்கள் பேசுவதில்லை என்று பெண்களை ஆண்கள் நடத்தும் இழிவான நிலையைக் கண்டு வருந்தி எழுதினார்.

**பாரதியார்**

புரட்சிக் கவி பாரதியார் இந்தக் கொடுமையை நத்தைப் புழுவைப் போல ஆணும், பெண்ணும் கூடப் பிறக்கிறோம். 'உடன் பிறந்தோன் ஆண்டான்' 'உடன் பிறந்தாள் அடிமை' என்று கண்டித்தார்.

**திரு.வி.கல்யாண சுந்தரம்**

திரு.வி.க. அவர்கள் நாட்டு விடுதலை வேண்டிப் போராடிய தேசியத் தோழர்களிடம் பெண்ணுரிமை உள்ள நாடுகள் செழுமையுற்றிருப்பதும், அவ்வுரிமை இல்லாத நாடுகள் செழுமையற்றிருப்பதும் கண்கூடு, பெண் நாட்டின் தாயாகுதல், அவள் கணவனுக்கு அடிபணிதல் போன்றவற்றைக் கூறி, பெண் அடிமையாக இருப்பது இயல்பு என்று நாட்டின் அடிமைக்கு முக்கியக் காரணத்தை விளக்கிக் கூறினார்.

**பாவேந்தர் பாரதிதாசன்**

பெண்மையைப் போற்றும் வகையில், பெண்ணாகி வந்ததொரு மாயப் பிசாசாம் என்னும் கருத்திற்கு எதிர்ப்பாக,

"வண்மை உயர்வு மனிதர் நலமெல்லாம்

பெண்மையினால் உண்டு என்று பேசவந்த பெண்ணழகே"[7] என்றும்,

"நாய் என்று பெண்ணை நவில்வார்க்கும்

இப்புவிக்குத் தாய் என்று காட்ட தமிழர்க்கு வாய்த்தவளே"[8]

நாய் என்று பெண்ணை இழிவாகப் பேசுகின்ற இவ்வுலகிற்குத் தாய் என்று நிரூபிக்க வந்த கட்டழகே, என்று பெண்ணின் பெருமையைப் போற்றிப் பாடியுள்ளார்.

**பெண் விடுதலை**

பெண் விடுதலை என்பது பற்றிப் பாவேந்தர் பாரதிதாசன் சிந்தித்திருக்கிறார். ஆணுக்குப் பெண் நிகர் என்பதை ஏற்றுக் கொண்டுள்ளார்.

"ஆண் உயர்வென்பதும் பெண் உயர்வென்பதும்

நீ ணிலத் தெங்கணும் இல்லை

வாணிகம் செய்யலாம் பெண்கள் நல்

வானூர்தி ஓட்டலாம் பெண்கள்"[9]

என்ற பாடல்கள் வாயிலாக, ஆண் உயர்வு என்றும், பெண் உயர்ந்தவள் என்றும் பாரதிதாசன் பிரித்துக் காட்டவில்லை. ஆண்களைப் போன்று பெண்களும் வாணிகம் செய்யலாம். வானூர்தி ஓட்டலாம் என்று பெண்ணின் சிறப்பை எடுத்துக் கூறியுள்ளார்.

ஆணைப்போலவே பெண்களுக்கும் வன்மை, கோபம், ஆளுந்திறம், வீரம், உண்டென்பதை ஆண்களும் ஒப்புக் கொள்ள வேண்டும் என்ற கருத்தை பாரதிதாசன் இங்கு சுட்டிக் காட்டுகிறார்.

பெண்ணுக்கு நீதி என்னும் கவிதையில்,

"கற்றவளே ஒன்று சொல்வேன் – உன்

கண்ணைக் கருத்தை கவர்ந்தவன் நாதன் !

கனத்த உன் பெற்றோரைக் கேள் – அவர்

கல்லொத்த நெஞ்சை உன் கண்ணீரினாலே

நனைந்திடுவாய் ! அதன் மேலும் – அவர்

ஞாயம் தராவிடில் விடுதலை மேற்கொள்"[10]

பாரதிதாசன், படிப்பறிவுள்ள பெண்ணே ! உனக்கு நியாயம் கிடைக்க வேண்டுமென்றால், கல்லாக உள்ள உன் பெற்றோர்களின் மனதை உன் கண்ணீர் வெள்ளம் கொண்டு கரைத்திடு. அவ்வாறு அவர்கள் மனம் உருக வில்லையென்றால், உன் திறமையைக் கொண்டு போராடி விடுதலை மேற்கொள் என்று கூறுகிறார்.

பெண்கள் விடுதலை என்ற பாடலில் ஒரு கூட்டுக் குடும்ப அமைப்பில் மனைவி படும் பாட்டினைப் பாவேந்தர் படைத்துக்காட்டி,

"பெண்டாட்டி என்ற பெயரடைந்த நாள் முதலே

ஒண்டொடிக்கும் சொத்தில் பாதி உரிமை உண்டு"[11]

என்னும் நிலை வந்தால்தான் பெண்விடுதலை சாத்தியமாகும் என்ற கருத்தினைப் பெற வைத்துள்ளார்.

சொத்துரிமை கிடைப்பதன் மூலம் பெண்ணுக்கும் பொருளாதாரச் சுதந்திரம் கிடைக்கும் என்பதை விட, கணவன் வீட்டார் படுத்தும் பாடுகளிலிருந்து கிடைக்கும் விடுதலையே பாவேந்தர் பெண் விடுதலை என்று இங்குக் குறிப்பிட்டுள்ளார்.

## பெண்களின் வீர தீரச் செயல்கள்

உடற்பயிற்சி முதல் போர்பயிற்சி ஈறாக எல்லாத் துறைகளிலும் ஆண்களைப் போலவே பெண்களையும் பழக்க வேண்டும் என்ற அறிஞர் பிளாட்டோவின் கூற்றுக்கேற்ப

அக்காலச் சமுதாயத்தில் பெண்களும், ஆண்களும் எல்லாவகைப் பயிற்சிகளையும் தடையின்றி பெற்று வந்தன. ஆயினும் காலம் செல்லச் செல்ல ஆண்கள் ஆதிக்கம் பெருகிப் பெண்களை மெல்லியராக்கி வீட்டுக்குள் பூட்டி வைத்துப் பாதுகாத்தனர்.

பெண்ணைக் கண்டால், பேயும் இரங்கும் என்ற பழமொழியும், பெண் கொலை புரிந்த தன்னை போல என்ற சங்க காலக் கருத்தும், உருப்பெற்றன என்ற கருத்தை பாரதிதாசன் வலியுறுத்திக் கூறுகிறார்.

'பெண் விடுதலையே மண் விடுதலைக்கு முதற்படி' என்னும் கருத்தை, பாவேந்தர் பெண்களை ஆடவர்கள் அடிமை போல் அடக்கி ஒடுக்கி ஏவல் கொள்வதும், தம் இச்சைக்கு ஆட்படுத்தலுமாகிய கொடுமைகள் நிலவும் வரை ஆடவரும் பிறர்க்கு அடங்கி வாழும் நிலையே ஏற்படும் என்பதை,

"ஊமை என்று பெண்ணை உரைக்கும் மட்டும் உள்ளடங்கும்

ஆமை நிலைதான் ஆடவர்க்கும்"[12]

என்று கூறுகிறார்.

பெண்டிரின் உள்ள வலிமை, உடல் வலிமை குறித்து, மாதர்கள் உமியல்ல என்கிறார். பெண்களின், பூங்கரங்களும் தேவைப்படும்பொழுது தீயவரின் உயிரை அழிக்கும் படையாகச் செயல்படும் ஆற்றலும் உறுதியும் கொண்டது என்பதை,

"உமியல்ல மாதர் வலக்கை தீயர்

உயிரை அழிக்கும் (இடிக்கும்) உலக்கை"[13]

என்று கூறுகிறார். எடுத்துக்காட்டாக,

கயமையைத் தன் போர்க்குணத்தால் புறமுதுகிடச் செய்த வீர நங்கையின் தீரச் செயலினைப் பாரதிதாசன் சுட்டிக் காட்டுகின்றார்.

காற்றடிக்கின்ற சோலையிலே நேரம் பார்த்து கனிபொறுக்கும் எழுச்சி பெற்ற மங்கையிடம், சிறுமை கொண்ட காளை ஒருவன், அப்பெண்ணிடம் வாலாட்டி தன் காமச்சிறுமையை வெளிப்படுத்த அம்மறத் தமிழ் மங்கை ஒளித்து வைத்திருந்த குறுவாளை ஓங்கத் தீயவன் ஓட்டம் பிடித்த நிகழ்ச்சி குறித்து,

"கோடியுள்ளம வேண்டுமிந்த மகிழ்ச்சி தாங்க"[14]

எனக் கயவனை விரட்டிய நங்கையின் உறுதியைப் பாராட்டுதல் கவிஞர் தம் பெண்ணுரிமையைப் போற்றும் மறுமலர்ச்சிப் பாங்காகும்.

கோரைப்புல் போல வளைந்த மாதரைச் சிறுபுலியாக மாற்றினார். பாவேந்தர் பாரதிதான் என்பதை நன்கு உணர முடிகிறது.

புரட்சியை மூட்டுகின்ற பெருங்கனலாக பெண்களைச் சித்தரித்துள்ளார். பாரதிதாசன், இவர் சாதி, மத வேறுபாடுகளையும் பழக்க வழக்கங்களையும், ஒழித்து புதியதோர் உலகினைப் படைக்க விரும்பினார்.

குடும்ப விளக்கில், தலைவன், தலைவியை நோக்கி,

"ஆளிழுக்கின்ற அழகிய வண்டி இந்த ஊரில் இருப்பதும்

நமது வில்லியனூரில் இல்லாதிருப்பதும் ஏன் ?"[15]

என்று தலைவன் கேட்க, தலைவி

"கல்வி தன்னிலும் செல்வந்தன்னிலும்

தொல்லுலகோர் பால் தொலையாது

இருந்திடும் ஏற்ற தாழ்வே"[16]

இதற்கும் காரணம் ஆகும். இழுப்பவன் வறியவன்! ஏறினோன் செல்வன் என்ற வர்க்க முரண்பாட்டைச் சுட்டிக் காட்டுகிறாள். எடுத்துக்காட்டாக,

லீயுன்சி என்ற விடுதலை வேள்வியால் தன் கணவனைப் பறி கொடுத்துவிட்ட கைம்பெண்ணே வியட்நாம் விடுதலை, கிளர்ச்சிக்கு காரணமாக இருந்தாள்.

ஷெல்லி என்ற பெண் இஸ்லாமியப் புரட்சிக்குத் தலைவியாக அமைந்தாள்.

மாமேதை லெனின் என்பவர் பாட்டாளி வர்க்கப் பெண் குலத்தோர் புரட்சியின் போது உன்னத முறையில் பணியாற்றினார். என்பன போன்ற கருத்துக்களை 'பாவேந்தர் பாரதிதாசன்' இங்கு சுட்டிக் காட்டுகிறார்.

**முடிவுரை**

பாரதிதாசன், நம் நாட்டில் பெண்கள் நிலைமையானது மிக்க கவலைக்கு இடமானதாகும். உச்சி முதல் பாதம் வரை உள்ள முழுவதையும் திருத்தம் செய்யப்பட வேண்டும்.

பெண்களின் கேவல நிலைமைக்குக் காரணமே நாட்டில் நிலவும் மூடப்பழக்க வழக்கங்கள் ஆகும்.

"எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி

நல்லை வாழிய நிலனே"[17]

என்ற கருத்திற்கு இணங்குவது போல பெண்களால் தான் அவர்களின் உரிமைகளைப் போராடி மீட்டுக் கொள்ள வேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்திக் கூறுகிறார்.

# அடிக்குறிப்புக்கள்

1. பாரதிதாசன் குடும்ப விளக்கு, திருமணம் ப.78
2. பாரதிதாசன் குடும்ப விளக்கு, விருந்தோம்பல் ப.49
3. பாரதிதாசன் கவிதைகள் (பா.எண்.41) ப.125
4. பாரதிதாசன் கவிதைகள் ப.127
5. பாரதிதாசன் கவிதைகள் மூன்றாம் பகுதி. ப.196
6. பாரதிதாசன் கவிதைகள் ப.3
7. பாரதிதாசன் கவிதைகள் ப.127
8. பாரதிதாசன் கவிதைகள் ப.127
9. பாரதிதாசன் இசையமுது முதல் தொகுதி, ப.52
10. பாரதிதாசன் கவிதைகள் ப.177
11 பாரதிதாசன் நூற்றாண்டு விழா மலர் (பூம்புகார் பிரசுரம் 1977—158)
12. பாரதிதாசன் கவிதைகள் ப.3
13. பாரதிதாசன் தேனமுது ப.52
14. பாரதிதாசன் கவிதைகள் தொகுதி 1, ப.114.
15. பாரதிதாசன் குடும்பவிளக்கு ப.53
16. பாரதிதாசன் குடும்பவிளக்கு ப.53
17. புறநானூறு பா.எண்.187 ப.407

# இயல் மூன்று

# கல்வி உரிமை

# இயல் மூன்று

# கல்வி உரிமை

## முன்னுரை

பாரதிதாசன் சமுதாய உரிமைகளுக்கு எவ்வாறு முக்கியத்துவம் கொடுக்கின்றாரோ அதே போன்று கல்வி உரிமைக்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கின்றார். சிறுவர் முதல் முதியவர் வரை அனைவருக்கும் கல்வி அளித்திடல் வேண்டும் என்பதற்காக முதியோர் கல்வி, கட்டாயக் கல்வி, பெண் கல்வி போன்றவற்றின் சிறப்பினை வலியுறுத்திக் கூறுகிறார். முதியோர் கல்வி, கட்டாயக் கல்வி ஆகிய இரண்டினைக் காட்டிலும் பெண் கல்விக்கு முதலிடம் கொடுக்கிறார்.

## கல்வி

கல்வி என்பது மனிதனை பெரிய பதவிகளில் அமர்த்தவும், பெரிய மேதைகளாக ஆக்குவதற்கும், ஊதியம் திரட்டுவதற்கான வழிகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும் கல்வி மிக இன்றியமையாததாகின்றது.

பெண்களுக்குக் கல்வி பகுத்தறிவையும், தன்மான உணர்ச்சியையும் அளிக்கிறது. பெண்களின் வாழ்க்கை முன்னேறச் செய்வதற்கும், நேர்மையான தொழில் செய்யவும் அலுவல் அதிகாரியாக ஆவதற்கும் கல்வி பயன்படுகிறது. மேலும் உரிமை உணர்ச்சி உடைய பெண்களாக வாழ்வதற்கும், அவர்களைத் தகுதிப்படுத்திக் கொள்வதற்கும் ஒரு வழிகாட்டியாக அமைகிறது.

நம் நாட்டுக் கல்வி நிலையைப் பற்றிக் கூறும் போது, பாரதிதாசன்,

"கல்வியில் வீரம் கடுகும் இல்லை

கூனிக் கொட்டாவி விட்டு, விட்டுப்

போன உயிர் போல் பொழுது போக்கினர்

ஒழுக்கம் பழுத்தது விழுப்பம் வீழ்ந்தது"[1]

கல்வியில் கொஞ்சம் கூட விருப்பம் இல்லாமலும், அக்கரை செலுத்தாமலும், கூனிக் குறுகித் துயில் கொண்டு போன உயிர் போனது போல, கொட்டாவி விட்டுப் பொழுதினைப் போக்கிக் கொண்டு இருக்கின்றனர் மக்கள் என்று வருந்திப்பாடுகின்றார்.

**கல்வியினால் வரும் நன்மைகள்**

கல்வியினால் வரும் நன்மைகள் கணக்கிலவாகும். கல்வி இருட்டிற்குக் கலங்கரை விளக்கு என்றும், இருள் நீங்க கல்வி இன்றியமையாதது என்றும், பாவேந்தர் பாரதிதாசன் தன் பாடல் மூலம்,

"எது பொருள் என்று இருவிழி இலாரும்

படித்தால் அவர்க்குப் பலவழிகள் வரும்

ஊமையும் கற்க ; ஊமை நிலை போல்

கையும் காலும் இல்லான் கற்க – அப்பொழுது

உய்யும் நெறியை உணர்ந்து மேம்படுவான்"[2]

1. எது பொருள் என்று ஆராய்ந்து இருபாலரும் அவற்றை உணர்ந்து கற்றிடல் வேண்டும்.

2. அவ்வாறு உணர்ந்து கற்கும் பொழுது பல நன்மைகள் பெருகும்.

3. ஊமையாக இருப்பவர்களும், ஊமை நிலை போன்று கையும் காலும் இல்லாதவர்களும்கல்வி கற்கும் பொழுது அவற்றிற்குரிய நெறியினை உணர்ந்து மேம்படுவார் .

என்று சுட்டிக் காட்டுகிறார்.

எல்லாவற்றிற்கும் மேலாகக் கற்றவனுக்குச் சமூகத்தில் உயர்ந்த இடம் கிடைக்கிறது என்பதை பாரதிதாசன் மிக எளிமையாக எல்லோர்க்கும் புரியும் வண்ணம் பாடுவது சுவை பயப்பதாய் உள்ளது.

"கல்லாத மூடனை வா என்பார்

கற்றவனை வாருங்கள் என்றழைப்பர்"[3]

கல்வி கற்காத மூடர்களை மதிப்புக் குறைவாக, வா என்றும், கற்றவர்களை மரியாதை கொடுத்து, 'வாருங்கள்' என்றும் அழைக்கின்றனர். ஆதலால் கற்றவர்க்குச் சமூகத்தில் தகுதியும், மதிப்பும் உயர்ந்து விடுகின்றது. எனவே பெண்களுக்கு எக்குறை நேர்ந்தாலும் கல்வி கற்க வேண்டும் என்ற கருத்தினை ஆசிரியர் வலியுறுத்திக் கூறுகிறார்.

**கல்வி பெறத் தடையாக அமையும் காரணங்கள்**

கல்வி ஒருகாலத்தில் செல்வமுடையவர்களே எளிதில் பெறக்கூடிய நிலையில் இருந்தது. தமிழகத்தில் இடைக்காலத்தில் ஏற்பட்ட சாதி, பேதம், காரணமாகப் பெரும்பான்மையான மக்கட்குத்தக்க கல்வி பெறும் வாய்ப்புகள் மறுக்கப்பட்டன.

கல்விக் கொடை நல்கும் வறியவர்களைக் கடவுளாக எண்ணி, 'எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்' என்று மொழிந்த மொழியின் பொருளை மக்கள் யாவரும் உணர

முடியாத நிலை நாட்டில் இருந்தது. அனைவரும் கல்வி பெறத் தடையாக அமைந்த காரணத்தை பாவேந்தர் பாரதிதாசன்,

"வறியோர்க்கெல்லாம் கல்வியின் வாடை

வரவிட வில்லை மதக்குருக்களின் மேடை"[4]

என்ற வரிகளில்,

சமுதாயக் கொடுமைக்குக் காரணமாக விளங்கும் மதத் தலைமையே கல்விக்குத் தடையாக விளங்குகிறது. அத்தகைய மதத் தலைமையின் வேர்களாக விளங்கும் மதக் குருக்களைக் களையப் பெறல் வேண்டும் எனக் கூறுகிறார்.

"கல்லாரைக் காணுங்கால் கல்வி நல்காக்

கசடர்க்குத் தூக்குமரம் அங்கே உண்டாம்"[5]

எனக் கொதித்துரைக்கின்றார்.

கல்வி அறிவற்றவனைக் கண்ணற்றவனாக வள்ளுவர் குறிப்பிடப் பாரதிதாசன்,

கல்வியிலான் ஆவியலாதவனே

கல்வி அறிவு இல்லாதவனை ஆவி போன்றவனாகவும், பிணமாகவும் நடைப்பிணமாகவும் சுட்டிக் காட்டுகின்றனார்.

**கல்வியின் வகைகள்**

கல்வியின் இன்றியமையாத இயல்பினை விளக்கும் பாரதிதாசன் கல்வியை மூன்று வகையாகப் பிரித்துக் காட்டியுள்ளார்.

அவையாவன :

1. கட்டாயக் கல்வி

2. பெண் கல்வி

3. முதியோர் கல்வி

"எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லை என்றால்

இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும்"[6]

அதாவது, வசதி இல்லாத காரணமாக இந்நாட்டில் ஒருவன் கல்லாதிருந்தாலும், அந்நிலைமை சமுதாயம் முழுவதும் பரவி நாணப்படற்க்கமைந்த இழிவாகும் என்று பாரதிதாசன் அறிவுறுத்துகிறார்.

**கட்டாயக் கல்வி**

கல்வி எல்லோர்க்கும் பொதுவானவை என்றான பின்பும், எல்லோர்க்கும் கட்டாயமாக, கற்பதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுத்த பின்பும் கற்க முன்வரவில்லை. ஏன் என்றால் கல்வியைப் பற்றிய மக்கள் கண்ணோட்டம் வேறு விதமாக இருந்தது. இதன் காரணமாகவே பாரதிதாசன் கட்டாயக் கல்வி என்ற ஒன்றை கொண்டு வரவேண்டும் என்று எண்ணினார்.

"கறைகள் போகாதிருப்ப தென்ன

கட்டாயக் கல்வி கிட்டாமை தான்"[7]

மக்களிடம் படிந்துள்ள கறைகளும், குறைகளும் போகாமைக்குக் காரணம் கட்டாயக் கல்வி இல்லாமையே ஆகும் என்பது அவரது கருத்தாகும்.

கல்வி எல்லோர்க்கும் கட்டாயம் வேண்டும் என்றும், கட்டாயம் கல்வி பயில் என்றும் பாரதிதாசன் கல்வியைக் கட்டாயப்படுத்துகிறார்.

"கல்லார் கடைப்பட்டார் ஆதலின் கல்வி தான்

எல்லோர்க்கும் கட்டாயம் வேண்டும் ஆல் இல்லார்க்கோ

ஊணுடை நல்ல உறையுள் படிப்பளித்தல்

மானுடை மன்னர் கடன்"[8]

நாட்டை ஆளும் மக்களுக்கு உணவு, உடை, உறையுள் கல்வி ஆகியவற்றைக் கொடுத்தலே மிகச் சிறப்பாகும். இவற்றைக் கொடுக்கின்றவர்கள் மாட்சிமைக்குரியோர் ஆவர் என்று பாவேந்தர் பாரதிதாசன் அவர்களைப் போற்றிப் புகழ்கின்றார். கல்லார் கடைபட்டவர் ஆதலின் அவர்களை முன்னேற்றக் கட்டாயம் கல்வி தேவை என்பதையும் அறிவுறுத்திக் கூறுகிறார்.

புரட்சிக் கவிஞர் வற்புறுத்தும் இக்கட்டாயக் கல்வியை அரசாங்கம் தம் அரசியற் கடமையாக ஏற்று அனைவர்க்கும் கட்டாயக் கல்விக்கான திட்டத்தையும், கற்கும் பருவம் கடந்த முதியோரின் கல்விக்கான திட்டத்தையும் வகுத்துச் செயற்படுத்தியுள்ளார். இந்நிலையானது கவிஞர் வலியுறுத்திய கருத்திற்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.

தமிழகத்தில் அனைவர்க்கும் கல்வி கட்டாயமாக்கப்பட வேண்டும் எனக் கூறும் கவிஞர், அக்கல்வி தாய்மொழிக் கல்வியாகவும், அதன் வழியே பிறகலைபயிலும் கல்வியாகவும் அமைத்தல் வேண்டும் என்பதை, தமிழ்க்கல்வி தமிழ்நாட்டில் கட்டாயம் என்பது ஒரு சட்டம் கொண்டு வருவதன் மூலம் தன் கருத்தை வலியுறுத்திக் கூறுகிறார்.

**பெண் கல்வி**

சங்க இலக்கியத்தில் பெண் கல்வி சிறப்புற இருந்தது. எனினும் இடைக் காலத்தில் பெண் கல்வி மறுக்கப்பட்டு ஏட்டைப் பெண்கள் தொடுவது தீமை என்று கூறப்பட்டது. உலக வரலாற்றைப் பார்க்கும்பொழுது, இந்தியா, கிரீஸ், போன்ற பழைய முற்போக்கான நாடுகள் உள்பட எல்லா நாடுகளிலும் பெண்களுக்குக் கல்வி தராமலே வைத்திருந்தனர்.

15—வது நூற்றாண்டில் தோன்றிய மார்டின் லூதர் என்ற பெரியார் முதன் முதலில் இருபாலருக்கும் கட்டாய ஆரம்பக் கல்வி தேவை என்றார்.

"நுண்ணறிவுடையோர் நூலோடு பழகினும்

பெண்ணறிவு என்பது பெரும் பேதைமைத்து"[9]

என்றும், பேதைமை என்பது மாதர்க்கு அணிகலன் என்றும் கூறப்பட்டன. அத்தோடு மட்டுமல்லாமல் எண்ணறக் கற்று எழுத்தற வாசித்தாலும் பெண்புத்தி என்பதெல்லாம் பெரும் பேதைமை ஆகும் என்று பெண்ணறிவு பழித்துரைக்கப்பட்டது.

இருபதாம் நூற்றாண்டு இலக்கியங்களில் பெண் கல்வியின் சிறப்பு வலியுறுத்தப்பட்டது. உயிர்வாழ்வதற்கு சுவாசம் எவ்வளவு இன்றியமையாததோ, அதே போன்று பெண்களுக்கும் கல்வி மிக அவசியமாகின்றது என்பதை பாரதிதாசன் வலியுறுத்திக் கூறுகிறார்.

"காசுக் கொரு குதிரையும் வேண்டும்

காற்றைப் போல் பறக்கவும் வேண்டும்"[10]

என்பன போலவும்,

"புல்லுண்ணாத பசுவும் வேண்டும்

பூரணமாகக் கறக்கவும் வேண்டும்"[11]

என்பன போலவும்,

பெண்கள் படித்தவர்களாகவும் இருக்க வேண்டும். அதே சமயத்தில் ஆண்களுக்கு அடிபணிந்து நடக்கவும் வேண்டும் என்றால் எப்படி பெண்களுடைய (மனோரதம்) ஆசைகள் நிறைவேறும் என்று பாரதிதாசன் கூறுகிறார்.

நல்ல குடும்பம் பல்கலைக்கழகம்

என்ற குறிக்கோளைக் கொண்டவர் புரட்சிக் கவிஞர் எனவே அப்பல்கலைக் கழகத்தின் துறை போகிய நல்லாசிரியர்களாகப் பெண்களைப் படைக்கின்றார்.

மகள், மனைவி, தாய் போன்ற பல்வேறு நிலைகளிலும் பெண்ணை அறிவு சான்றவர்களாகக் காட்டுவதுடன் பெண் கல்வியின் உயர்வையும், சிறப்பையும் வற்புறுத்திப் போற்றுகின்றார்.

பெண்கள் படிக்கக் கூடாது என்ற காலம் ஒன்று உண்டு. அதைப் போன்றே படிக்கச் செல்கின்ற பெண்களை ஊர் கேலி பேசிய காலமும் உண்டு.

படித்தால் பெண் கெட்டுவிடுவாள், யாருடைய கட்டுப்பாட்டிற்குள்ளும் அடங்கமாட்டார்கள் என்று கருதிய காலமும் உண்டு. இந்த நிலையை மாற்ற விரும்பும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்,

பள்ளிக்குப் புறப்பட்ட நிலையில் அழுது கொண்டு இருக்கும் ஒரு இழந்தையைப் பார்த்து, அப்பெண்ணின் தந்தை கேட்கும் பாங்கில் அமைந்த பாடல் பெருஞ் சிறப்புடையது, அவற்றுள்,

"தலைவாரிப் பூச்சூடி உன்னைப் பாட

சாலைக்குப் போ என்று சொன்னாள் உன் அன்னை

சிலை போல ஏனங்கு நின்றாய் — நீ

சிந்தாத கண்ணீரை ஏன் சிந்துகின்றாய்"[12]

என்று பரிவுடன் வினவுகின்றார்.

பள்ளிக்குச் செல்வது என்றாலே குழந்தைகள் விரும்புவது இல்லை. தலைவாரி பூச்சூடி சீருடை அணிந்த பின்பும் பெண் குழந்தைகள் பள்ளிக்குச் செல்ல விரும்புவதில்லை. அழுகின்ற குழந்தைகளை அதட்டி, உருட்டி அச்சுறுத்துவதை விட அன்பால், பரிவால் அவர்களைத் தம்வயப்படுத்துவது எளிதாகும்.

அன்பில் கட்டுண்ட சிறுமி மகிழ்ச்சியில் திளைத்து நிற்கும் போதே கல்வியின் அருமை பெருமையை மெல்ல மெல்ல ஊட்டுகின்றார் தந்தை.

"விலைபோட்டு வாங்கவா முடியும்? கல்வி

வேளை தோறும் கற்று வருவதால் படியும்

மலை வாழை அல்லவோ கல்வி — நீ

வாயார உண்ணுவாய் போ என் புதல்வி"[13]

என்று கல்வியை இனிய சுவையுடனும், கிடைத்தற்கரியதாய் இருக்கின்ற மலைவாழைப் பழத்துடனும் ஒப்பிடுகின்றார் பாவேந்தர் பாரதிதாசன்.

கல்லாமையால் வரும் இழிவு பெண்ணுக்கு மட்டுமன்று பெண்ணைப் பெற்ற தந்தைக்கும் உண்டு என்பதனை,

"படியாத பெண்ணாயிருந்தால் – கேலி

பண்ணுவார் என்னை இவ்வூரர் தெரிந்தால்

கடிகாரம் ஓடும் முன் ஓடு – என்

கண்ணல்ல அண்டை வீட்டுப் பெண்களோடு

கடிதாய் இருக்குமிப் போது – கல்வி

கற்றிடக் கற்றிடத் தெரியுமப் போது"[14]

பெண்ணைப் பெற்ற தந்தை கூறியதாவது படிக்காத பெண்ணாக நீ இருந்தால் இந்த ஊரார்கள் என்னைக் கேலி செய்வார்கள் என்று பெண்ணுக்கு அறிவுரை கூறி, என் கண்ணல்ல, கல்வி இப்பொழுது படிக்க கஷ்டமாகத் தான் இருக்கும். நாளடைவில் கற்றிட, கற்றிட சரியாகி விடும் என்று அறிவுரை புகட்டுகிறார்.

ஒரு தந்தையின், நிலையில் இருந்து பாடிய புரட்சிக் கவிஞர், பாடலின் ஈற்றடியைப் படைப்பவர் கூற்றாக,

"கடல் சூழ்ந்த இத்தமிழ் நாடு – பெண்

கல்வி பெண் கல்வி என்கிற தன் போடு"[15]

என்று முடிக்கின்றார். எதிர் காலத் தமிழ் நாட்டில் பெண் கல்வி போற்றத்தக்க இடத்தைப் பெறும் என்பதனை இதன் மூலம் அறியலாம்.

## பெண் கல்வியின் முதன்மை

பாவேந்தர் பாரதிதாசன் பெண் கல்வியின் முதன்மையை குடும்ப விளக்கு நூலில் மிக அற்புதமாகப் படைத்துக் காட்டியுள்ளார்.

"பெண்களுக்குக் கல்வி வேண்டும்

குடித்தனம் பேணுதற்கே

பெண்கட்குக் கல்வி வேண்டும்

மக்களைப் பேணுதற்கே

பெண்கட்குக்கல்வி வேண்டும்

உலகினைப் பேணுதற்கே

பெண்கட்குக்கல்வி வேண்டும்

கல்வியைப் பேணுதற்கே"[16]

பெண்கள் குடும்ப வாழ்க்கையைப் பேணிக் காப்பதற்கும், மக்கள், ஊர், சமூகம், நாடு போன்றவற்றைப் பாதுகாப்பதற்கும், உலகினைப் பேணுதற்கும், கல்வியை நல்ல முறையில் கற்று முன்னேறுவதற்கும் பெண்களுக்கு கல்வி மிக மிக இன்றியமையாததாகும் என்று கவிஞர் கூறுகிறார்.

"கல்வி உடைய பெண்கள்

திருந்திய கழனி -- அங்கே

நல்லறிவுடைய மக்கள் விளைவது

நவிலவோ நான்"[17]

கல்வி கற்ற பெண்கள் நன்றாகத் திருத்தம் செய்யப் பெற்ற கழனிக்கு (வயல்) ஒப்ப அங்கு உயர்ந்த நெல்மணிகள் போன்று நிறைய நல்லறிவினை உடைய மக்கள் தோன்றுவர் என்று பாவேந்தர் பாரதிதாசன் குடும்ப விளக்கில் குடும்பத் தலைவி மூலம் வெளிப்படுத்திக் கூறுகிறார்.

"கல்வி இல்லாத பெண்கள்

களர் நிலம் ! அந்நிலத்தில்

புல் விளைந்திடலாம் நல்ல

புதல்வர்கள் விளைவதில்லை"[18]

கல்வி கற்காத பெண்கள் களர் நிலத்திற்கு ஒப்பாவர். அக்களர் நிலத்தில் புற்கள் செல்வச் செழிப்பாக விளையும். ஆனால் நல்ல புதல்வர் விளைய மாட்டார்கள் என்பது புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் கருத்தாகும்.

பெண்கள் கல்வி அறிவினைப் பெறும் போது, சுயமாக சிந்திக்கும் தன்மை கொண்ட ஆற்றலினைப் பெறுகின்றனர். அது மட்டுமல்லாமல் சமூகத்துடனான தொடர்பு அதிகரிக்கிறது. செயலாற்றல் கூடுகிறது. அறியாமையும், மூட நம்பிக்கைகளும் சிறிது சிறிதாக நீங்கி, ஒரு குடும்பத்தினை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்கும் பொழுது, அவள் சிறந்த குடும்பத் தலைவியாக வழி நடத்தும் ஆற்றலைப் பெற்று விளங்குகிறாள்.

இன்றைய நிலையில் பெண்களுக்கான பள்ளிகள், கல்லூரிகள், போன்றவை பெருகி வருகின்றது. ஆண்களோடு பெண்கள் போட்டியிட்டு கல்வி கற்று சில சமயங்களில் ஆண்களை விடப் பெண்கள் உயர்ந்த மதிப்பெண்களையும் பெறுகின்றனர். தேர்ச்சி பெறுவோர் சராசரியும் ஆண்களை விட உயர்ந்த நிலையை பெண்கள் அடைகின்றனர்.

மருத்துவக் கல்வி, தொழிற் கல்வி, சட்டக் கல்வி, கணினியியல் கல்வி, அறிவியல் கல்வி, முதலிய எல்லாக் கல்விகளும் கற்று, உயர்ந்த பட்டங்களும் பெற்று உயர் பதவிகளும் அடைகின்றனர்.

இதன் மூலம்,

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்

பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்!"[19]

என்று பாரதியின் கனவு நனவாகி வருவதை இன்றும் நாம் கண்கூடாகக் காண்கிறோம்.

பாவேந்தர் பாரதிதாசன் பெண்களுக்கு நகை மீது இருக்கும் மோகம் ஒழிய வேண்டும். அவர்களுக்கு உண்மையான அணிகலன் என்பது கல்வியே ஆகும். கைக்கிரண்டு வளையலும், காதுக்கொரு தோடும் அழகு தருவதல்ல என்ற கருத்தினை,

"கற்பது பெண்களுக்கு ஆபரணம் – கெம்புக்

கல் வைத்த நகை தீராத ரணம்

கற்ற பெண்களை இந்த நாடு தன்

கண்களில் ஒற்றிக் கொள்ளும் அன்போடு"[20]

என்று வலியுறுத்திக் கூறுகிறார்.

கல்வி அறிவு இல்லாத குடும்பம் இருண்ட வீடு எனப்பட்டது. கல்வி இல்லையேல் அறிவில்லை, ஒழுக்கமில்லை, மற்ற எதுவுமில்லை ; அக்கல்வி அறிவில்லாத குடும்பத்தினர் வாழ்க்கை நடத்துவதில் பயன்தரத்தக்கது ஒன்றுமில்லை.

ஆகவே பெண்கள், ஆண்கள் ஆகிய இருபாலரும் கல்வியின் இன்றியமை யாமையை உணரவேண்டுமானால் குடும்ப விளக்கு என்னும் நூலைப் படித்துப் பயன் பெற வேண்டும் என்பதே பாவேந்தர் பாரதிதாசனின் கருத்தாகும்.

கல்லாத தலைவன், தலைவி இல்லறம் நடத்தும் இருண்ட வீட்டினை பாரதிதாசன்,

"அறிவெனும் வெளிச்சம் அங்கே இல்லை

மடமை மட்டும் மகிழ்ந்து கிடந்தது"[21]

என்று தெளிவுபடுத்துகிறார். அவ்வீட்டை இருண்ட வீடு என்பதற்கான காரணத்தையும்,

"எல்லா நலமும் ஈந்திடும் கல்வி

இல்லா வீட்டை இருண்ட வீடென்க !

படிப்பில்லார் நிறைந்த குடித்தனம் நரம்பின்

துடிப்பிலார் நிறைந்த சுடுகா டென்ப!"[22] என்று சுட்டிக் காட்டுகிறார்.

கல்வியின் இன்றியமையாமையையும், சிறப்பினையும் பாரதிதாசன் தமது படைப்புகளின் மூலம், போற்றிப் பாடியுள்ளார்.

அதே சமயத்தில்,

"கல்வியில்லை உரிமையில்லை

பெண்களுக்கு கடைத்தேற வழியின்றி விழிக்கின்றார்கள்"[23]

என்று பெண்களின் பரிதாப நிலையை, எடுத்துக்கூறியும்,

"கல்வியுடையோரே – பெண்ணே

கண்ணுடைய ராவார்"[24]

என்று அறிவுறுத்தியும் கூறுகின்றார்.

## முதியோர் கல்வி

பலரது இளமைக் காலங்களில் குடும்ப சூழ்நிலைக் காரணமாகவும், அவர்கள் வாழ்ந்த சூழ்நிலைக்குத் தகுந்த வாறும் கல்வி கற்க முடியாத நிலை ஏற்படுகிறது. இவர்களது குறைகளைப் போக்குவதற்காகவே பாவேந்தர் பாரதிதாசன் "முதியோர் கல்வி" என்ற அருமையான திட்டம் ஒன்றை வகுத்தார்.

இதன் மூலம் அனைவருமே வயது வரம்பின்றி ஆவலுடன் கல்வி கற்க வருவது பாராட்டத்தக்க ஒன்றாகும். ஆரம்ப நிலையில் அடிப்படையிலிருந்து கல்வி கற்றுத் தரப்படுவதன் மூலம், எந்த வித சிரமமும் இல்லாமல் அவர்களால் எளிதில் புரிந்து கொள்ள முடிகிறது. இதனால் அவர்களுக்கு எழுதப் படிக்கத் தெரியவில்லையே என்ற தாழ்வு மனப்பான்மை நீங்குவதோடு மட்டுமின்றி, தங்களாலும் கல்வி கற்க முடியும் என்ற உறுதி மனதில் ஏற்படுகிறது.

இந்த அமைப்பில் படித்த மற்றும் படிக்காத, சமூக அக்கரை உள்ள இளவயது ஆண்களும், பெண்களும் இத்திட்டத்தில் சேர்ந்து கொண்டு தங்களால் இயன்ற உதவிகளைச் செய்து வருகின்றனர் என்ற கருத்தை ஆசிரியர் வலியுறுத்திக் கூறுகிறார்.

**கல்வி பற்றிய பல்வேறு அறிஞர்கள் கருத்து**

**1. விவேகானந்தர்**

மனித சமுதாயம் மதிப்புக்கள் நிறைந்த சமுதாயமாக மாறுவதற்கான வழிவகையாகவும், தேவையற்ற பழக்கங்களின் பிடியிலிருந்து விடுபட்டு நன்னெறிக்கு வருவதற்கான ஊன்று கோலாகவும் கல்வி அமைய வேண்டும்.

"எத்தகைய கல்வி நல்ல ஒழுக்கத்தை உருவாக்குமோ மன வலிமையை வளர்க்கச் செய்யுமோ, விரிந்த அறிவைத் தருமோ, ஒருவனைத் தன்னுடைய சுயவலிமையைக் கொண்டு நிற்கச் செய்யுமோ அத்தகைய கல்வி தான் நமக்குத் தேவை. மனிதனை மெல்ல மெல்ல இயந்திரம் ஆக்கிக் கொண்டு வருவதும் ஒரு கல்வியா?"[25] என்று நெஞ்சம் கொதித்தார்.

## 2. டாக்டர் இராதா கிருஷ்ணன்

"முழுமையான கல்வி என்பது நுண்ணறிவுப் பயிற்சியோடு மனத் தூய்மையையும், ஆன்மிக நெறிகளையும், கற்பிப்பதாக இருக்க வேண்டும்"[26] என்கிறார்.

## 3. வேதாத்திரி மகரிஷி

"மனதைத் தொட்டு ஆன்மாவை நெறிப்படுத்துகிற கல்வி முறைதான் ஒரு சிறந்த சமுதாயத்தை உருவாக்க முடியும் என்ற சத்திய வாக்கும்,

"கல்வியிலே உயர்ந்த அருட்கல்வியில்லையானால்
கல்வி பெற்ற அனைத்தும் சுயநலமாம் அன்புக்
கல்வி யெனும் சமநோக்கு நேர் நிறை உணர்வு
கருத்தினிலே உருவாகா .... "[27]

என்ற பாடல் வரிகளும் நமது சிறந்த கல்வி முறைக்கு வழிகாட்டுதலாக அமைய வேண்டும் என்று கூறுகிறார்.

## 4. தேசத் தந்தை காந்தியடிகள்

"உடல், உள்ளம் ஆகிய இரண்டின் வளர்ச்சிக்கும் ஓயாது உழைப்பதே உண்மைக் கல்வி ஆகும். மாணவர் மனதில் ஒழுக்கத்தை வளர்ப்பதே கல்வியின் உன்னத நோக்கமாக இருக்க வேண்டும்"[28] என்கிறார்.

## 5. வள்ளுவர்

"கற்கத்தக்க நூல்களை மயக்கமறத் தெளிவாகக் கற்க வேண்டும். கற்ற பின்னர் நூல் கூறும் நன்னெறியில் நின்று வாழ் நாள் முழுவதும் ஒழுக வேண்டும் என்றும்,

ஒருவனுக்கு அழியாத சிறப்பு மிக்க செல்வம் கல்வியேயாகும் என்றும் கூறுகிறார்.

விஞ்ஞானப் பூர்வமான இயற்கைத் தத்துவக் கல்வியும் மனித நேயப் பண்புகளையும், உடல் நலத்தையும் மேம்படுத்துகின்றன. பழக்க வழக்க ஒழுக்கங்கள் பற்றிய கல்வியும், வருங்காலச் சமுதாயத்தின் வித்துக்களாகிய இன்றைய இளைய தலை முறையினருக்கும் அவசிய அவரசத் தேவை முறையே கல்வியாகும்"[29] என்பதை நன்கு உணரலாம்.

## முடிவுரை

கல்வி பெறாத வாய்ப்பு அளிக்கப்படாத பெண்களுக்கும், அறியாமையினால் தனக்கும், தன் குடும்பத்தாருக்கும் தீங்கினை ஏற்படுத்துகின்றனர். குழந்தைகளை வளர்க்கும் முறையில் அறியாது செயல்படுவதால் உடல் நலமும், உள நலமும் சீர்கெட்ட நிலையில் சமூக அமைதிக்கு ஊறு விளைவிக்கும் வகையில் குழந்தைகள் வளர்கிறார்கள். இந்நிலை ஆணுக்கும், பெண்ணுக்கும் பொதுவானவை என்றாலும் பெண்கல்வி பெறும் உரிமை தொடர்ந்து மறுக்கப்பட்டு வருகிறது. அதனால் பெண் கல்வியின் நன்மைகளை எடுத்துக் கூறிச் சமூகத்தவர் அதை உணரும் வகையில் பாடல் இயற்றியுள்ளார் ஆசிரியர்.

"வானூர்தி செலுத்தல் வைய மாக்கடல் முழுதளத்தல்

ஆன எச்செயலும் ஆண் பெண் அனைவர்க்கும் பொதுவே"[30]

என்றும், பெண்கள் கல்வி கற்று எல்லாவற்றிலும் மிகச் சிறப்பான முறையில் உயர வேண்டும் என்று பாவேந்தர் பாரதிதாசன் தமது படைப்பு நூல்களில் பாடியுள்ளார் என்பதை இக்கட்டுரையின் மூலம் நன்கு அறிய முடிகிறது.

## அடிக்குறிப்புகள்

1. பாரதிதாசன் கவிதைகள் ப.203 (தொகுதி 4 )
2. பாரதிதாசன் இருண்ட வீடு ப.46
3. பாரதிதாசன் ஒரு தாயின் உள்ளம் மகிழ்கிறது ப.52
4. பாவேந்தர் நினைவுகள் ப.46, 47
5. பாரதிதாசன் பாண்டியன் பரிசு ப.99
6. பாரதிதாசன் கவிதைகள் ப.95
7. பாரதிதாசன் மணிமேகலை வெண்பா ப.130
8. பாரதிதாசன் மணிமேகலை வெண்பா ப.130
9. பாரதிதாசன் நீலவண்ணன் புறப்பாடு, குயில் புதுச்சேரி (ப.8,11,94)
10. மாயூரம் வேதநாயகம் பிள்ளை வெண்மதி மாலை—பெண்கல்வி, பெண்மானம், மறுபதிப்பு — திருச்சி 1978 (ப.27, 28)
11. மாயூரம் வேதநாயகம் பிள்ளை வெண்மதி மாலை—பெண்கல்வி, பெண்மானம், மறுபதிப்பு — திருச்சி 1978 (ப.27, 28)
12. பாரதிதாசன், இசையமுது முதற்பகுதி — ப.50
13. பாரதிதாசன், இசையமுது முதற்பகுதி — ப.50
14. பாரதிதாசன், இசையமுது முதற்பகுதி — ப.50
15. பாரதிதாசன், இசையமுது முதற்பகுதி — ப.50
16. பாரதிதாசன், குடும்ப விளக்கு விருந்தோம்பல் ப.48
17. பாரதிதாசன், குடும்ப விளக்கு விருந்தோம்பல் ப.49
18. பாரதிதாசன், குடும்ப விளக்கு விருந்தோம்பல் ப.48
19. பாரதியார் கவிதைகள், பெண்கள் விடுதலைக்கும்மி ப.499
20. பரரதிதாசன், இசையமுது ப.52

21. பாரதிதாசன் இருண்டவீடு ப.14

22. பாரதிதாசன் இருண்டவீடு ப.46

23. பாரதிதாசன் கவிதைகள் ப.105

24. பாரதிதாசன் கவிதைகள் தொகுதி 3 ப.156

25. வாழ்வியல் விழுமியங்கள் (ப.4,5)

26. வாழ்வியல் விழுமியங்கள் ப.4

27. வாழ்வியல் விழுமியங்கள் ப.6

28. வாழ்வியல் விழுமியங்கள் ப.9

29. வாழ்வியல் விழுமியங்கள் ப.10

30. பாரதிதாசன் குடும்ப விளக்கு விருந்தோம்பல் ப.49

# இயல் நான்கு
# பெண்களின் திருமண உரிமைகள்

# இயல் நான்கு

# பெண்களின் திருமண உரிமைகள்

## முன்னுரை

திருமணம் என்பது பெண்களின் வாழ்க்கையில், இன்றியமையாத ஒன்றாகும். மனித நேயம் மேம்படவும், குடும்ப உறவுகள் அன்பின் பிணைப்பால் வாழ்ந்திடவும் ஏற்படுத்தப்பட்டது திருமணம். திருமண பந்தங்களினால் இல்லத்தில் மகிழ்ச்சியும், மனநிறைவும், ஏற்பட்டு நல்ல சிந்தனைகள் துளிர்விடும். அச்சிந்தனையால் விளையும் நல்ல செயல்கள், சமுதாயம் வளம் பெற உதவும். வளமிக்க சமுதாயத்தால் நாட்டில் செல்வ வளமும், ஒற்றுமையும் அமைதியும் உருவாகும். இவற்றிற்கு மூலகாரணம் இருமனங்களும் இணைகின்ற திருமணமே ஆகும்.

குடும்ப விளக்கு என்னும் நூலில் பல வகையான திருமண உரிமைகளைப் பற்றி பாவேந்தர் பாரதிதாசன் எடுத்துக் கூறியுள்ளார்.

## திருமண உரிமைகள்

பாவேந்தர் பாரதிதாசன் பெண்களின் திருமண உரிமைகளைப் பற்றிக்கூறும் வகையில், காதல் திருமணம், மனத்தோடு மனம் ஒன்றிய திருமணம், விதவை மறுமணம், பதிவுத் திருமணம், கலப்பு மணம், சுயமரியாதைத் திருமணம், விவாகரத்து மறுமணம் போன்றவற்றை ஆதரித்தும், பொருந்தா மணம் மற்றும் குழந்தைத் திருமணத்தை எதிர்த்தும் புரட்சியை ஏற்படுத்தியுள்ளார்.

**காதல் திருமணம்**

காதல் என்ற நோக்கில் பல புதுமைக் கருத்துக்களைத் தந்துள்ளார் புரட்சிக் கவி பாரதிதாசன். காதல் என்பது உயிர்களின் இயற்கை உணர்வாகும். அதை உடற்பசி என்றும், உள்ளப் பசி என்றும், உயிர்ப்பசி என்றும், பிறவிப் பசி என்றும் கூறுவதுண்டு. இளமையோடிருக்கும் ஆண், பெண் ஆகிய இருவர் உள்ளங்களிலும் உள்ள 'நற்பண்பு' ஒருவரை ஒருவர் கவரச் செய்கிறது. இத்தகைய தூய கவர்ச்சியே காதல் என்பதாகும்.

காதல் பண்டைத் தமிழரின் வாழ்வில் சிறப்புற்றிருந்தது. இதனை களவொழுக்கம் என்பர். தமிழர் கூறும் களவொழுக்கம் என்பது இருவருள்ளத்தும் உள்நின்று வெளிவந்த அன்பின் பெருக்கால் தலைவன் – தலைவி என்று வேற்றுமையின்றி இருவரும் ஒருவரால் ஒழுகும் (இணையும்) உள்ளப்புணர்ச்சியே ஆகும். இத்தகைய காதல் வாழ்விற்கு புத்துயிர் ஊட்ட விரும்பினார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

எடுத்துக் காட்டாக இளையோர் காதலையே மரபு புலவர்கள் பாடியிருக்க முதியோர் காதல் என்ற புதிய பாடுபொருளைத் தந்ததோடு மட்டுமல்லாமல் அவர் கூறும் பாணியிலும் படிப்போர் தம்மை நெஞ்சுருக வைக்கிறார்.

தமிழ்ச் சமுதாயத்தில் ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் சந்தித்து உள்ளத்தால் பிணைக்கப்பட்ட நிலையில் பெற்றோரிடம் தெரிவித்து மணம் புரிந்துகொண்ட நிகழ்வுகள் பண்டைக் காலத்தில் பரவலாக நிகழ்ந்து வந்தன.

"எந்தையும் யாயும் உணரக் காட்டி

ஒளித்த செய்தி வெளிப்படக் கிளந்தபின்

மலைகெழு வெற்பன் தலைவன் திரப்ப

நன்று புரி கொள்கையின் ஒன்றா கின்றோ"[1]

என்றும்,

"மாமயி லன்னார் மறையிற் புணர்மைந்தர்

காமங் கைவிட்டுக் கை கொள் கற்பு"[2]

என்ற பாடல்களின் மூலமாகத் தலைவனும், தலைவியும் ஒருவரை ஒருவர் தன் விழிகளின் மூலம் கண்டு தமக்கேற்ற வாழ்க்கைத் துணை இவரென முடிவு செய்த பின்பு அதனை உரிய முறையில் பெற்றோரிடம் தெரிவித்தவுடன் பெற்றோர் அவர்களுக்குத் திருமணத்தை நடத்தி வைக்கின்றனர் என்பதை அறிய முடிகிறது.

காதல் திருமணங்களுக்குப் பெண் வீட்டார் சில நேரங்களில் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர் என்றாலும் அவ்வெதிர்ப்பு தற்காலிகமானதாகவே இருந்துள்ளது என்பதை உணர்ந்து பெற்றோர்களும் மனம் மாறி திருமண உறவுகளை ஏற்படுத்துவதில் துணை நின்றுள்ளனர்.

"..... அவரும்

தெரிகணைநோக்கிச் சிலை நோக்கி கண்சே ந்து

ஒரு பகலெல்லாம் ஒருத்தெழுந் தாறி

இருவர் கட் குற்றமும் இல்லையால் என்று

தெரு மந்து சாய்த்தார் தலை"[3]

பெற்றோரின் எதிர்ப்பு ஏற்படுமோ என்று அஞ்சி தலைவி, தலைவனுடன் உடன்போக்கினை மேற்கொள்வதும் உண்டு. அந்நிலையில் தலைவியின் தாய் தன் மகள் அறநெறியின் வழியில் சென்றுள்ளதாகவே கருதுகிறாள்.

"சுரனனி யினியப வாகுக தில்ல

அறநெறி யிதுவெனத் தெளிந்தவென்

பிறைநுதற் குறுமகள்போகிய கானே"[4]

என்று தலைவனுடன் உடன் போக்கினை மேற்கொண்ட தன் மகளை வாழ்த்துகிறாள்.

தலைமக்களுடைய காதல் உறவினை அறிந்த பெற்றோர் மகிழ்ச்சியடைந்து உறவினருடன் கூடி நின்று திருமணத்தை நடத்தி வைத்ததையும் அறிய முடிகிறது.

"தெய்வமால் காட்டிற்று இவட்கென

நின்னை அப்பொய்யில் பொதுவற்கு அடை சூழ்ந்தார்

தந்தையொடு ஐயன்மார் எல்லாம் ஒருங்கு"[5]

பிற்காலத்தில் சாதி, மத வேறுபாடுகளும் பெண் அடிமைத்தனமும் ஆழமாக வேரூன்றிய பின்னர் இத்தகைய திருமணங்களுக்கு எதிர்ப்பு எழுந்தது. சாதி, மத வேறுபாடுகளைக் கடந்து திருமணம் செய்து கொள்பவர்களைக் கொடுமைக்குள்ளாகவும் கொலை செய்யவும் துணிந்தனர். இடைக்காலத்தில் சமூக நலத்தைச் சீரழிக்கும் வகையில் அறியாமையினால் தோன்றிய இவ்வழக்கினை மாற்றி நம் பண்டைய வழக்கினை மக்களிடையே மீண்டும் நிலைநிறுத்த முயன்றுள்ளார் ஆசிரியர்.

ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் விரும்பித் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்றும் அந்நிலையில் இருவரும் தம் காதல் துணைக்குத் துன்பம் வருமாயின் தானும் துயர் அடைந்து அதனைக் களைய முற்படுவர் என்றும் ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

"அன்பால் அவளும் அவனும் ஒருமித்தால்

துன்பமவ ளுக்கென்னில் துன்புறுவான் – துன்பம்

அவனுக் கெனில் அவளும் அவ்வாறே இந்தச்

சுவைமிக்க வாழ்வைத்தான் தூயோார் – நவையற்ற

காதல் வாழ் வென்று கழறினார் அக்காதல்

சாதல் வரைக்கும் தழைத்தோங்கும்"[6]

வேடப்பனும் நகைமுத்துவும், காதல் கொண்டதை அறிந்த பெற்றோர் மகிழ்ச்சியடைகின்றனர்.

"என் பிள்ளை உள்ளம் அவன்

ஈன்ற கிளிப் பிள்ளையுள்ளம்

ஒன்றானால் எங்கள்

பகையும் ஒழியாதோ !"[7]

என்று கூறி மணவழகர் மாவரசனாரிடம் முன்பு கொண்ட பகையையும் மறந்து திருமணம் செய்து வைக்க எண்ணுகிறார். மாவரசனாரும்,

"மணவழகன் தன் மகனும் என்றன்

இணையிலா மகளும் இணைந்தார் என்றால்

பெற்றவர்க் கதிலும் பேரின்ப மேது"[8]

என்று காதல் பற்றிய செய்தியைக் கேட்டதும் மகிழ்ந்து ஆவலுடன் திருமணம் செய்து வைக்க விரும்புகிறார்.

தம் மக்களின் காதலைப் பெற்றோர் இவ்வாறு வரவேற்க வேண்டும் என்று ஆசிரியர் இதனை வழிஉணர்த்துகிறார்.

**காதலின் வகைகள்**

பாரதிதாசன் அவர் தம் கதைப்பாடல்களில் காதல் புனைவுகளை இரண்டு வகையாக வகுத்துக் கூறியுள்ளார்.

அவை : 1. கண்டதும் காதல்

2. முதியோர் காதல் என்பனவாகும்.

**கண்டதும் காதல்**

தமிழர் காதலை விரிவாக நன்கு ஆராய்ந்து வ.சுப. மாணிக்கனார் "கண்டதும் காதல்" என்றளவில் தமிழர் காதல் அமைகிறது எனலாம். இக்காதல் நிகழ்வு,

"கண்டதும் காதல் கொள்ளாதார் யாரே"[9]

என்ற சேக்ஸ்பியரின் கூற்றிற்குப் பொருத்தமாக உள்ளதை அறியலாம்.

முதற் பார்வையே காதலாக உருவெடுப்பதை வள்ளுவப் பெருந்தகை,

"கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்

என்ன பயனும் இல"[10]

என நயமுடன் சுட்டிக் காட்டுகிறார். இக்கருத்தினை வலியுறுத்திக் கம்பராமாயணத்தில் புனைந்து உள்ள காட்சி ஒன்றினை,

"எண்ணரு நலத்தினாளினைய ணின்றுழிக்

கண்ணொடு கண்ணினை கவ்வியொன்றை யொன்று

உண்ணவு நிலைபெறா துணர்வு மொன்றிட

அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்"[11]

என்ற பாடலில் இராமனும், சீதாதேவியும், ஒருவரையொருவர் கண்ட நேரத்திலே மிக்க காதல் கொண்டமை புலனாகிறது. எனவே கண்டதும் காதல் வயப்படுதல் உலகில் பெருவழக்காக உள்ளது என்பதை புரட்சி கவி பாரதிதாசன் சுட்டிக்காட்டுகிறார்.

**முதியோர் காதல்**

திருமணம் என்ற உறவில் நாள் செல்லச் செல்ல ஒருவர் பால் ஒருவர் கொண்டுள்ள அன்பும், ஈர்ப்பும் வெளிப்படுகிறது. அதனால் தான் இளமை அழகு வயது முதிர்ந்த நிலையிலும் கணவன் மனைவியரின் அன்பு நிலை குலைவதில்லை.

"காமஞ் சான்ற கடைக்கோட் காலை

ஏமஞ் சான்ற மக்களோடு துவன்றி

அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்

சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"[12]

என்ற தொல்காப்பிய அடிகள் தலைவனும் தலைவியும் வாழ வேண்டிய முறையைப் பற்றிப் பேசுகின்ற முதுமைப் பருவத்தை அடைந்த பின்பும் தலைநாள் போன்ற விருப்பினை உடையவனாக இருத்தல் வேண்டும் என்றும், தலைவனது அன்பில் எந்தவித மாறுதலும் ஏற்படுதல் ஆகாது என்றும், தலைவியின் உள்ளம் விரும்புகிறது என்ற கருத்தினை பாரதிதாசன் வலியுறுத்திக் கூறுகிறார்.

"அண்ணாந் தேந்திய வனமுலை தளரினும்

நன்னெடுங் கூந்தல் நரையொடு முடிப்பினும்

நீத்தல் ஓம்புமதி பூக்கேழ் ஊர"[13]

என்ற நற்றினை வரிகளில் முதுமையிலும் கூட இருவரும் பிரிதல் கூடாது என்ற தோழியின் எண்ணம் புலப்படுகிறது.

குடும்ப விளக்கில் முதுமை அடைந்த தலைவன் தலைவி ஆகிய இருவரின் நெஞ்சினுள்ளும் ஒருவர் பால் ஒருவர் கொண்டுள்ள அன்பு முதிர்ந்த நிலையினை அடைகிறது.

தங்களுடைய கடமைகள் யாவும் முடித்து விட்டு ஓய்வு எடுத்துக் கொள்ளும் நேரத்தில், இருவரின் உள்ளமும் அலைகடல் ஓய்ந்ததைப் போல் அமைதி கொள்கின்றன. அந்த அமைதியில் இருவரின் உள்ளமும் கூடி இணைந்து பின்னிப்பிணைந்து வாழ்வதைக் காண முடிகிறது. முதுமைக் காதல் என்னும் பகுதியில் இரு முதுமை நெஞ்சங்களின் காதலை இளநெஞ்சங்களின் காதலை விட செம்மாந்த நிலையினை உடையதாக ஆசிரியர் படைத்துள்ளார்.

"அருகரு கிருவர் மிக்க

அன்புண்டு செயலே இல்லை"[14]

என்றும்,

"ஒளி தரும் அறைவிளக்கும்

ஒளிக்கப்பால் இவர்கள் வாழ்வர்

வெளியினை இருளும் கவ்வும்

இருட்கப்பால் விளங்குகின்றார்

எளிதாகத் தென்றல் வீசும்

என் பயன் ? அவர் அங்கில்லை

களித்தன மனம் இரண்டும்

கழறுமா றில்லை அஃதே"[15]

என்றும் வரும் அடிகளில் அவர்தம் உயிரும் ஒன்றோடு ஒன்று கலந்த அன்பையும் நன்குணரலாம். அறவழியில் வாழ்ந்து இன்பம் கொள்ளும் இரண்டு உயிர்கள் முதுமையில் தம் வாழ்நாளின் தூய செயல்பாடுகளை எண்ணி அமைதியும் இன்பமும் எய்துவதை,

"இந்நாட்டின் நலனுக்காக நல்லறம் இயற்றி வந்தோம்

எந்நாளும் பிறர்க்குத் தீமை எங்களால் நடந்ததில்லை

சின்னதோர் நன்று செய்தார் திறம் மறந்தறியோம் என்றே

இன்னிசை பாடும் அன்னார் இரண்டுள்ளம் இன்பம் கொள்ளும்"[16]

என்ற அடிகளில் காண முடிகிறது.

அவ்விருவரின் அன்பின் ஆழத்தை,

"முதியோளே வாழு கின்றாள்

என் நெஞ்சில் மூன்று போதும்"[17]

என்றும்,

"நினைக்கின்றாள் நினைக்கின்றேன் நான்

நிலைக்கின்ற தென்பால் இன்பம்"[18] என்றும்,

"எனக்கென்ன இன் அம் மூதாட்டி

உயிர் வாழ் நாள் ஆக லாற்றாள்

உவப்பூட்டும் எனக் கிவ் வையம்"[19]

என்றும், தலைவன் (மணவழகர்) கூறுவதன் மூலமும்,

"...... நெஞ்ச

மெத்தையில் துயிலுகின்றான்"[20]

என்றும், இந்நாள்

"பெய்கின்றான் என் நெஞ்சத்தில்

தேன் மழை பிரித லன்றி"[21]

என்றும்,

"மறவனைச் சுமக்கும் என்றன்

மன மட்டும் ஓய்த வில்லை" [22]

என்றும் குடும்ப விளக்குத் தலைவி (தங்கத்தம்மையார்) கூறுவதன் மூலமும் அறிந்து கொள்ளமுடிகிறது.

பெண்ணுரிமையை வற்புறுத்தும் பாரதிதாசன் காதல் மணம் கொண்ட கணவனும் மனைவியும் வாழ்வில் உள்ளம் கலந்து நிலையைக் காட்டும் உத்தியாக,

"உள்ளம் கவர்ந்தாளின்

உள்ளத்தைத் தான் கவர்ந்து

வெள்ளத்தில் வெள்ளம்

கலந்ததென விள்ளும் நிலை"[23]

என உள்ளத்தோடு உள்ளம் ஒன்றிய நிலையை வெள்ளத்தோடு வெள்ளம் கலந்த நிலையோடு உவமையாக்கிக் கூறுகிறார்.

**திருமணம்**

வளமான சமுதாயத்திற்குக் குடும்பங்கள் நாற்றங்கால்கள். குடும்பத்திற்கு அடிப்படையாக அமைவது திருமணம். இத்திருமணம் சமுதாய நிறுவனமாகக் கருதப்படுகிறது. எனவே திருமண உரிமை பெறுவது சமுதாயச் சமன்மைக்கு இட்டுச் செல்லும் வழி ஆகிய சமநிலை ஆக்க முயற்சியாகும்.

திருமணம் என்றவுடன் பிரதானமாகப்பேசப்படுவது வரதட்சணை, முதன் முதலாக திருமணமாகி புதிய குடும்பத்தில் இணைகின்ற பெண் தன் முந்தைய சார்புகளை உடனே களைந்து புதிய ஆளுமைகளுக்கு உட்படும்படி எதிர்பார்க்கப்படுகிறாள். பெண்கள் ஓரளவு படித்து, சுயமாக நிறைய சிந்திக்க ஆரம்பித்துள்ள இந்த கால கட்டத்தில் இது சற்று சிரமமான விசயம் ஆகும். ஆண்களே பாரம்பரியமாக குடும்பத் தலைவர்களாய் கணக்கில் கொள்ளப்படுகிறார்கள்.

ஓரிரு நூற்றாண்டுகளுக்கு முன் வரை நிலவி வந்த சம்பிரதாயப்படி கணவர்கள் இறந்தால், மனைவியும் உடல் உயிர் துறக்க வேண்டிய சார்பு உயிர்கள் என்ற அவல நிலை சட்டங்களாலும் சமூக சீர்திருத்தங்களாலும் மாற்றமடைந்திருந்தாலும், அறிவுப் பூர்வமாகவும், உணர்வுப் பூர்வமாகவும் பெண்களுக்குத் தனி அடையாளம் இன்றும் கிடைப்பதில்லை.

இன்று முற்போக்கான பெற்றோர்கள் சிலர், பெண் குழந்தையானாலும் அவர்கள் வளர்ச்சிக்காகவும், படிப்பிற்காகவும் ஆண் குழந்தைகளுக்கு இணையாகவும், மேலும் பலர்

பெண் குழந்தை யின் திருமணத்திற்கென்று கூடுதலாகவும் செலவு செய்து வரும் சூழலில் ஆண் குழந்தைகளுக்கு மட்டுமே பெற்றோர்களைப் பார்த்துக் கொள்ள வேண்டிய உரிமையும், கடமையும் உள்ளன என்று நிர்ணயிப்பது தவறான கருத்தாகும்.

இப்படி திருமண பந்தத்தினால் தான் பல சிரமங்கள் ஏற்படுகின்றன. அதுமட்டுமல்லாமல் விதவைகள், விவாகரத்தானவர்கள் மற்றும் திருமணம் செய்யாமல் தனித்திருக்கும் பெண்களுக்கும், அவப்பெயர் பாதுகாப்பின்மை போன்ற பிரச்சனைகளும் ஏற்படுகின்றது.

கணவனை இழந்த இளம் பெண்டிர் கைம்மை வாழ்க்கை விதவைக் கோலம், போன்றவை கொடுமையிலும் கொடுமையாக இருந்து வரும் நிலையினை உணர்ந்த சான்றோர் பலர் பிற்காலத்தே அக்கொடுமையை குறைக்கவும், நீக்கவும் முற்பட்டனர்.

இடைக் காலத்தில் விதவை மணம், குழந்தை மனத்தின் கொடுமை பொருந்தா மணம், பலதார மணம், கலப்பு மணம், சுயமரியாதைத் திருமணம், பதிவுத் திருமணம், விவாகரத்து மறுமணம் போன்ற சமூக சீர்திருத்தச் சிந்தனைகளைக் களைய வேண்டும் என்று பாரதிதாசன் கூறுகிறார்.

**விதவைத் துயர்**

சங்க காலத்தில் கணவனை இழந்து தவிக்கும் பெண்கள் வளை நீக்கம் செய்தல், கூந்தல் மழிப்பு போன்ற கைம்மைக் கோலங் கொண்டு அல்லி உணவு உண்டு வாழ்ந்த நிலை சுட்டப்படுகின்றது. கணவன் இறந்த நிலையில் உணர்வு மிகுதியால் தீக்குளித்து உயிரை விடும் பெண்களையும் காண முடிந்தது.

இளம் வயதில் கணவனை இழந்து கைம்மையில் வாழும் பருவப் பெண்களின் இளமையும், உணர்வு கருதி அவர்களை வேரிற் பழுத்த பலா என்றும் குளிர் வடிக்கின்ற வட்ட நிலா, தென்றல் சிறந்திடும் பூஞ்சோலை, நறுஞ்சிதனப் பூமாலை நலஞ் செய் நறுங்கனி நறுந்தேன் பொற்குடம் என இயற்கையின் இனிய கூறுகளாகப் பாவேந்தர் பாரதிதாசன் குறிப்பிடுகிறார்.

கணவனை இழந்து கைம்மைத் துயரில் வருந்தி உயிர் விடத் துணிந்த இளம் பெண் ஒருத்தி தன் இளமை உள்ளங்கொண்ட இன்ப உணர்வை அடக்கவோ, அழிக்கவோ வழி தெரியாமல் புலம்பும் குரலில் பாரதிதாசன் நடைப்பிணமாய் உலவும் விதவைப் பெண்களின் கடுந்துயரைக் காட்டியுள்ளார்.

மணங் கொண்ட ஆடவர்கள் இறந்து விடுதல் மங்கையரின் பிழையல்ல என்பதை உணர்த்தும் வகையில், அப்பெண் மணவாளன் இறந்து விட்டால் மங்கல நாணும், நல்லாடை அணிவகையும், புனைமலரும், குங்குமமும், இழந்தாலும் அவள் பொன்னுடலும் நல்லுணர்வும் இருப்பதால் இயற்கை நியதி, மூலம் இன்பத்தை நாடுதலை எடுத்துக் காட்டி கைம்மையைச் சுமத்தி இச்சமுதாயம் தங்களைத் தண்டிப்பது தகுமா ? என்று நெடுவானையும், நிறைபுனலையும் கேட்பதாகக் கவிஞர் காட்டுகிறார் மேலும் வானில் தோன்றும் நிலவைப் பார்த்து,

"தனையடக்கிக் காதலினைத் தவிர்த்து வாழும்
சகமிருந்தால் காட்டாயோ ? நிலவே நீ தான்"[24]

என்று விதவை கேட்பதாக அமைந்த கூற்றில், காதல் உணர்வு என்பது உயிரும் உடலும் பற்றிய உண்மைத் தேவை என்பதும், அவை இளம் விதவையர்க்கு மறுக்கப்படுதல் கொடுமை என்பதும் சுட்டப்படுகின்றது.

விதவைப் பெண்களை சமுதாயம் ஏளனமாகப் பார்த்து, தொட்டது துலங்காதென பெண்களை ஒதுக்கியது, மங்கல காரியங்களில் விதவைகள் பங்கெடுத்துக் கொள்ளக் கூடாது என்றும், கணவன் சொத்தில் பங்கில்லை என்ற நிலைக்கும் தள்ளப்பட்டனர். தற்காப்புத் துணை வேண்டி மறுமணம் செய்து கொள்ள முடியாது. இவ்வாறாக பால்ய விதவைகள் வாடி வழியின்றி கற்பைக் காக்கவும் திறமின்றிச் சமுதாயத்தில் நடைப்பிணமாயினர்.

விதவைப் பெண்களின் நிலை கண்டு வருந்தி அந்நிலை மாற்றிட விதவை மறுமணத்தை ஆதரித்து அவர்களுக்காகக் குரல் கொடுத்துள்ளார். பாவேந்தர் பாரதிதாசன், பெரியார் ஒருமுறை ஒரு ஜீவனைப் பட்டினியாகப் போட்டுக் கொல்வதிலும் ஒரு பெண்ணை விதவையாக வைத்து சாகாமல் காப்பாற்றுவது கொடுமையல்லவா? என்று விதவை நிலையின் துயரத்தை எடுத்துரைத்தார்.

பெரியார் வழியில் பகுத்தறிவுக் கருத்துக்களைப் பரப்பிய பாவேந்தரும், விதவைக்கு மறுமணம் செய்து கொள்ள உரிமை வேண்டும் என்ற இடத்தில்,

'பசியாத நல்வயிறு பார்த்ததுண்டோ'

என்ற வரியில் வாழ வேண்டும் எனும் விருப்பம் இயல்பானதே ஆகும் என்ற கருத்தினை சுட்டிக் காட்டியுள்ளார்.

பெண்ணொருத்தி கணவனை இழந்தால் மறுமணம் செய்து கொள்வதை மதம் மறுக்கிறது. மனித இயற்கை உலக இன்பத்தை அனுபவிப்பதென்றும், அதற்குத் தடையாக இருப்பதே சுகாதாரக் கேடு என்றும், பெண்களும் தவறான வழியில் சென்று மாண்டுவிடுகின்றனர் என்றும் பாவேந்தர் சுட்டிக் காட்டி, விதவை மறுமணத்தின் இயன்றியமையாமையை உலகுக்குப் புலப்படுத்தியுள்ளார்.

கைம்மைக் கொடுமை, கைம்மைப்பழி, கைம்மை நீக்கம் என்னும் தலைப்புள்ள சீர்திருத்தக் கவிதைகள், விதவைகளும் சமுதாயத்தின் ஓர் அங்கம் என்ற கருத்தினை வலியுறுத்தியுள்ளது. குழந்தை மணத்தின் கொடுமை, பால்ய விவாகக் கொடுமை, போன்றவற்றை பாரதிதாசன் தனது கட்டுரைகள் மூலம் விளக்கி சமுதாயத்தில் இருந்து இக்கொடிய மணம் நீக்கப்பட வேண்டும் எனக் குரல் கொடுத்துள்ளார்.

## கைம்மை

கைம்மை என்பது விதவை நிலையில் ஒன்றாகும். கைம்மை, துணையிழந்த ஆணுக்கும், பெண்ணுக்கும் ஏற்படும் பொதுநிலை என்றாலும் அதன் கோலமும் கொடுமையும் ஆடவருலகைச் சிறிதும் அண்டாமல் இந்த உலகமானது பெரும் பீடையாய் அவர்களை வருத்தியும், எள்ளியும், வாழும்போதே கொல்லும் கொடுமை குறித்து,

"ஆடவரின் காதலுக்கும் பெண்கள் கூட்டம்

அடைகின்ற காதலுக்கும் மாற்றம் உண்டோ ?

பேடகன்ற அன்றிலைப் போல் மனைவி செத்தால்

பெருங்கிழவன் காதல் செய்யப் பெண் கேட்கிறான்

வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்

மணவாளன் இறந்தால் பின் மணத்தல் தீதோ ?"[25]

"பாடாத தேனீக்கள் உலவாத் தென்றல்

பசியாத நல்வயிறு பார்த்த துண்டோ ?"[26]

என மங்கையர் சார்பில் கவிஞர் வாதாடுகின்றார். தேனீக்கள் பாடிப் பறப்பதும், தென்றலானது உலவித் தவழ்வதும் இயற்கையின் மாறா இயல்பே ஆகும். வயிறு பசி கூர்வது நலமிக்க உடல் வளத்தின் இயற்கைத் தேவை. இவற்றைக் காட்டி இளம் பருவத்திலே துணையிழந்த மகளிர் வேறுதுணை நாடுதலை உடல் அமைப்பின் இயல்பாகவும், உளவியலின் தேவை பசியாகவும் குறிப்பிடுகின்றார்.

பருவம் எய்துவதற்கு முன்பே மணம் முடிக்கப்பட்டு அந்நிலையில் கணவனையிழந்து பின்னர்க் கண்ணிமையுற்ற பெண்கள் வாழ்வின் இன்ப உணர்வுகள் இதயத்தில் ஊற்றெடுக்கும்போதே கைம்மைத் தீயால் உருகும் நிலையடைந்தனர். துணையிழந்த மகளிர்க்குத் தோன்றும் காதல் பொய் என்று பிதற்றும் புலவர்களை எச்சரிக்கும் கவிஞர்,

"அணையாத காதலினை அணைக்கச் சொன்னீர்

அணை கடந்தால் உங்கள் தடை எந்த மூலை"[27]

என்று காதல் உணர்வு மூடக் கட்டுப்பாட்டுக்கு அடங்கி ஒழியாது என்பதைக் கூறுவதுடன் விதவைப் பெண்டிரின் காதலானது தீயவர்தம் தடைகளைத் தகர்க்கும் ஆற்றலுடையது என்பதையும் சுட்டிக் காட்டுகிறார்.

"கூண்டில் கிளி வளர்ப்பார் அதன்

விருப்பறிந்து வேண்டியது தருவார்"[28]

ஆனால் மாண்டவர் மாண்ட பின்னர் அவன் மனைவி உள்ளத்தை ஆண்டையர் காண்பதில்லை. அடிமைப் பெண்களின் கதி இதுவேயாகும். சங்க காலத்தில் இருந்தே பெண்கள் கணவனை இழந்தோர் கைம்மையே மேற்கொண்டனர்.

சிலப்பதிகாரத்தில் மாதவி மறுமணம் செய்து கொள்ளவில்லை. பிள்ளை பெறாத பெண்கள் இளமையாக இருந்தால் மறுமணம் செய்து கொள்வது இன்றியமையாததாகும். பிள்ளை பெற்றால் அவர்கள் மேல் அன்பு பரவி அவள் தாயாகிவிடுகிறாள். இவ்வாறாக குழந்தைகளைக் கொண்டு கணவனை மணக்கவும், துறக்கவும் பெண் மனதால் மட்டுமே முடியும் என்ற கருத்தினை வலியுறுத்துகிறார்.

வானிடை ஏறி கடலை வசப்படுத்தி புன்மை நீக்கிப் புழுதி, குப்பை, உமியெல்லாம் பழரசம் போலாக்கிப் பயன்படுத்தும் உலகில் மாலையிட்ட மணவாளன் இறந்து விட்டால் அவனை ஆலையிட்ட கரும்பாக்கி உலக இன்பம் அணுவளவும் காணாவண்ணம் சாகச் செய்யும் அநியாயம் ஒழிக்கப்பட வேண்டும் என்கிறார்.

"மாண்டவள் மாண்ட பின்னர் அவனின்

மனைவியின் உள்ளத்தை

ஆண்டையர் காணாத அடிமை பெண்ணின் கதி"[29]

என்று நினைத்து அகம் (மனம்) நொந்து பாடுகின்றார். கோதையர் மறுமணம் செய்யத் தூண்டுதலே மாண்பு என்று வலியுறுத்துகின்றார்.

பாரதிதாசன் கைம்மைக் கொடுமையை எண்ணி வாடும் நங்கையை தலையற்ற உடல், தமிழற்ற நாடு என்று கூறுவதாகவும், மடிந்த கணவனை மறுபடியும் எண்ணி வாடுகின்ற விதவை,

"கேளாத செந்தமிழ் கேட்பதும்

போனதோ அத்தானே"[30]

என்று புலம்புவதாகக் காட்டியுள்ள இடங்கள் பாவேந்தரின் தமிழ் மொழி உணர்ச்சியை எடுத்துக்காட்ட வல்லது ஆகும். மேலும்,

கண்ட கண்ட பெண்களை நாடிச் செல்லும் ஒழுக்கக் கேடர்களை புதிய செவ்விதழ் உண்டு பின்னும் கரிய நெய்தல் பூவில் புரண்டு கண்ட பெண்களைக் கற்பழிக்க எண்ணங் கொண்டு திரியும் குண்டரைப் போல் வண்டு எனும் உவமையின் வழிச் சாடுகின்றார்.

கணவன் இறந்துவிட்டால் 'உடன் கட்டை' ஏறுதல் பெண்களுக்கே உரிய மரபாக இருந்தது என்ற கருத்தினை ஆசிரியர் வலியுறுத்துகிறார்.

**உடன்கட்டை ஏறுதல்**

கணவன் இறந்தவுடனேயே மனைவியும் அவனுடன் நெருப்பில் பாய்ந்து உயிர் விட வேண்டிய உடன் கட்டை ஏறும் வழக்கம் ஏற்பட்டது. அச்சமுதாயத்தில் மெல்ல பெண்கள் பின்தள்ளப்பட்டனர். அதாவது கணவன் இறந்த பின்னர் வாழும் பெண்கள் சமுதாயத்தில் வாழ இயலாத நிலை ஏற்பட்டது.

ஆண்கள் பலர் அவளை வாழ விடாமல் துன்புறுத்தி சமுதாயத்தை வெறுக்கும் நிலை ஏற்படுத்தினர். ஆகவே ஆடவன் இறந்தவுடன் அன்பினாலே ஒரு பெண் தானே விரும்பித் தீப்பாய்ந்தாள் என்ற நிலை மாறி, சமுதாயத்தில் வாழ முடியாதே என்ற கொடுமை காரணமாகத் தீப்பாய்ந்தாள் என்பதே வரலாறு ஆயிற்று. திருமலை நாயக்கர் இறந்தவுடன் 1400 பெண்கள் உடன் கட்டை ஏறியதாக வரலாறு கூறுகிறது.

**விதவை மறுமணம்**

புறாக்களின் காதல் வாழியே மேலோங்கிய கற்பொழுக்கத்தைக் கூறுகின்ற பாரதிதாசன், பெண்புறா தன் ஆணின்றிப் பிறிது ஒன்றுக்கு உடன்படாக் கற்புச் சிறப்பையும், ஆண் புறா தன் துணையின்றி வேறொரு பெட்டை பேரெழிற் சிறப்புடன் நின்றாலும் அதனைத் திரும்பியும் பார்க்காத ஒரு செம்மையைக் குறிப்பிட்டு,

"ஒரு புறா இறந்திட்டால் தான்

ஒன்று மற்றொன்றை நாடும்"[31]

எனக் கூறுவதன் மூலமாக விதவை மறுமணம் பற்றிய தம் கருத்தினை விளக்குகின்றார்.

தாலி இழந்த பெண்ணின் மீது கொடுமைகளைச் செய்வது வெந்த புண்ணில் வேலெய்து கொல்வதைப் போன்றதாகும் என்று புலம்புகின்றாள். அப்பெண்ணின் தாய் வைதீகத்தின் கொடுமையை அதன் ஒவ்வொரு கூறாகச் சிதைந்து வரும் சுயமரியாதை இயக்கத்தின் செயல்பாடுகள் யாவும் அத்தாயின் நினைவிற்கு வருகின்றது. கைம்பெண்களின் மறுமணத்தை ஆதரித்தும் செயல்படுத்தியும் வருகின்ற அவ்வியக்கத்தவர்களின் முயற்சியால் தான் மக்களின் வாழ்வில் மீண்டும் சுடர் ஒளி பிறக்கும் என்று நம்புகின்றாள்.

அந்நம்பிக்கை,

"வருந்தாமற் கைம்பெண் முகம்

திருந்துமோ இச்சமூகம்

மறுமணம் புரிவது சிறுமை என்றறைவது

குறுகிய மதியென அறிஞர்கள் மொழிகுவர்"[32] என்ற பாடலாய் வெளிப்படுகிறது.

கண்ணொத்த தன் மகள் பொற்சிலையோல் இளமை அழகுடன் திகழும் அவள் மறுமணம் செய்து கொள்ளத் தாயே துணையாக நிற்கின்றாள்.

மனித நேயம் செயல் வடிவம் கொள்ளும்போது, தான் அது முழுமை பெறுகிறது. மக்களின் கைம்மைத் துயர் கண்டு பொறுக்க மாட்டாத தாய் அவளின் மறுமணத்திற்குத் துணை நிற்பதை புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எடுத்துக் காட்டுகிறார்.

**பொருந்தா மணம்**

பொருந்தா மணம் என்பது பெண்ணினதின் மீது சுமத்தப்பட்ட களங்கமாகும். குழந்தைகள் இல்லாத போதும், தொடர்ந்து பெண் குழந்தைகளாகவே பிறந்து ஆண் குழந்தை பிறக்காத போதும், மனைவி நோயுற்ற போதும், மனைவி இறந்த போதும், கணவன் மறுமணம் செய்து கொள்ள இச்சமூகம் ஒப்புதல் வழங்கியது.

இதன் விளைவே பெரும்பாலும் பொருந்தா மணமாகக் கருதப்படுகிறது. அதாவது வயது முதிர்ந்த ஆடவன் இளம் வயதுடைய பெண்ணைத் திருமணம் செய்து கொள்வதே ஆகும். எடுத்துக்காட்டாக,

வயதான கிழவனுக்கு வாழ்க்கைப் பட்ட ஒரு பெண் தன் தாயிடம் வெளிப்படையாகவே, கணவனாகிய கிழவனுடன் வாழ முடியாது என்று துணிந்து அவள் கூறுகிறாள்,

"சோளச் சோறு தின்ன மாட்டேன்

சொன்ன படி கேட்க மாட்டேன்

நரைச்ச கிழவன் கிட்டே

நானிருந்து வாழ மாட்டேன்"[33] என்பது அவருடைய துணிந்த செயலாகும்.

கிழவனுடன் வாழும் வாழ்க்கையானது நெல்லுச் சோற்றினைப் போல் சுவையுடன் இல்லை என்றும், மாறாக சுவையற்ற சோளச் சோறு போல் உள்ளது என்றும் ஆசிரியர் எடுத்துக் கூறுகிறார்.

மூட மணத்தால் முதியவனுக்கு வாழ்க்கைப்பட்ட இளம் பெண் ஒருத்தி காதல் கரும்பான இரவில் இன்பங் கொள்ளும் இனிய கனவுடன் கணவனை நெருங்க முதுமை தந்த உடல் சோர்வினால் கிழவன் துயில்வது கண்டு வெறுத்து நஞ்சுண்டு இறக்க முயலும் நிலையில் அவளின்தாய்,

"மண்ணாய்ப் போக மண்ணாய்ப் போக

மனம் பொருந்தா மணம் மண்ணாய் போக"[34]

எனச் சாபமிடுகிறாள்.

இத்தகைய மூட மணத்தினால் தன் வாழ்வைப் பலிகொடுத்த இளம் பெண்ணைத்,

தொண்டு கிழவன் விழிப்பான் என்று

"கெண்டை விழிகள் மூடாக் கிளிமகள்

காதலும் தானும் கனலும் புழுவுமாய் ஏங்கினாள்"[35]

எனக் காட்டுவது மணங் கொண்ட நிலையிலும் கைம்மை ஒத்த வாழ்வு நடத்தும் கொடுமை பொருந்தா மணத்தின் தீமையினை உணர்த்துகின்றது.

வாயின் கடையில் எச்சில் வழியக் குறட்டையுடன் கண் குழிந்து, நரைத்த தலையுடன், எலும்பும் தோலுமாய்ச் சொந்த மருமகக் கிழவன் தூங்குகின்ற நிலையினைக் கண்டு இளமையும் எழிலும் ததும்ப மகள் அருகே கிடக்கின்ற நிலையை,

"காதல் ததும்பக் கண்ணீர் ததும்ப"[36]

என்ற வரிகளில் கவித்திறன் புனையப்பட்டுள்ளதை ஆசிரியர் எடுத்துச் கூறுகிறார்.

**குழந்தை மணம்**

வைதிக நெறியில் பெண்களுக்கு விதிக்கப்பட்ட கொடுமைகளிலும் கொடுமையானது, குழந்தை மணம் என்பதாகும். வருண நெறியைக் காக்கவும், சாதிக் கலப்பைத் தடுக்கவும் வைதிகம் கண்ட ஒரு வழியே குழந்தை மணம் என்பதாகும். இக் குழந்தை மணத்தை உத்தமமான மணம் எனப் பாராட்டுவது மனுதர்மம் ஆகும்.

குலம், நல்லொழுக்கம், இவைகளாலுயர்ந்தவனாயும், பெண்ணுக்குத் தகுந்த தோற்றமுள்ளவனாயும், தன் சாதிக்குத் தக்க சாதியுள்ளவனாயும், இருக்கிற வாலிபனுக்குத் தனது பெண் எட்டு வயதுக்குட்பட்டு இருந்தாலும் விதிப்படி திருமணம் செய்து கொடுத்து விடலாம் என்று எட்டு வயதுப் பெண்ணுக்கு மணம் முடிக்க பரிந்துரை செய்கின்றது.

பெண்ணுக்கு வயது வரம்பைக் குறித்து, முப்பது வயதுள்ள வாலிபனுக்கு அழகான பன்னிரண்டு வயதுள்ள பெண்ணையும், இருபத்திநாலு வயதுள்ள வாலிபனுக்கு எட்டு வயதுள்ள பெண்ணையும் திருமணம் செய்து வைக்கலாம். இதற்கு முன் திருமணம் செய்து கொண்டால் வேத மோதல் முதலிய தர்ம காரியம் கெடும் என்ற கருத்தினை ஆசிரியர் வலியுறுத்திக் கூறுகிறார்.

குழந்தை மணக் கொடுமைக்கு ஆட்பட்டுக் கணவனிறக்கக் கைம்மையடைந்த சிறுமியின் பிள்ளைப் பருவ நிலை குறித்து,

"கூவத் தெரியாக் குயிலின் குஞ்சு
தாவாச் சிறுமான் மோவா அரும்பு"[37]

எனத் தாலியிழந்து தன் தந்தையின் வீட்டில் இருக்கும் சிறுமியின் அவல நிலையைச் சுட்டிக் காட்டுகிறார். அவ்விதவைச் சிறுமி தந்தை வீட்டில் வாழும் போது தன் தந்தையும் அவர்தம் இரண்டாம் மனைவியுமான சிற்றன்னையும் தனி அறையில் துயிலச் செல்லத் தான் வெளியில் உறங்க வேண்டிய நிலையை எண்ணித்,

"தாமும் அவளும் தணியறை செல்வார்

நான் ஏன் வெளியில் நாய் போற்கிடப்பது"[35]

எனக் கூறுதல் தனது கைம்மை நிலையுணரா இளமையுள்ளத்தின் ஏக்கக் கொதிப்பாகும்.

இவ்வாறாக குழந்தை மணக் கொடுமையை தடுத்து நிறுத்தப்பட்டாக வேண்டும் என்ற பெரு முயற்சியால் மக்கள் மன்றத்திலும், சட்ட மன்றத்திலும் போராடிய அறிஞர்கள் பலர் ஆவர். அவர்களுள் ஒருவரான அரிவிலாச சாரதா என்பவர் கொண்டு வந்த குழந்தை மணத் தடுப்பு மசோதா, வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகும். இம் மசோதாவின் மீது தமிழ்நாடு சட்ட மன்றத்தில் பேசிய டாக்டர் முத்துலட்சுமி அம்மையார்.

குழந்தை மனைவி என்ற நிலையிலும் குழந்தைத் தாய் என்ற நிலையிலும், பெரும்பாலும் விதவை என்ற நிலையிலும் பெண் குழந்தைக்குப் பிறப்பு முதல் இறப்பு வரை வாழ்நாள் முழுவதும் துன்பத்தைத் தருவதாகக் குழந்தை மணம் அமைகிறது. மில்லியன் கணக்கான சிறுமிகளின் உடல் நலன் மகிழ்வு வருங்கால மனித இனத்தின் நலன் இவற்றைக் கருதி இக்குழந்தை மணம் தடுக்கப்பட வேண்டியது மிகமிக இன்றியமையாததாகவும், உடனடித் தேவையாகவும் உள்ளது என்ற கருத்தை எடுத்துரைத்தார்.

**பலதார மணம்**

பலதர மணங்கள் பெருகிய போது மனைவியுடன் வாழும் வயது முதிர்ந்த ஆடவர்கள் இரண்டாம், மூன்றாம், நான்காம், தாரமாய் இளம் வயது பெண்களை திருமணம் செய்து கொண்டு, பின் மாண்ட பெண்களை திருமணம் செய்து கொண்டு இளம் பெண்களின் கொடுமை குறித்த கைம்மை வாழ்வு ஒரு நிலையாகும்.

ஒத்த பருவத்தில் மணம் நடத்தும் கணவன் இறந்தமையால் கைம்பெண் ஆகும் நிலை மற்றொன்றாகும்.

பெண்களுடைய விகிதாச்சாரம் அதிகமான காரணத்தால் அதிகாரத்தில் இருந்தோரும் பணவசதி படைத்தோரும் பலதர மணம் செய்து கொள்கின்ற அவல நிலை ஏற்பட்டது என்ற கருதினை ஆசிரியர் சுட்டிக் காட்டுகிறார்.

**கலப்பு மணம்**

பெண் விடுதலைக்கும் சாதி ஒழிப்பிற்கும் அடிப்படையாக அமைவது கலப்பு மணம் ஆகும். ஆண் ஒரு சாதியாகவும், பெண் ஒரு சாதியாகவும் இருந்து தம்முள் எழுந்த அன்பினால் இல்லறம் காண்பதே கலப்பு மணத்தின் அடையாளமாகும். சாதி ஆணவம் மேலோங்கும் சூழலில் சாதி தருமம் கெட்டு விடக் கூடாது, என்று நினைக்கும் ஒரு தந்தையை மகள் மாற்றியதுடன், தன் திருமணத்திற்கு தந்தையின் இசைவையும் வாழ்த்தையும் பெற்று விடும் ஒரு மகளைப் பாட்டுடைத் தலைவி ஆக்கியுள்ளார் புரட்சிக் கவி பாரதிதாசன்.

கலப்பு மணம் வாழ்க என்று தலைப்பிட்ட அப்பாடல் வழங்கும் செய்தி பின்வருமாறு.

எனக்குப் பகைமேல் உனக்குக் காதலா ? என்று ஊர் நாட்டான்மை தம் மகளைக் கண்டிக்கின்றார். தமிழ்ச் சமூகத்தின் தொடக்க நிலையிலும் வளர்ச்சி நிலையிலும் சாதி இடம் பெறவில்லை. அன்பின் ஐந்திணையைப் போற்றி நெஞ்சுதனை தமிழ் அகத்திணை மரபில் சாதிக்கு இடமில்லை. செல்வர் ஏழை என்ற பாகுபாட்டிற்கும் இடமில்லை. செல்வக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த ஒருத்தி தன் கணவனுடன் வறுமையில் துன்புறும் நிலையிலும் தன் தந்தை கொடுத்தனுப்பிய செல்வத்தைப் புறக்கணித்த செய்தியை நற்றிணைப் பாடல் ஒன்றின் மூலம்,

"ஏவல் மறுக்குஞ் சிறுவிளையாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டு உணர்ந்தனன் கொல்
கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்
கொடுத்த தந்தை கொழுஞ் சோறு உள்ளாள்
ஒழுகு நீர் நுணங்கறல் போலப்
பொழுது மறுத் துண்ணுஞ் சிறுமது கையளே"[39]

எனப் போற்றுகிறார்.

பாரதி தாசன் கலப்புமணத்தைப் பற்றி கூறும் போது,

"காட்டோமே சாதிமணம்
கலப்பு மணம் ஒன்றே
நல் வழிக்குக் கைகாட்டி"[40]

எனக் கூறுகின்றார்.

**கலப்பு மணத்தால் விளையும் நன்மைகள்**

சண்ட மாருதம் எனும் இதழின் ஆசிரியரான திரு.பொன்னம்பலனார் – சுலோசனா ஆகியோர் இராகு காலத்தில் செய்து கொண்ட திருமணத்தை, ஜாதியையும் மூட நம்பிக்கையையும் ஒரே வெடிகுண்டு வீசித் தகர்த்த திருமணமென்று புதுவை முரசு இதழில் பாவேந்தர் பாடியுள்ளார்.

சாதி, வேற்றுமை அழிய மக்கள் நிகர் எனும் கொள்கை மலர கலப்பு மணமே சிறந்தது என்று கலப்பு மணம் வாழ்க என்ற கவிதையிலும் சாதி எனும் மனவிருள் நீங்கக் கல்வியே வேர் என்று மற்றொரு கவிதையிலும் எடுத்துக் காட்டியுள்ளார் பாவேந்தர்.

மேலும், ஒரு கலப்பு மணத்தால் இரண்டு குடும்பம் தன் மூடத்தனமாகிய ஜாதிக் கொள்கையினின்று விடுபடுகின்றன. நாட்டின் சமத்துவத்திற்கும், ஆடவர் பெண்டிர் சமத்துவத்திற்கும் கலப்பு மணம் ஏற்ற வழியாகும் என்று கலப்பு மணத்தால் விளையும் நன்மைகளைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

**சுயமரியாதைத் திருமணம்**

சுயமரியாதைத் திருமணம் என்பதன் முக்கியத் தத்துவம் கூட்டு வாழ்க்கையில் ஆணுக்கும், பெண்ணுக்கும் எவ்வித வித்தியாசமோ, உயர்வு தாழ்வே இல்லை. என்பதும் சகல துறைகளிலும் சம சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும் என்பதுமேயாகும் என்று ஆசிரியர் விளக்கம் கொடுத்துள்ளார்.

(சிந்தனையாளர் கழக வெளியீடு 1974, 190)

சுயமரியாதை திருமணச் சட்டம் தமிழ் நாட்டில் உள்ள இந்துக்களுக்கு மட்டுமே பொருந்துவதாகும்.

பெரியவர்கள் மற்றும் உற்றார்உறவினர்கள் முன்னிலையில் உறுதி மொழி எடுத்துக் கொண்டு சுயமரியாதை திருமணம் செய்து கொள்ளலாம்.

தந்தை பெரியார் சுயமரியாதைத் திருமணத்தை பிரபலப்படுத்தினார். மணமக்கள் தாம் ஒருவரை ஒருவர் கணவன் அல்லது மனைவியாக ஏற்றுக் கொள்வதாக இருவரும் உறுதி மொழி எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர்களுக்கு வேறு சடங்குகள் செய்வதற்கு அனுமதி இல்லை என்றும் எடுத்துக் கூறுகிறார்.

**பதிவுத் திருமணம்**

பண்டையக் காலத்தில் தமிழகத்தில் திருமணங்கள் தமிழர்களுக்குரிய சடங்கு முறைகளுடன் நிகழ்த்தப் பெற்று வந்தன. நல்லாவூர்க் கிழாரின் அகநானூற்றுப் பாடல் **(86)** ஒன்று இதனைப் புலப்படுத்துகிறது. இச்செய்தியினை,

"நனை விளை நறவின் தேறல் – மாந்தி
புனை வினை நல்லில் தருமணல் குவைஇ
பொம்மல் ஓதி எம்மகள் மணனென
வதுவை அயர்ந்தனர் நமதே"[41]

என்ற அகநானூற்றுப் பாடலின் மூலம் அறிய முடிகிறது.

ஆரியர் வருகைக்குப் பிறகு இந்நிலை மாறியது. தமிழர்கள் ஆரியர்களை முதன்மையாகக் கொண்டு திருமணங்களை செய்து வைத்த போது, ஆரியர்கள் தமிழர்களுடைய திருமணங்களில் ஆரிய சடங்கு முறைகளைப் படிப்படியாகப் புகுத்தினர். அந்தணர் மந்திரம் ஓதி, தீ வளர்த்து அதன் முன்னிலையில் திருமணம் நடத்தி வைப்பது

என்பது தமிழருடைய திருமணங்களில் நிலையான இடம் பெற்று விட்டது என்பதை அறிய முடிகிறது.

இவ்வரலாற்றை அறியாதோர் தமிழர் திருமணமுறைகளில் ஆரிய சடங்கு முறைகளைக் கண்டவுடன் தமிழகத்தில் திருமணச் சடங்குகளை வகுத்தவர்கள் ஆரியர்களே என்று கூறுவாராயினர்.

அக்கருத்திற்குக் துணையாக,

"ஐயர் யாத்தனர் கரணம் என்பர்"[42]

என்ற தொல்காப்பிய வரியில் ஐயர் என்ற சொல்லானது அந்தணரைக் குறிப்பதன்று,

"தெய்வமால் காட்டிற்று இவட்கென
நின்னை அப்பொய்யில் பொதுவற்கு அடை சூழ்ந்தார்
தந்தையொரு ஐயன்மார் எல்லாம ஒருங்கு"[43]

என்று வரும் கலித்தொகை பாடல் அடிகளில் ஐயன்மார் என்ற சொல் தமையன்மாரைக் குறிப்பதாக அமைந்தள்ளது. அதுமட்டும் அல்லாமல் வயதில் மூத்தவர்களை ஐயா என்றும்குறிப்பதாகத் தமிழ் ஆசிரியர்களை ஐயா என்று அழைப்பது இன்றளவும் நடைமுறையில் உள்ள வழக்கமாகும். எனவே தொல்காப்பியத்தில் கிறிக்கப்பட்டுள்ள ஐயர் என்ற சொல் தமிழ்ச் சான்றோர்களைக் குறிப்பதே ஒழிய அந்தணர்களைக் குறிக்கும் சொல்லாக வழங்கப் பெறவில்லை என்பதை அறியலாம்.

திருமணத்தைப் பதிவு செய்யும் முறை சமூக ஆர்வலர்களால் உருவாக்கப்பட்டது. இவற்றில் ஈடுபாடு கொண்ட பாரதியதாசன் காப்பியத்தினுள் மணமக்களுக்குப் பதிவுத் திருமண முறையில் திருமணம் செய்து வைக்கிறார்.

திருமணத்தில் இன்னிசை முழுங்குகிறது. காலுக்குச் சிறாய், மேலுக்குச் சட்டையோடு நிற்கும் மணமகனையும் ஒப்பனையுடன் கூடிய மணமகளையும் உறவினர்கள் உதிரி மலர்களைத் தூவி வாழ்த்துகின்றனர்.

"வேடப்பனை நான் விரும்பியதுண்டு

வாழ்வின் துணை என்று சூழ்ந்தேன்"[44]

என நகைமுத்துவும்,

"மின் நகை முத்தை விரும்பியதுண்டு

வாழ்வின் துணையாய்ச் சூழ்ந்தேன்"[45]

என்று வேடப்பனும் கூற மலர்மாலையை மாற்றிக் கொள்கின்றனர். திருமணம்முடிந்தவுடன் பெற்றோருக்கும் சுற்றத்தாருக்கும் நன்றி கூறி விட்டு விருந்து வைத்து சுற்றத்தாரை வழியனுப்புகின்றனர்.

இம்முறையை தமிழர் அனைவரும் பின்பற்ற வேண்டும் என்று விரும்பும் ஆசிரியர்,

"பண்டை மணமென்றும் பார்ப்பானைக் கொண்ட

அடிமை மணமென்றும் சொல்லும் அனைத்தும்

கடிந்து பதிவு மணம் காணல் கடனாகும்."[46]

என்று அறிவுறுத்துகிறார்.

**விவாகரத்து மறுமணம்**

கணவன் மனைவியாக வாழும் ஆணும் பெண்ணும் வெவ்வேறு சூழ்நிலையில் வளர்ந்தவர்கள். இருவேறு சிந்தனையை வாழ்க்கை முறையை உடையவர்கள். இவ்விருவரும் இணைந்து ஒரே வீட்டில் வாழும் போது பல கருத்து வேறுபாடுகளும்

முரண்பாடுகளும் தோன்றுவது இயல்பான செயலே ஆகும். இதுவரை தான் வளர்த்தெடுக்கப்பட்ட முன்னேற்றப் பாதையில் இருந்து மாறி இருவருக்கும் மகிழ்ச்சி தரக் வடிய ஒரே பாதையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் போது பல்வேறு நிலைகளில் முரண்பாடுகள் எழுகின்றன. இம்முரண்பாடுகளை மீற அன்பு இருவரிடையேயும் இருக்கும் போது இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு ஒன்றாக வாழ்கின்றனர். ஆனால் அன்பற்ற நிலையில் முரண்பாடுகள் மட்டும் இருவர் உள்ளத்திலும் நிரம்பி இருக்கும் போது அவ்விருவரும் ஒன்றாக வாழ்தல் என்பது தாங்க முடியாத சுமையாக வாழ்க்கையை நடத்திச் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது.

அவர்கள் இருவரும் வாழ்நாள் முழுவதும் அமைதியற்ற நிலையில் மன உளைச்சலுடன் துன்புற்று வாழ்கின்றனர். இதனால் அவர்களுடைய குழந்தைகளும் சமூகமும் பாதிப்படைகின்றது.

நடைமுறைப் பெண் வன்முறை தாக்குதலுக்கு உட்படும் போது, சமூக மதிப்பீட்டிற்கு அஞ்சி கணவனுடன் வாழ வேண்டும் என்று பெற்றோர்கள் வற்புறுத்துகின்றனர். மனைவி கணவனால் விரட்டி அடிக்கப்பட்டும், கணவனது வீட்டிற்கு வருகிறாள். ஒவ்வொரு முறையும் பெண்ணுக்கு அறிவுரை கூறி, பணமும், நகையும் கொடுத்து அனுப்பி வைக்கின்றனர். கணவனால் கொலை செய்யப்பட்ட பெண் இறந்து போகும் வரை இச்செயல்கள் தொடர்ந்து நிகழ்கின்றன என்ற கருத்தை ஆசிரியர் இங்கு சுட்டிக் காட்டுகிறார்.

விவாகரத்து செய்தவன் மூலமும், அதைத் தொடர்ந்து மறுவாழ்க்கையை அமைத்துக் கொள்தவன் மூலமும் குடும்பம் என்ற அமைப்பு சிதைந்து விடும் என்று பலர்

அஞ்சுகின்றனர். அதுமட்டுமல்லாமல் விவாகரத்திற்குப் பிறகு இருவரும் புதிய சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்பதை யும் சுட்டிக் காட்டுகிறார். எனினும் இந்நிலையானது தவிர்க்க இயலாத சூழ்நிலையில் விதிவிலக்காக ஒரு சில இடங்களில் நிகழும். இந்நிகழ்வு குடும்ப அமைப்பைச் சிதைத்து விடாது என்பதையும், திருமணமாகிவிட்ட காரணத்தால் தான் செய்யும் கொடுமைகளைத் தாங்கியே தீரவேண்டும், என்று எண்ணிக் கொடுமை செய்பவர் அதிலிருந்து மீள தன் வாழ்க்கைக்கு ஒரு வழியுண்டு என்ற நிலை வரும் பொழுது தன் வாழ்க்கையை நிரந்தரமாக இழக்க நேரிடும் என்பதாலும், சமூகத்தின் முன் தான் செய்த குற்றம் வெளிப்பட்டு விடும் என்பதாலும் ஓரளவிற்காவது நன்னெறியில் நடக்க முயல்வர். அதனால் குடும்ப அமைப்பு பாதிக்கப்படுமே தவிர இம்முறையினால் குடும்ப அமைப்பு சிதைவுறாது. மேலும் விவாகரத்திற்குப் பிறகு வேறு துணையுடனோ அல்லது தன் குழந்தைகளுடன் தனியாகவோ வாழ முற்படும் போது புதிய குடும்பம் ஒன்று உருவாகி குடும்ப அமைப்பை – குடும்ப உறுப்பினர்களைக் காக்கிறது.

இதற்கு மாறாகக் கொலை செய்யப்படும் போதும், தற்கொலை செய்து கொண்டு இறந்து போகும் போதும் வன்முறை தாக்குதலுக்கு உட்பட்டு உடல் ஊனம் அடையும் போதும், தொடர்ந்து மன உளைச்சலுடன் வாழும் போதும் குடும்ப அமைப்பு சீர் குலைந்து போகிறது. அவர்தம் குழந்தைகளைக் காப்பாற்ற வழியில்லாமல் சமூகத்தில் அல்லலுற்று பிற்காலத்தில் சமூகத்திற்குத் தீங்கிழைக்கும் குற்றவாளிகளாக உருவெடுக்கின்றனர்.

மேற்கண்ட இவற்றை நன்கு உணர்ந்த ஆசியர் குடும்ப விளக்கினுள்,

"............ காதல்

உடையார் தம் வாழ்வில் உளம் வேறுபட்டால்

மடவார் பிறனை மணக்க விடவேண்டும்

ஆடவனும் வேறோர் அணங்கை மணக்கலாம்"[47]

என்று குறிப்பிடுகிறார். குடும்ப அமைப்பின் இன்றியமையாமையை நன்கு உணர்ந்தவர் பாரதிதாசன் என்றாலும் மானிடனின் வாழ்வியல் உரிமையைப் பாதுகாக்க விவாகரத்தும், மறுமணமும் தேவை என்று சிந்தித்து உணர்த்தியிருப்பது நோக்கத்தக்கதாகும்.

தான் திருமணம் செய்து கொண்ட வாழ்க்கைத் துணை சமூக நியதிகளுக்கு முரணான வகையில் செயல்படுவதை உணர்ந்து கொண்டவுடன் முதற்கட்டமாகக் குழந்தை உருவாவதை இயற்கை முறையிலோ அல்லது செயற்கை முறையிலோ தடை செய்யப்பட வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி,

1. குழந்தையின் நலன் கருதி இணைந்து வாழ வேண்டும் என்ற கட்டாயச் சூழல் தவிர்க்கப்படும்.

2. இருவரும் பிரிய நேரும் பொழுது குழந்தை யாரிடம் வளர்வது என்பது பற்றிய சிக்கலையும் குழந்தையைப் பிரிதல் என்ற சிக்கலையும் தவிர்க்க உதவும்.

3. பிரிந்தாலும் பிரியாமல் உடன் வாழ்ந்தாலும் தாய் தந்தையரின் முரண்பட்ட வாழ்க்கை குழந்தையை பாதிப்படையவே செய்கின்றன. எனவே சிக்கலுள்ள சூழ்நிலையில் குழந்தையைப் பெறாதிருத்தலே அனைவருக்கும் நன்மை பயப்பதாகும்.

4. குழந்தையின் பொருளாதாரத் தேவைகளை நிறைவேற்றுதல், எதிர்கால வாழ்க்கையை அமைத்துக் கொடுத்தல், முதலானவற்றில் தானும் குழந்தையும் அடையக் கூடிய சிக்கல்களை முன் கூட்டியே திட்டமிடுதலை தவிர்க்க முடியும்.

5. பிரிய வேண்டும் என்று முடிவு செய்யும் போது வேறு ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கும் தன் வாழ்க்கையுடனான தொடர்பை முற்றிலுமாகத் துண்டித்துக் கொள்வதற்கும் இம்முடிவு உதவுகின்றது.

தன் வாழ்க்கைக்குத் தீங்கிழைப்பவர்கள் குழந்தை பிறந்த பிறகு திருந்திவிடலாம் என்று கூறுவோர் உள்ளனர். ஆனால் மிகக் குறைவான சதவீதத்தினரே அங்ஙனம் திருந்தியுள்ளனர். இத்தகையவர்கள் குழந்தை பிறக்கும் போது கூடுதல் மன உளைச்சல் (குழப்பம்) அடைந்து முன்னிலும் அதிகமான அளவில் முரண்பாடாக நடந்து கொள்கின்றனர் என்பதை ஆசிரியர் சுட்டிக் காட்டுகிறார்.

**முடிவுரை**

இவ்வாறு காதல் வழி வந்த இல்லறம் வாழ்வு முழுவதும் இன்பமாய் இருப்பதைக் கண்டும், கேட்டும் படித்தும் அறிகின்றோம். அதே நேரத்தில் பெற்றோர் பார்த்து வைத்த திருமணங்கள் முழு இன்பமாய் இல்லாவிடினும் ஒரு கட்டுப்பாடு, வரம்பு, கற்பு, பெரியோர் கருத்தை மதித்து நடத்தல், அடக்கம் ஆகியன காரணமாகப் பிரியாத வாழ்க்கை, குடும்பத்தில் கணவனின் கொடுமையால் விவாகரத்து செய்யும் வாழ்க்கை, இன்ப துன்பங்கள் மூலம் வாழ்க்கை நடத்திச் செல்லுதல் போன்றவற்றை அறிகின்றோம்.

பாரதிதாசனைப் போன்ற சமூக சீர்திருத்தச் சான்றோர்களால் விளக்கம் பெற்ற கலப்பு மணம், விதவை மணம் ஆகியவற்றால் ஏற்படும் சமூக நலத்தின் முதன்மை கருதி

தமிழக அரசு சமுதாய இசையும், பாதுகாப்பும் அமையுமாறு சட்டம் இயற்றியுள்ளது. மேலும் கலப்பு மணம் விதவை மணம் ஏற்றுக் கொள்வோர்க்குப் பாராட்டும், பரிசும், வழங்கிச் சிறப்பித்தலும் சிந்தனையாளர் தம் கொள்கை குறித்த வெற்றியாகும்.

## அடிக்குறிப்புக்கள்

1. குறுந்தொகை, பா. ப. 374
2. பரிபாடல் பாட்டு ( ப. 11)
3. கலித்தொகை, பா.39
4. ஐங்குறு நூறு, பா.371
5. கலித்தொகை, பா.107
6. குடும்ப விளக்கு, விருந்தோம்பல் (ப. 50)
7. மேலது., திருமணம், ப. 84
8. மேலது., ப. 86
9. பாரதிதாசன் நூற்றாண்டு விழா மலர் ப. 344
10. குறள் எண். 1100
11. கம்பராமாணயம், பாலகாண்டம், மிதிலைக் காட்சிப்படலம், பா.35
12. தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல், 51
13. நற்றிணை, பாடல், 10
14. குடும்ப விளக்கு, முதியோர் காதல், ப. 135
15. மேலது., ப. 136
16. மேலது., ப. 121
17. மேலது., ப. 121
18. மேலது., ப. 122
19. மேலது., ப. 123

## அடிக்குறிப்புக்கள்

20. பாரதிதாசன் குடும்ப விளக்கு, முதியோர் காதல் ப.124

21. பாரதிதாசன் குடும்ப விளக்கு, முதியோர் காதல் ப.124

22. பாரதிதாசன் குடும்ப விளக்கு, முதியோர் காதல் ப.125

23. பாரதிதாசன் குடும்ப விளக்கு, விருந்தோம்பல் ப.44

24. பாரதிதாசன் கவிதைகள், ப.81

25. பாரதிதாசன் கவிதைகள், ப.82

26. பாரதிதாசன் கவிதைகள், ப.82

27. பாரதிதாசன் கவிதைகள், கைம்மைத் துயர் ப.120

28. பாரதிதாசன் கவிதைகள், கைம்மைக் கொடுமை ப.109

29. பாரதிதாசன் கவிதைகள், கைம்மைக் கொடுமை ப.109

30. பாரதிதாசன் கவிதைகள், ப.111

31. பாரதிதாசன் கவிதைகள், ப.111

32. பாரதிதாசன் கவிதைகள், ப.118

33. பாரதிதாசன் படைப்புகளில் மனிதநேயம், இரா. சக்குபாய், ப.243.

34. பாரதிதாசன் கவிதைகள், மூடத்திருமணம் ப.111

35. பாரதிதாசன் கவிதைகள், ப.111

36. பாரதிதாசன் கவிதைகள், ப.111

37. பாரதிதாசன் கவிதைகள், ப.115

38. பாரதிதாசன் கவிதைகள், ப.86 (தொகுதி 3)

39. சிந்தனையாளர் கழக வெளியீடு (1974,190) நற்றிணைப் பாடல் எண்.110.

40. பாரதிதாசன் கவிதைகள், ப.86 (தொகுதி 3)

41. அகநானூறு பா.221

42. தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல், நூற்பா எண்.4

43. கலித்தொகை, பா.107

44. பாரதிதாசன் குடும்பவிளக்கு, திருமணம் ப.81

45. பாரதிதாசன் குடும்பவிளக்கு, திருமணம் ப.81

46. பாரதிதாசன் குடும்பவிளக்கு, விருந்தோம்பல், ப.44

47. பாரதிதாசன் குடும்பவிளக்கு, விருந்தோம்பல், ப.44

# முடிவுரை

# முடிவுரை

தமிழர்களுக்கு ஒரு நல்ல குடும்பத்தைக் கருத்தியலாகக் புனைந்து காட்ட புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் குடும்ப விளக்கு என்னும் நூலைப் படைத்துள்ளார். இந்நூலினைப் படிக்கின்ற ஒவ்வொரு பெண்களும் குடும்ப விளக்குத் தலைவி போன்று செயல்பட வேண்டும். படிக்கின்றவர்களும், படித்து இன்புறுகின்றவர்களும் தாங்கள் படித்தக் கருத்துக்களைப், படிக்காத பாமர மக்களுக்கும் படித்துக்காட்டி இந்நூலின் சிறப்பினை எடுத்துக் கூறவேண்டும்.

குடும்ப விளக்குத் தலைவி தன் கணவனுக்காகவும், தன் குழந்தைகளுக்காகவும், மற்றும் மாமனார் மாமியாருக்காகவும், பம்பரம் போல சுழன்று அயராது வேலை செய்வது மட்டுமல்லாமல், நாட்டிற்கும், தான் செய்ய வேண்டிய கடமைகளையும் சரிவரச் செய்திருக்கிறாள். அதுபோன்று ஒவ்வொரு இல்லத்தரசிகளும் குடும்ப விளக்குத் தலைவியைப் போல் அயராது வீட்டிற்கும், நாட்டிற்கும் உழைத்திடல் வேண்டும் என்பதே பாரதிதாசனின் உயர்ந்த நோக்கமாகும்.

தனிமனிதப் பண்பாடு எவ்வளவுக்கெவ்வளவு உயர்கின்றதோ, அவ்வளவுக்கவ்வளவு வீடும் உயரும், வீட்டில் ஒற்றுமை நிலவும், கல்வி அறம் தழைக்கும். அதுபோல ஒரு குடும்பம் சிறப்புற்று விளங்க வேண்டுமானால் அக்குடும்பத்தின் தலைவி பண்பாடு மிக்கவளாகவும், கல்வித் திறமை வாய்ந்தவளாகவும் மட்டுமன்றி, செயல்திறன் பெற்றவளாகவும் இருத்தல் வேண்டும். இதன் மூலம் பெண்களுக்கு பண்பாடு, கல்வி, மற்றும் செயல்திறன் போன்றவை மிகவும் இன்றியமையாதது என்பதைப் பாரதிதாசன் மிக அற்புதமாக எடுத்துக் கூறியுள்ளார்.

பெண்களுக்கு கல்வித்துறை, தொழிற்துறை போன்றவற்றில் பயிற்சியும், வாய்ப்பும் அளிக்கப்படுகின்றன என்பதை குடும்ப விளக்கு நூலில் எடுத்துக் காட்டியுள்ளார் பாரதிதாசன். பெண்களுக்கு பெற்றோரின் சொத்தில் சமஉரிமை வழங்குதல், சுயமாக சிந்திக்கும் தன்மையும், ஆற்றலும் உடையவர்களாக பெண்களை உருவாக்குதல் போன்ற முயற்சிகளில் பெற்றோர்கள் ஆர்வம் கொள்கின்றனர். மக்கள் அனைவருக்கும் கல்வி அறிவும், வேலைவாய்ப்பும் அளிக்கப்பட வேண்டும். பெண்கள் தாங்கள் சட்டத்துறையையும், நீதித் துறையையும் நாடித் தங்களுக்குள்ள உரிமைகளை

பெற வழிவகை செய்தல் போன்றவை குடும்பவிளக்கு நூலில் இடம் பெறுவதைக் காணலாம். வாழ்வில் ஆண்களுக்கு நிகரான சமவாய்ப்புகளை பெண்களும் பெற்றிருக்க வேண்டும்.

பெண்கள் குடும்ப அமைப்பில் வழிவழி மரபாகக் கடைபிடித்து வரும் குடும்பப் பொறுப்புக்களைப் பேணிக் காக்கும் வகையில் குடும்பத்திலும், சமுதாயத்திலும், தகுந்த சிறப்பும், நல்லாதரவும் அவர்களுக்குக் கிடைத்திட வேண்டும்.

திருமணம் என்ற அடிப்படையில் ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் விரும்பும் போது, அவர்களின் விருப்பத்தினை பெற்றோர்கள் ஏற்றுத் திருமணம் செய்து வைக்க வேண்டும். ஒவ்வொரு பெற்றோர்களும் தம் மகளின் (தம் மகனின்) காதலை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று ஆசிரியர் இந்நூலின் வழி அறிவுறுத்துகின்றார்.

கணவன், மனைவி ஆகிய இருவரிடையே முரண்பாடு அதிகரித்து பிரிந்து வாழவேண்டும் என்று விரும்பும் போது, அதனைச் சமூகம் ஏற்றுக் கொள்ளுதல், அந்நிலையில் ஆணும் பெண்ணும் வேறு வேறு திருமண உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள அனுமதி அளித்தல் போன்றவை இக்கட்டுரையின் மூலம் நன்கு அறியலாம்.

**“எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்கு**

**குடும்ப விளக்கே விளக்கு”**

என்னும் கூற்றிற்கேற்ப ஒவ்வொருவரும் குடும்ப விளக்கு நூலினைப் படித்து இன்புற்று தான் மகிழ்வதோடு மட்டுமல்லாமல் மற்றவர்களையும் இன்ப வெள்ளத்தில் மூழ்கிடச் செய்வதே பாவேந்தர் பாரதிதாசனின் குடும்ப விளக்குக் காவியமாகும்.

# துணை நூற்பட்டியல்

# துணை நூற்பட்டியல்


1. அறிவொளி.அ., பாரதிதாசன் தனித்தன்மை
மணிவாசகர் பதிப்பகம்,
சென்னை.
முதல் பதிப்பு, டிசம்பர், 1990

2. அண்ணாதுரை.மா., பாரதிதாசன் இதழ்ப்பணிகள்
பூங்கொடி வெளியீடு,
ஈரோடு – 638 009.
ஆகஸ்டு, 1986

3. இராமரத்தினம்.அ., (நூற்றாண்டு விழா மலர்) 1991
பாரதிதாசன் கதைப் பாடல்கள்
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி.

4. இளங்கோ.சா.சு., பாரதிதாசன் இலக்கியம்
பூம்புகார் பிரசுரம்
சென்னை – 13.
முதற்பதிப்பு, ஏப்ரல் 1978.

5. சரளா ராசகோபாலன் பாரதிதாசனின் இலக்கியப் பெண்கள்
ஒளிப்பதிப்பகம்
சென்னை – 600 018.
முதற்பதிப்பு, டிசம்பர் – 1990

6. சக்குபாய்.இரா., பாரதிதாசன் படைப்புகளில் மனிதநேயம்
மனிதம் பதிப்பகம்
திருச்சி – 620 021.
முதற்பதிப்பு, டிசம்பர் - 1990

7. சிற்பி பாலசுப்பரமணியம் பாரதி – பாரதிதாசன் படைப்புக்கலை
பாரதியார் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் – 46.
முதற்பதிப்பு, செப்டம்பர் – 1992.

8. கனகசபாபதி.சி., பாரதி – பாரதிதாசன் கவிதை மதிப்பீடு
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை – 600 098.
முதற்பதிப்பு, நவம்பர் 1979.

9. கோவிந்தசாமி .மு., பாரதிதாசன் கவித்திறன்
பாரி நிலையம்,
184, பிராட்வே,
சென்னை – 600 001.
முதற் பதிப்பு, ஆகஸ்டு, 1967

10. செயராணி — **பாவேந்தர் படைப்புகளில் பெண் விடுதலை**
(நூற்றாண்டு விழா மலர்) 1991
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி.

11. புலவர் நக்கீரன் — **பாவேந்தரின் பரந்தநோக்கு**
ஸ்ரீ.எஸ்.எஸ்.பிரிண்ட ஹவுஸ்,
சென்னை.
முதற் பதிப்பு – செப்டம்பர் 1991

12. நளினிதேவி — **பாரதிராசன் பாடல்கள் ஒரு சமுதாயவியல் அணுகுமுறை**
(நூற்றாண்டு விழா மலர்) 1991
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி.

13. பாரதிதாசன் — **குடும்ப விளக்கு முதல், இரண்டாம் பகுதி,**
பாரி நிலையம்,
184, பிராட்வே,
சென்னை, 600 108.
இரண்டாம் பதிப்பு, மே, 1960

14. பாரதிதாசன் — **குடும்ப விளக்கு**
3,4, 5 ஆம் பகுதி,
பாரி நிலையம்,
184, பிராட்வே,
சென்னை, 600 108.
இரண்டாம் பதிப்பு, ஆகஸ்டு, 1973

15. பாரதிதாசன் — **பாண்டியன் பரிசு**
ஸ்ரீ இந்து பப்பிளிகேஷன்ஸ்,
சென்னை – 600 017.
முதற்பதிப்பு, டிசம்பர் – 1991

16. பாரதிதாசன் — **கண்ணகி புரட்சிக் காப்பியம்**
மணிவாசகர் பதிப்பகம்
சென்னை – 600 001.
முதற்பதிப்பு, 11, டிசம்பர், 1991

17. பாரதிதாசன் — **நாள் மலர்கள்**
பூம்புகார் பிரசரம்,
சென்னை – 600 013.
முதற்பதிப்பு, ஏப்ரல் – 1978.

18. பாரதிதாசன் — **பாரதிதாசன் கவிதைகள்**
பூம்புகார் பிரசுரம்,
சென்னை – 600 108.
முதற்பதிப்பு, மே. 1992

19. பாரதிதாசன்
தேனருவி
பூம்புகார் பிரசுரம்,
சென்னை – 600 013.
மார்ச், 1997

20. பாரதிதாசன்
பாரதிதாசன் கவிதைகள் இரண்டாம் தொகுதி
பாரி நிலையம்,
சென்னை. பன்னிரண்டாம் பதிப்பு, 1987
பதின்மூன்றாம் பதிப்பு, 1990

21. பாரதிதாசன்
ஒரு தாயின் உள்ளம் மகிழ்கிறது
பூம்புகார் பிரசுரம்
சென்னை.
முதற்பதிப்பு, ஏப்ரல், 1978

22. பாரதிதாசன்
இசையமுது
பாரி நிலையம்,
சென்னை – 1
முதற்பதிப்பு, டிசம்பர், 1952

23. பாரதிதாசன்
குடும்ப விளக்கு – ஓர் ஆய்வு
மணிவாசகர் பதிப்பகம்,
சென்னை – 600 108.
முதல்பதிப்பு, 1993

24. பாரதிதாசன்
பாரதிதாசன் கவிதைகள் தொகுதி – 3
பாரி நிலையம்
சென்னை.
ஆறாம் பதிப்பு, 1975

25. பாரதிதாசன்
பாரதிதாசன் கவிதைகள்
செந்தமிழ் நிலையம், சென்னை
இருபத்திநான்காம் பதிப்பு, 1980

26. மன்னர் மன்னன் முல்லை முத்தையா
பாரதிதாசன் நறுமலர்க் கொத்து
நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்,
சென்னை – 600 098.
முதற்பதிப்பு, மே, 1986

27. பொன்னீலன்
பாரதிதாசன் கவிதை உலகம்
அறிவுப் பதிப்பகம்,
சென்னை.
முதற்பதிப்பு, ஜூலை, 2001

28. வெண்ணிலா.மா., குடும்ப விளக்கு – ஒரு பார்வை
புலமை
பகுதி – 2
டிசம்பர், 1999

29. வெள்ளைவாரணார்.க., தமிழ் இலக்கிய வரலாறு
மணிவாசகர் பதிப்பகம்
சென்னை.
முதற்பதிப்பு, 1972